# திருக்குறள் கதைகள்
# பொருட்பால்
# 881 – 930

தமிழறிஞர்
கே.வி.குணசேகரம்

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | திருக்குறள் கதைகள் (881 – 930) |
| நூலாசிரியர் | :- | தமிழறிஞர் கே.வி.குணசேகரம் |
| பதிப்பாண்டு | :- | 2010 |
| மொத்தப் பக்கங்கள் | :- | |
| விநியோகம் | :- | லங்கா புத்தகசாலை<br>கு.டு 1.14, டயஸ் பிளேஸ்<br>குணசிங்கபுர,<br>கொழும்பு – 12 |
| தொ.பேசி | :- | 011-2341942 |
| விலை | :- | |

# என்னுரை

திருக்குறள் கதைகள் பொருட்பால் 881 - 930 வரையான 50 குறள்களுக்கான கதைகள் இந்நூலில் உள்ளன. இது வரை 930 குறள்களுக்கான கதைகள் வெளிவந்துவிட்டன. 1330 குறள்களுக்கும் இதுவரை யாரும் தொடர்கதை எழுதவில்லை. ஒரு நாவலாக இதை நான் எழுதிய போதும் தனித்தனியாகவும் வாசிக்கலாம். ஒவ்வொரு குறளுக்கும் பொருள், விளக்கம், கதை எழுதியுள்ளேன். இப்படியும் இதுவரை யாரும் எழுதவில்லை. குறளுக்கு உரையே எழுதியுள்ளனர். நான் குறளுக்குக் கதை எழுதியதால் குறளை யாபேரும் விளங்கிக் கொண்டனர்.

எழுத வாசிக்கத் தெரிந்த ஒருவர் குறளின் அர்த்தத்தையும் கருத்தையும் புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தே கதைகளாக எழுதினேன். எனது எண்ணம் பெருவெற்றி பெற்றது. தரம் ஐந்தில் கற்கும் பத்து வயது மாணவி எனது குறள் கதைகளை வாசித்துவிட்டு வகுப்பில் தன்னுடன் படிக்கும் மாணவர்களுக்கு அக்கதையை விளக்கமாகக் கூறியதை நான் நேரில் கண்டேன். இது எனக்குக் கிடைத்த வெற்றி மட்டுமல்ல குறளுக்குக் கிடைத்த வெற்றியுமாகும். குறளை மனனம் செய்வதாலோ, அதன் கருத்தைக் கூறுவதாலோ பயனில்லை. அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளல் வேண்டும். அந்தப் புரிந்துணர்வை எனது குறள் கதைகள் நிறைவேற்றியுள்ளன.

இந்த வகையில் இந்து தத்துவ நூல்கள் பலவற்றைக் கதைகளாக்கி வருகிறேன். அவற்றைச் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை விருப்புடன் வாசித்து வருகிறார்கள். இந்த வகையில் திருவருட்பயனையும், சிவஞானபோதத்தையும் தற்பொழுது கதைகளாக எழுதியுள்ளோன். இக்கதைகள் இந்து தத்தவத்தை மக்களுக்குப் புரிய வைக்கும் என்று நினைக்கிறேன். நான் படிக்கும் போது என்னால் புரிந்துகொள்ள முடியாதவற்றை இந்து தத்துவ நூல்களைத் திரும்பத்திரும்பப் படித்துப் புரிந்து கொண்டேன். அவற்றை இந்துக்கள் எல்லோரும் புரிந்து அதன்படி நடக்க வேண்டுமென்பதே எனது விருப்பம். இக்கதைகளிலுள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையேயாகும். யாரையும் குறிப்பிடுவனவல்ல.

நான் எழுதும் நூல்களில் உள்ள எழுத்துப் பிழைகளை நீக்கிச் சீர்செய்து தரும் ஓய்வுபெற்ற அதிபர்களான திரு வா. ஜெயரட்ணம், திரு. தி.கிருஷ்ணகுமார் அவர்களுக்கும், எழுத்துப் பிழைகளை நீக்கித் தருவதோடு, தகுந்த ஆலோசனைகளை வழங்கி என்னை உற்சாகப்படுத்தும் ஆசிரியை செல்வி ப.இறைமகளுக்கும், எனது கதைகளை அழகாக கணனி மயப்படுத்தித்தரும் செல்வி. க.தேனமிர்தம் அவர்களுக்கும், இந்நூலை வெளியிடும் கொழும்பு 12இல் அமைந்துள்ள லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

அன்புடன்

**கே. வி. குணசேகரம்**

ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம். கோப்பாய் மத்தி, கோப்பாய்.

# அணிந்துரை

நூல்கள் எதற்காக எழுதப்படுகின்றன? கற்றவர்களுக்காகவா? அல்லது கற்பதற்காகவா….? கற்பதற்காகவென்றால் தற்பொழுது சமயம், இலக்கியம், கல்வி சார்பாக எழுதப்படுகின்ற நூல்களில் பெரும்பாலனவற்றைப் பலமுறை வாசித்தும் புரிந்துகொள்ள முடியாத நிலையே உள்ளது. திருக்குறள், பகவத்கீதை, சிவஞானபோதம், திருவருட்பயன் போன்ற இந்து தத்துவ நூல்களைப் பற்றி பண்டிதர்கள் முதல் பேராசிரியர்கள் வரை எழுதிக்கொண்டே இருக்கிறார்கள். இவற்றிலுள்ள கடினமான தன்மை பாமர மக்களை அந்நூல்களின் பக்கம் செல்ல விடாது தடுத்துக் கொண்டே இருக்கிறது. மேற்குறிப்பிட்ட தன்மையிலிருந்து விலகி பத்துப் வயதுப் பாலகன் கூட விரும்பிப் படிக்கும்படி தத்துவங்களைக் கதைகளாக்கித் தந்திருக்கிறார் திரு.கே.வி. குணசேகரம். அவரை வாழ்த்துவதில் 2006இன் பின் ஓய்வு பெற்ற நல்லூர்க்கோட்ட அதிபர்களாகிய நாம் மிக்கப் பெருமையடைகிறோம்.

ஒப்பரும் சேவை செய்து ஓங்கிய நல்லறிஞனாகி

இப்படி உயர்ச்சி பெற்ற இனியவனைக் கண்டோம்.

செப்பரும் ஒழுக்கம் நேர்மை செயற்கரிய கல்வி ஞானம்

தப்பில்லாத் தமிழில் ஆர்வம் தளர்வில்லா மனிதப் பண்பு

எப்போதும் சேவை செய்யும் அப்பெரும் அப்பனே!

வாழ்க வாழ்க வளமுடனே.

ஓய்வென்று அலுத்துடல் சோராமல்
மடமடவென்று எழுதி எம்மண்ணுக்களித்து
தடல்புடலாய் கல்விச் சேவைதனை
தமிழர் வாழ்வு சிறக்கச் செய்து
உலகெங்கும் பரந்து வாழும்
தமிழர் தம் வாழ்வு சிறக்க
தமிழ்த்தொண்டு செய்யும்
தமிழறிஞனே வளமுடன் வாழ்ந்து
வளம்பெறச் செய் தமிழை.

## 2006ஆம் ஆண்டின் பின் ஓய்வு பெற்ற நல்லூர்க்கோட்ட அதிபர்கள்.

திரு. இ.சிவபாதசேகரம்.
திரு. சி. சோமேஸ்வரபிள்ளை.
திரு. பொ. கமலநாதன்.
திரு. பொ. நடராசா.
திரு. தி. கிருஷ்ணகுமார்.
திரு. ஆ. இரத்தினசிங்கம்
திரு. பொ. பத்மநாதன்.
திரு. வா. ஜெயரட்ணம்.
திருமதி. சி. விஸ்வலிங்கம்.
திருமதி. மா. வேதநாதன்.

## தீயவையாகும்

ஜெயபாலன் புஷ்பநாதனின் வீட்டுக்குச் சென்றான். இலட்சுமியோடு தான் முன்பு தொடர்பு கொண்டிருந்ததைக் கிருஷ்னன் அவனுக்குச் சொல்லி விடுவான் என்ற பயத்தின் காரணமாகப் புஷ்பநாதனுடன் கலகலப்பாகப் பழகப் பயந்த ஜெயபாலன் அவனைச் சந்திப்பதைத் தவிர்த்து வந்தான். அதனால் ஜெயபாலன் தன்னுடன் ஏதோ ஒரு காரணத்துக்காகத் தன்னை விலக்கி வைத்துள்ளான் என்று நினைத்து ஜெயபாலனது நட்பை புஷ்பநாதன் துண்டித்து விட்டான். புஷ்பநாதன் ஜெயபாலனது நட்பைத் துண்டித்ததால் நவராசாவும் ஜெயபாலனது உறவைத் துண்டித்தான்.

தான் இலக்கியப் பேரவையில் சேரவும் தான் கஷ்டப்பட்ட போதும் அவமானப் பட்ட போதும் பல்வேறு உதவிகள் புரிந்த புஷ்பநாதனும் நவராசாவும் தன்னுடன் உறவில்லாமல் இருப்பது ஜெயபாலனுக்குக் கவலையைக் கொடுத்தது.

புஷ்பநாதனது வீட்டில் புஷ்பநாதன் இருக்கவில்லை. இலட்சுமிதான் இருந்தாள். யாரோ அழைக்கும் சத்தம் கேட்டு வெளியே வந்த இலட்சுமி வாசலில் மிடுக்குடன் நின்ற

ஜெயபாலனைக் கண்டதும் திகைத்துப் போனாள். எனினும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு சொன்னாள்; “அவர் இல்லை. உள்ளே வாருங்கள்”

“பிறகு நான் வாறன்…” தடுமாறினான் ஜெயபாலன்.

“உள்ளுக்கு வாங்கோ…” என்றாள் இலட்சுமி. அவளின் குரலில் ஒரு மந்திர சக்தியிருந்து அவனைக் கவர்ந்தது.

உள்ளே சென்று நாற்காலி ஒன்றில் அமர்ந்தான் ஜெயபாலன்; “உங்களது புத்தி ஒருபோதும் மாறாது. முன்பு இருந்ததைப் போலவே இப்பவும் இருக்கிறீர்கள். நான் உங்களை எவ்வளவு நம்பியிருந்தேன். எனக்குச் செய்த துரோகத்தைச் சற்று நினைத்துப் பாருங்கள். எனது சகோதரன் உங்களைத் தனது நண்பனென நம்பி வீட்டுக்கு அழைத்து வந்தான். நீங்கள் எனக்கு ஏமாற்று வார்த்தைகள் சொல்லி என்னை ஏமாற்றி உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்து விட்டுச் சென்று விட்டீர்கள். அது போலத்தான் இப்பவும் நடந்து கொள்கிறீர்கள். எனது கணவர் உங்கள் மீது எவ்வளவு பாசம் வைத்திருந்தாரென்று உங்களுக்குத் தெரியாது. அவர் அதைச் சொல்லிக் கவலைப்படும் போது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. உன்னைப் போன்ற ஒரு துரோகியோடு பழகுவதை விட நாகபாம்புடன் பழகலாம். அதனால் தான் நான் அவரை உனது வீட்டுக்குப் போக வேண்டாம் என்று சொன்னேன். தனக்குத் தேவையான போது நட்புப் பூண்டு, பயனில்லாத போது நீங்கிவீடும் கொடியவர்களின் நட்பு

வளர்வதை விடத் தேய்வதே நல்லது,'' என்றாள் இலட்சுமி.

ஜெயபானுக்கு வியர்த்துக் கொட்டியது. அவனால் பேசமுடியவில்லை. ''நீ நல்ல மனிதன்; நல்ல நண்பன் என்று நினைத்து அவரும் நவராசாவும் உனக்காக எவ்வளவு கஷ்டப்பட்டனர். நீ தீயவன்; ஒழுக்கமில்லாதவன்; குடிகாரன் என்று ஊரவர் உன்னை வெறுத்த போதும் எனது கணவர் உன்னை வெறுக்கவில்லை. அவர் உனக்காக ஊரவர்களிடம் ஏச்சு வாங்கினார். கெட்டவன் என்ற பட்டத்தைப் பெற்றார்'' இலட்சுமி கோபத்துடன் பேசிக் கொண்டிருக்கும் போது ஜெயபாலன் குறுக்கிட்டான்; ''புஷ்பநாதன் செய்த உதவிகளை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். அவனுடன் நல்ல முறையில் பழக எனக்குப் பயமாக இருந்தது'' என்று ஜெயபாலன் சொல்லிக் கொண்டிருக்கும் போது இலட்சுமி ஆத்திரத்துடன் குறுக்கிட்டாள்; ''உனக்குப் பயமா...? இதை நீ வேறு யாராவது ஒருவருக்குச் சொல்லியிருந்தால் அவர்கள் நம்பியிருப்பார்கள். எனக்கா சொல்கிறாய்?. நீ கிருஷ்னனுடன் நல்ல முறையில் பழகி விட்டு அவனை ஆள்வைத்து அடிப்பித்த நீ... அதே போல எனது கணவருக்கும் நவராசாவுக்கும் செய்ய மாட்டாய் என்று எப்படி நம்புவது? யாரோ சம்பள ஆட்களை வைத்து நீ கிருஷ்னனைத் தாக்கிவிட்டு எனது கணவரும் நவராசாவும் கஜேந்திரனும் தான் கிருஷ்னனுக்கு அடித்தவர்கள் என்று ஊரில் கதைகட்டி விட்டுள்ளாய். இது உனக்கு நியாயமாகத் தோன்றுகிறதா? உன்னை நம்பி தன் உயிரைக் கூடத் தரத் தயாராக இருந்த எனது கணவனுக்கு நீ செய்த கைம்மாறு போதும். இனிமேல் அவரைத் தேடி இங்கே வராதே. இன்பம்

தரும் நிழலும் நீரும் நோய் தருமானால் அது தீயனவே ஆகும். அதை விலக்க வேண்டும். அது போலச் சுற்றத்தவர்களின் செயல்களும் தீமையைத் தருமானால் சுற்றத்தவரின் உறவைத் துண்டித்தல் வேண்டும். இல்லாவிட்டால் வாழ்நாள் முழுவதும் அதனால் கேடுதான் உண்டாகும். தயவு செய்து இனிமேல் எமது வீட்டுக்கு வராதே'' என்றாள் இலட்சுமி. கோபத்தால் அவளது முகம் சிவந்து உதடுகள் துடித்தன.

**881. நிழல்நீரும் இன்னாத இன்னா; தமர்நீரும்<br>இன்னாஆம் இன்னா செயின்.**

குளிர்மையான நிழலும் நீரும் நோய் தருமானால் அவை தீயவையே ஆகும். அது போலச் சுற்றத்தவரின் தன்மைகளும் துன்பந் தருமானால் அவையும் தீயவையே ஆகும்.

## அஞ்ச வேண்டியவர்

''இலட்சுமி, நான் உனக்குச் செய்தது துரோகம் தான். அதனால் தான் நான் பயப்படுகிறேன். தற்செயலாக நமது பழைய உறவு புஷ்பநாதனுக்குத் தெரிய வந்தால் நல்ல நண்பனான அவன் எவ்வளவு துன்பப்படுவான். அத்துடன் உனக்கும் பல தீமைகள் உண்டாகும். அதனால் தான் நான் புஷ்பநாதனின் நட்பை மிகவும் வருத்தத்துடன் துண்டித்தேன். அவனது நட்பைத் துண்டித்தமையால் நான் படும் வேதனையைப் பற்றி உனக்குத் தெரியாது. இப்போது நான் அந்த

வருத்தத்தைத் தாங்க முடியாததால் தான் வந்தேன்’’ என்றான் ஜெயபாலன்.

‘‘நீ, உன்னைப்பற்றி எனக்குச் சொல்கிறாயா…? உனது ஏமாற்று வார்த்தைகளை நம்பி நான்பட்ட துன்பம் எவ்வளவென்பதை உன்னால் நினைத்துப் பார்க்க முடியுமா…? நீ ஏன் இப்போது ஊருக்கு வந்தாய்? மறைந்திருந்து தினமும் என்னைக் கொன்ற உணர்வுகள் இன்று மீண்டும் வெளிப்பட்டுக் கொல்கிறது. அதனால் நான் அனலில் விழுந்த புழுவாகத் துடிக்கிறேன். மிகவும் நல்வாரன எனது கணவரைக் காணும் போதெல்லாம் எனது உடல் வேதனையால் துடிக்கிறது. இப்பொழுதும் நீ வஞ்சக எண்ணத்துடன் தான் நடந்து கொள்கிறாய்’’ என்றாள் இலட்சுமி.

‘‘நான் இளைஞனாக வாழும் போது கெட்டவன்தான். ஒத்துக் கொள்கிறேன். ஆனால் இப்போது திருந்திவிட்டேன். என்னால் புஷ்பநாதனுக்கு எந்தக் கேடும் வராது’’ என்றான் ஜெயபாலன்.

‘‘உன்னோடு பல காலம் பழகிய எனக்கா நீ கதை சொல்கிறாய். முன்பு நான் கன்னியாக இருக்கும் போது எனக்குப் பேசி வந்த திருமணங்களையெல்லாம் குழப்பினாய். நான் உன்னுடன் எந்தத் தொடர்பும் இல்லாதிருந்த போது ஊரில் உள்ள இளைஞர்களுக்கு நான் உன்னைக் காதலிப்பதாகக் கூறினாய். அதற்கு ஆதாரமாக எனது புகைப்படமொன்றை எனது வீட்டிலிருந்து திருடிச் சென்று இளைஞர்களுக்குக் காட்டி விட்டுப் பின் அதை உரிய இடத்தில் கொண்டு வந்து

வைத்தாய். இவற்றையெல்லாம் நான் உன்னைக் காதலிக்கும் போது அறிந்து கொள்ளவில்லை. ஒருநாள் வீட்டில் யாருமில்லாத நேரம் வந்த நீ என்ன சொன்னாய்; “இலட்சுமி, நீதான் எனது உயிர். உன்னைத் திருமணம் செய்யாவிட்டால் நான் தற்கொலை செய்துவிடுவேன்” என்றாய். அதனால் தான் உன்மீது எனக்கு இரக்கம் பிறந்தது. பின் நீ வெளிநாட்டுக்குப் போனதும் நான் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது என்ன சொன்னாய்; “இலட்சுமி எல்லாவற்றையும் கெட்ட கனவாக நினை. நான் இங்கு ஒரு பெண்ணைத் திருமணஞ் செய்து விட்டேன். இனிமேல் என்னுடன் தொடர்பு கொள்ளாதே” என்றாய். அப்பபடிப்பட்ட உன்னை நான் நம்புவேனனா..? இன்னும் இன்னும் உன்னை நம்பி மோசம் போவேன் என்று நீ நினைக்கிறாயா…? எனது கணவனையும் நவராசாவையும் ஏதோ ஒரு காரணத்திற்காகப் பழிவாங்க நீ நினைக்கிறாய். அவர்கள் இருவரும் உன்னைச் சிறந்த நண்பனாகக் கருதித் தமது உயிரையும் கொடுக்கச் சித்தமாக இருந்தனர். ஆனால் நான் தான் இருவருக்கும் புத்திமதிகள் கூறி உன்னைச் சந்திக்காது செய்துள்ளேன். நீ செய்யும் கொடுமைகளுக்குத் தண்டனைகளை விரைவில் அனுபவிப்பாய்” என்றாள்.

ஜெயபாலன் அவளைப் பார்த்தான். அவள் கோபத்துடன் நின்ற கோலத்தைப் பார்த்தால் தன்னைப் பழிவாங்குவாள் போலத் தெரிந்தது; “நான் வாறன். புஷ்பநாதனுக்கு நான் வந்ததாகச் சொல்” என்று கூறிவிட்டு நடந்தான்.

‘‘ஜெயபாலன்’’ மெல்ல அழைத்தாள் இலட்சுமி.

சென்ற ஜெயபாலன் அந்த இடத்திலே நின்று திரும்பிப் பார்த்தான்; ‘‘கிருஷ்னனுக்கு ஆள்வைத்து அடிப்பித்தவுடன் அவன் பயந்து செயலற்றுப் போய் விட்டான் என்று நினைக்காதே. கிருஷ்னன் நல்லவன். கடைசிவரையும் அவன் என்னைப் பற்றித் தவறாகக் கதைக்க மாட்டான். அவனை இயக்கியது நான்தான். அவன் ஆரம்பத்தில் உன்னைப் பற்றித் தவறாகப் பேசப் பயப்பட்டான். நான் தான் அவனுக்கு உற்சாகமூட்டி உருத்திரமூர்த்தி இலக்கியப் பேரவையில் பேசும் போது உன்னைப் பற்றிக் கேவலமாக ஏசச் சொன்னேன். கவனமாக இரு’’ என்றாள்

ஜெயபாலனுக்குப் பயமாக இருந்தது. இலட்சுமி பிடிவாதக்காரி. அத்துடன் புஷ்பநாதனைக் கைக்குள் வைத்திருக்கிறாள். அவளைப் பற்றி யாரும் தவறாகச் சொன்னாலும் புஷ்பநாதன் நம்பமாட்டான்; ‘‘வாளைப் போல வெளிப்படையான பகைவர்களுக்கு அஞ்ச வேண்டியதில்லை; ஆனால் உறவினர்களைப் போல இருந்து உட்பகை கொண்டவர்களின் தொடர்புகளுக்கு அஞ்ச வேண்டும்’’ என்று கதிரேசன் சொன்னது அவனது செவிகளில் ஒலித்தது.

---

**882. வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக**
**கேள்போல் பகைவர் தொடர்பு.**

---

வாளைப் போல வெளிப்படையாகத் தெரியும் பகைவர்களுக்கு அஞ்சவேண்டிய தில்லை. ஆனால்

உறவினரைப் போல் உடனிருந்து உட்பகை கொள்பவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.

## அறுக்கும் கருவி

வீட்டுக்கு வந்த ஜெயபாலனுக்குத் தலை சுற்றியது. இலட்சுமி பிடிவாதக்காரி. நினைத்ததைச் செய்யக் கூடியவள். அவன் வெளிநாட்டிற்குச் சென்ற பின்பு அவளுடைய தொடர்பை முற்றாக அறுத்து விட்டான். அவன் எந்த நாட்டிற்குச் சென்றான் என்று கூட ஊரவருக்குத் தெரியாது. ஊரில் உள்ள எவருக்கும் அவன் கடிதம் போடவில்லை. போட்டால் அதன் மூலம் தனக்குப் பல பிரச்சினைகள் வரும் எனப் பயந்தான். வெளிநாட்டுக்கு அவன் வந்து இரண்டு வருடங்களாகி விட்டன. அவன் இலட்சுமியை மறந்து விட்டான். அப்படி இருக்கும் நாளில் ஒருநாள் அவனது கைத்தொலைபேசி அலறியது. ஜெயபாலன்; "யார்?" என்று கேட்டான். அவனுடன் தொடர்பு கொண்ட பெண்குரல் உடனே தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளவில்லை. "யார் ஜெயபாலா..?" என்றது

"ஓம்… ஓம் நீங்கள் யார்?"

"நானா….? உங்களுக்கு மிகவும் வேண்டியவள்"

ஜெயபாலன் பெண்கள் விஷயத்தில் மிகவும் பலவீனமானவன். "நீங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து

பேசுகிறீர்கள் என்று எனக்குத் தெரியும் நீங்கள் யார்…?’’

“உங்களுக்கு என்னைப் பெற்றோர் திருமணம் பேசுகிறார்கள். தரகன் ஒருவன் நீங்கள் உங்கு மிகவும் வசதியாக வாழ்வதாகச் சொல்லிக் குறிப்புத் தந்தவர்..’’

“அப்படியா….? உங்களது பெயர் என்ன…?’’

“திருமணம் முற்றாகு முன் ஆண்களை நம்பிப் பெயர்களைச் சொல்லக் கூடாது?’’

“நான் நல்லவன். நீர் பயப்படாமல் சொல்லலாம்’’

“எனக்கு நம்பிக்கையில்லை. நீங்கள் இலட்சுமியென்ற பெண்ணைக் காதலித்ததாக ஊரில் பேசிக் கொள்கிறார்கள்’’

சிலகணங்கள் அவன் பேசவில்லை. பின்; “அப்படியான பெயருள்ள பெண்ணை எனக்குத் தெரியாது. நான் யாரையும் காதலிக்கவில்லை’’ என்றான்.

“அப்படியா….? காதலித்த பெண்ணை விட்டு விட்டீர்களா…..? நான் தான் இலட்சுமி…?

உடனே அவன் தொடர்பைத் துண்டித்தான். இருந்த போதும ் அவள் அடிக்கடி அவனை மிரட்டிக் கொண்டிருந்தாள். அதை நினைக்க அவனுக்குப்

பயமாக இருந்தது; "எப்படியோ எனது தொலைபேசி இலக்கத்தைத் தேடியெடுத்து என்னை அடிக்கடி மிரட்டியவள், தற்பொழுது ஊரில் அதுவும் அவளது வீட்டுக்கு அருகில் இருக்கும் போது என்னென்ன செய்வாளோ?" எனக் கலங்கினான். அத்துடன் கிருஷ்னனும் அவளுடன் சேர்ந்துள்ளான். அவன் அவளுடன் சேர்ந்து என்னென்ன துன்பங்களைச் செய்யப் போகிறானோ? அன்று இலக்கியப் பேரவையில் உருத்திரமூர்த்தி சொற்பொழிவாற்றும் போது துணிவுடன் என்னைத் துஷித்த கிருஷ்னன் இனி என்ன செய்வான்....? அவன் துணிந்தவன். அத்துடன் நவராசாவும் புஷ்பநாதனும் அவனுக்குத் துணையாக உள்ளனர்" என்று நினைக்க ஜெயபாலனுக்குப் பயமாக இருந்தது.

"பகைவனை நம்பலாம். நண்பனைப் போல நடித்துப் பழிவாங்க நினைப்பவன் எந்த நேரத்தில் எது சொய்வானென்று எதிர்பார்க்க முடியாது. அன்று நான் கதிரேசனின் வீட்டுக்குச் சென்ற போது அவர் என்னை மகிழ்வுடன் வரவேற்கவில்லை. என்னை வேண்டாத விருந்தாளியாக நினைத்தே கதைத்தார். அதனால் இனி அங்கு போவதும் மதிப்பல்ல. உட்பகைக்கு அஞ்சி ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ளல் வேண்டும். தளர்ச்சி வந்த போது மட்கலத்தை அறுக்கும் கருவிபோல அந்த உட்பகை தவறாமல் அழிவு செய்யும்" என்று நினைத்தான் ஜெயபாலன்.

அப்போது அங்கே கனகலிங்கம் வந்தார். விக்னேஸ்வரமூர்த்தி அதிபராக இருந்த காலத்தில் பாடசாலைக்குதவவென்று பலர் இருந்தனர். விக்னேஸ்வரமூர்த்தி பதவி உயர்வு பெற்றுச்

சென்றபின் பாடசாலைப் பக்கம் செல்வோர் குறைவு; “வாருங்கோ வாத்தியார்” என்று வரவேற்றான் ஜெயபாலன்.

“பாடசாலை நூலகத்திற்கு இரண்டு அலுமாரிகள் தேவையாக உள்ளது. பாடசாலையில் நூலகத்தை அமைக்க உதவியவன் நவராசா. அவனிடம் போய்க் கேட்டனான். அவன் “தனக்கு வசதியில்லை” என்று சொல்கிறான். நீங்கள் உதவுவீரகளென்று வந்தனான்” என்றார் கனகலிங்கம்.

“ஏன் நவராசாவுக்கு வசதியில்லையே…? நல்ல இடத்தில் திருமணம் செய்திருக்கிறான். தோட்டத்தாலும் நல்ல வருமானம்.” என்றான் ஜெயபாலன்.

“இப்ப நவராசா, புஷ்பநாதன், வேலாயுதபிள்ளை, தணிகாசலம் போன்றோர் முன்பு போல இல்லை. நல்ல மனிசரெல்லாம் ஏனோ தெரியவில்லைக் கெட்டுப் போனார்கள். எந்த உதவிகளும் செய்கிறார்களில்லை. கண்டால் நின்று கதைக்கக் கூட விரும்புகிறார்களில்லை” என்று கவலைப்பட்டால் கனகலிங்கம்

---

**883. உட்பகை அஞ்சித்தற் காக்க; உலைவுஇடத்து
மண்பகையின் மாணத் தெறும்.**

---

உட்பகைக்கு அஞ்சி ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் தளர்ச்சி ஏற்படும் போது மட்கலத்தை அறுக்கும் கருவி போல அந்த உட்பகை அவனை அழித்து விடும்.

## குற்றங்கள் பல

அன்று காலைப் பூசைக்கு வந்தவர்கள் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் கோயில் வெளி மண்டபச் சுவரில் ஒரு விளம்பரம் ஒட்டப்பட்டிருப்பதைக் கண்டனர். இதுவரை காலமும் கோயில் சுவரில் திருவிழா பற்றிய விளம்பரம் கூட ஒட்டப்பட்டதில்லை. தணிகாசலமும் வேறும் சிலரும் சுவருக்கு அருகே வந்து ஒட்டப்பட்டிருந்த அந்த விளம்பரத்தை வாசித்தனர். "இங்கு வாழும் பெரியவர்களுக்கு! நீங்கள் பணத்திற்காக மானத்தைச் சமீப காலமாக விற்று வருகிறீர்கள். ஜெயபாலன் திருடன்; குடிகாரன்; பஞ்சமாபாதகங்கள் அனைத்தையும் செய்பவன். அவன் தான் செய்த பாவம் தீர்வதற்காக இங்கு வந்து தானஞ் செய்கிறான். கொள்ளையடித்த பணத்தின் மூலம் அவன் வெளிநாட்டுக்குச் சென்றான். வெளிநாட்டில் போதை மாத்திரைகளைக் கடத்திச் சம்பாதித்த பாவப்பட்ட பணத்தை இங்கு கொண்டு வந்து தரும காரியங்களுக்குச் செலவு செய்கிறான். தருமம் செய்பவன், தானங் கொடுப்பவன், தனது உழைப்பில் தான் அதைச் செய்தல் வேண்டும். பாவப்பட்ட பணம் என்று தெரிந்த பின்பும் அதைப் பெறுபவர்கள் கொடுப்பவனை விடக் கேவலமானவர்களாக, பாவப்பட்டவர்களாகவே கருதப்படுவார்கள். ஊரில் ஒரு நிகழ்வு நடைபெறுவதனால் அதைச் சுவாமியார் முன் நின்று நடத்திவைப்பார். வெளிநாடுகளில் இருந்து நல்லவர்கள் வந்து தர்மகாரியம் செய்யும் போது அந்த நேரம் சுவாமியார் வந்து அந்த நிகழ்வைச் சிறப்பிப்பதோடு, நிதி வழங்கும் தர்மவானன்ளை

ஆசீர்வதிப்பார். இதுபல ஆண்டுகாலமாக ஒழுங்காக நடைபெற்று வரும் நிகழ்வு. ஆனால் சுவாமிகள் ஜெயபாலன் நன் கொடை அளித்த எந்த ஒரு நிகழ்விலும் கலந்து கொள்ளவில்லை, ஆசீர்வதிக்கவில்லை. இது ஏன் என்று நினைத்துப் பார்த்தீர்களா….? இலக்கியப் பேரவைக்குப் பணம் பெறுமுன் சுவாமியாரைக் கேட்டீர்களா…?"

"பெரியோர்களே, ஊர்ப்பிரமுகர்களே இனியாவது சிந்தியுங்கள். நன்கொடைகள் பெறும் போது அவனைக் கௌரவித்து சிரந்தாழ்த்திப் பெறுதல் வேண்டும். இதற்கு ஜெயபாலன் தகுதி உள்ளவனா…? சிந்தித்துச் செயற்படுங்கள்."

"நலன்விரும்பி"

மிகவும் அழகாகக் கணினியில் பதிக்கப்பட்டிருந்த அந்த விளம்பரத்தை மீண்டும் ஒருமுறை படித்தார் தணிகாசலம். அப்போது அங்கு வந்த வேலாயுதபிள்ளை சொன்னார்; "இதுபோல ஒரு விளம்பரம் சனசமூக நிலையச் சுவரிலும் ஒட்டியிருக்கு".

அப்போது அங்கு வந்த கனகலிங்கம் சொன்னார்; "பாடசாலை மதில் முழுக்க ஒட்டப்பட்டிருக்கு"

தகவல் அறிந்த விக்னேஸ்வரமூர்த்தி அங்கு வந்தார். கோயில் சுவரில் ஒட்டப்பட்ட அந்தத் துண்டுப் பிரசுரத்தைக் கண்டதும் அவரது கண்கள் கலங்கின; "மகாகணபதியைத் தெய்வம் என்று

கருதாத ஒருவன் தான் இச்செயலைச் செய்துள்ளான். யாரும் எதையும் எழுதலாம். சுவர்களில் ஒட்டலாம். ஆனால் இதுவரை காலமும் கோயில் திருவிழாப் பிரசுரம் கூட கோயிற் சுவரில் ஒட்டப்பட்டதில்லை. அதை நினைக்கத்தான் எனக்குக் கவலையாக இருக்கிறது'' என்றார்.

அங்கு கூடியிருந்தவர்கள் விக்னேஸ்வரமூர்த்தி கலங்குவதைக் கண்டு துக்கப் பட்டனர்; ‘‘நீங்கள் சொல்வது சரி. கோயிலை நாம் புனிதமாக வைத்திருத்தல் வேண்டும். இது மகா கணபதியை அவமதிக்கின்ற செயல்'' என்றான் ஒருவன்.

‘‘என்னைப் பற்றிப் பல இடங்களிலும் எழுதி ஒட்டியிருப்பதாக அறிந்து வந்தேன்.இனிமேலும் என்னால் இந்த ஊரில் வாழ முடியாது. நான் பாவங்கள் பல செய்தனான்தான். ஒப்புக் கொள்கிறேன். அதை நினைத்துத் தான் நான் இந்த ஊருக்கு வந்தேன். பாவஞ் செய்தவன் புண்ணியஞ் செய்யக் கூடாதென்றால் நான் தந்த பணமெல்லாவற்றையும் திருப்பித் தாருங்கள். நான் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்கின்றேன். என்னால் தான் இலக்கியப் பேரவைக்கும் கோயிலுக்கும் சனசமூக நிலையத்திற்கும் அவமானமென்றால் நான் இனிமேல் அங்கெல்லாம் வரவில்லை'' என்று கூறிவிட்டு நடந்தான் ஜெயபாலன்.

அவன் செல்வதை எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தனர். கதிரேசன் எழுந்து அவனின் பின்னால் சென்றார். கதிரேசன் தன்னுடன் எதையோ கதைக்கத்தான் பின்னால் வருகிறார் என்பதை

உணர்ந்த ஜெயபாலன் நின்றான். அவனுக்கு அருகில் வந்த கதிரேசன் சொன்னார்; “ஜெயபாலு, உனக்கு முன்னால் நல்லவர்கள் போல நடித்து மனதுள் பகையைக் கைக்கொள்வோர் பலர் இருக்கிறார்கள். அத்தன்மை உன்னைச் சேர்ந்தவர்கள் உனக்குத் துணையாக வராமல் போவதற்குக் காரணமான பல குற்றங்களை உண்டாகும். இந்தத் துண்டுப் பிரசுரம் அதைத்தான் மையமாகக் கொண்டுள்ளது. உன்னைச் சேர்ந்தவர்கள் இதனால் உன்மீது வெறுப்படைவர். நன்றாகப் படித்த ஒருவன்தான் இதைத் திட்டமிட்டு செய்துள்ளான். கற்காதவனுக்கு இப்படிச் செயலாற்றத் தெரியாது. அவன் ஆயுதங்களைத்தான் தூக்குவான்”

**884. மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா ஏதம் பலவும் தரும்.**

மனம் திருந்தாத உட்பகை ஒருவனுக்கு இருக்குமானால்,அது அவனைச் சேர்ந்தவர்கள் அவனுக்குத் துணை செய்யாமல் போவதற்குக் காரணமான பல குற்றங்களை உண்டாக்கும்.

## உயிரை அழிக்கும்

ஜெயபாலனுக்குக் கதிரேசன் கூறியது புரியவில்லை. அதனால் தடுமாறியபடி; “நீங்கள் சொல்லியதொன்றும் எனக்குப் புரியவில்லை. தயவு செய்து புரியும்படி கூறுங்கள்” என்றான்.

கதிரேசன் அவனைப் பார்த்தார். கல்வியறிவு எள்ளளவேனும் இல்லாத தன்மையால் தான் அவனுக்கு இந்த நிலைமை வந்ததென்று அவருக்குப் புரிந்தது; "ஜெயபாலு, நீ இதைச் செய்தது கிருஷ்னனும் நவராசாவும் புஷ்பநாதனும் என்றுதான் நினைப்பாய். அப்படி அல்ல. அவர்களுக்கு இப்படி எழுதக்கூடிய வல்லமை இல்லை. அதனால் அதை அவர்கள் எழுதியிருக்க முடியாது. அத்துடன் கணனியில் பொறிக்கும் முறைகளும் அவர்களுக்குத் தெரியாது. அதை இன்னொருவரைக் கொண்டுதான் செய்வித்தல் வேண்டும். அந்த அளவு கற்றவர்களுடைய நட்பு அம்மூவருக்கும் இல்லை. இதை நன்கு கற்ற ஒருவன்தான் நன்கு திட்டமிட்டுச் செய்துள்ளான். இதன் மூலம் உன்னை அவமானப்படுத்தவும், உனது நிதியைப் பெற்றவர்களைக் கேவலப்படுத்தவும்தான் அவன் செய்துள்ளான். நீ கிருஷ்னனுக்கு ஆளை வைத்து அடிப்பித்தனி என்று எனக்கு அன்றே தெரியும். ஆனால் அதை அறியாத பல படித்தவர்கள் அது புஷ்பநாதனும் நவராசாவும் கஜேந்திரனும் செய்த வேலை என்று சொல்கிறார்கள். உண்மையான நிலை உனக்குத் தெரியும். நான் யாருக்கும் சொல்ல மாட்டேன். நீதானே கிருஷ்னனுக்கு அடிப்பித்தனீ" என்று கேட்டு விட்டு நிறுத்தினார் கதிரேசன்.

ஜெயபாலன் ஆடிப்போனான். அவனுக்குப் பயத்தால் உடல் வியர்த்தது. எதுவும் பேசத் தோன்றாது தடுமாறியபடி நின்றான்; "நீ நினைப்பாய் இதைக் கிருஷ்னன் தான் எனக்குச் சொல்லியிருப்பான் என்று. அவன் சொல்லவில்லை. அவன் தாக்கப்பட்ட செய்தி கேள்விப் பட்டதும்

நான் அவனைப் பார்க்கச் சென்றேன். அதற்கு நான் அவன் மீது கொண்ட அனுதாபம் காரணமல்ல. ஊரவர், எனது பேரனான நவராசாதான் கிருஷ்னனுக்கு அடித்தது என்று கதைத்தனர். அதை அறியத்தான் சென்றேன். அவன் யார் தனக்கு அடித்தது என்று சொல்ல மறுத்து விட்டான். அவனது கதைகளில் இருந்து நான் நவராசா அவனுக்கு அடிக்கவில்லை என்பதை உணர்ந்து கொண்டேன்.'' என்று நிறுத்தினார் கதிரேசன்.

சிறிது நேரங் கழித்துக் கதிரேசன் சொன்னார்; ''கிருஷ்னன் சொன்னான்; ''அப்பு, எனக்குப் பிறத்தியார் அடிக்கவில்லை. எனக்கு வேண்டியவைதான் அடிச்சவை. ஊரவை நவராசாவும் புஷ்பநாதனும் கஜேந்திரனும் தான் என்னைத் தாக்கியதாகக் கதைக்கினை. பாவம் அவர்கள். சனம் பழிபாவம் பாராது எலும்பில்லாத நாக்கால் பலதும் கதைக்கும். அதை நாங்கள் பொருட்படுத்தக் கூடாது'' என்றவன். நவராசா முரடன். எதற்கும் அஞ்சமாட்டான். எதையும் நேரே செல்வானே தவிர மறைந்திருந்து செய்ய மாட்டான். கிருஷ்னனின் கதையிலிருந்து தான் நீதான் அதைச் செய்தனி என்று நான் தெரிந்து கொண்டன். அதைப் போல இதை எழுதி ஒட்டியதும் யார் என்று எனக்குத் தெரியும்''

''சொல்லுங்கோ... சொல்லுங்கோ'' என்று அவசரப்பட்டான் ஜெயபாலன். கதிரேசன் திரும்பிக்கோயிற் பக்கம் நடந்தார்.

“அப்பூ… நில்லுங்கோ. சொல்லி விட்டுப் போங்கோ…” கெஞ்சினான் ஜெயபாலன்.

“நீதான் கிருஷ்னனுக்கு அடிப்பிச்சனீ என்று ஊகித்த மாதிரி இத்துண்டுப் பிரசுரத்தை ஒட்டியவன் இன்னாராகத்தான் இருக்கும் என்று யோசிக்கீறன். நீ முதலில் அதைச் சொல்….”

தயங்கினான் ஜெயபாலன். “நான் வாறன்” என்று கூறிவிட்டு நடந்தார் கதிரேசன்.

“கிருஷ்னனுக்கு நான்தான் ஆள் வைத்து அடிப்பித்தனான். தயவு செய்து அதை யாருக்குஞ் சொல்லிப் போடாதைங்கோ” என்று கலங்கிய ஜெயபாலன்; “ஆர் ஒட்டினது என்று சொல்லுங்கோ” என்றான்.

“இது என்னுடைய ஊகம். சரியென்று சொல்ல மாட்டன். நீ இதைப்பற்றி ஆராய்ந்து பார். அதற்காகத்தான் சொல்கிறேன். இதற்கு மூலகர்த்தா உனது மனைவிதான்.”

“எனது மனைவியா?… சிவசக்தியா?” அதிர்ந்து போனான் ஜெயபாலன்.

“உனது மனைவிக்கு இந்த ஊரில் இருக்க விருப்பமில்லை. பிள்ளைகளுக்கும் தாயைப் பிரிந்து வாழ விருப்பமில்லை. அதனால் பிள்ளைகள் தாமே சிலதுண்டுப் பிரசுரங்களை அச்சடித்து தாய்க்கு அனுப்பியுள்ளனர். உனது மனைவி பணங்கொடுத்து ஒட்டுவித்திருக்கிறாள். ஜெயபாலு, ஒருவனுக்கு

உறவுமுறையினரிடம் உட்பகை உண்டாகுமானால் அது அவனது உயிரை அழிக்கத்தக்க குற்றங்கள் பலவற்றை உண்டாக்கும். எனவே நீ உன்மனைவியின் விருப்பப்படி நட. அத்துடன் இங்குள்ள பலருக்கு உன்மீது உட்பகை உள்ளது. உனது இனத்தவர்கள், நண்பர்கள், அயலவர்கள் யாரையும் நம்பாதே'' என்று சொன்ன கதிரேசன், கோயிலை நோக்கி நடந்தார். எதுவும் தோன்றாது அதிர்ச்சியுடன் ஜெயபாலன் அவரைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

**885. உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான் ஏதம் பலவும் தரும்.**

ஒருவனுக்கு உறவினரோடு உட்பகை உண்டாகுமானால், அது அவனது உயிரை அழிக்கத் தக்க குற்றங்கள் பலவற்றைச் செய்யும்.

## அழிவு உறுதி

இந்த ஊரில் யாரையும் அவனால் நம்ப முடியவில்லை; "உறவினர்கள் தமது காரியங்களைப் பார்ப்பதற்காக மிகவும் நெருக்கமாக அன்பு கொண்டவர்கள் போலப் பழகுகிறார்கள். தமது காரியம் முடிவடைந்ததும் ஊரவர்களுடன் சேர்ந்து தருணத்திற் கேற்றவாறு கதைக்கிறார்கள். நண்பர்களும் அப்படித்தான். பிரமுகர்களும் அப்படித்தான். யாரை நம்புவது யாரை நம்பாது விடுவது. கதிரேசன் நல்லவர்; படிக்காத மேதை. ஒருவன் சொல்லாமலே அவனின் முகத்தைப் பார்த்து அவன் என்ன நினைக்கிறான் என்று

அறியும் ஆற்றல் உள்ளவர். அத்துடன் மனதில் உள்ளதை அவன் சிறிதும் சந்தேகப்படாமல் அறிந்து கொள்ளக் கூடியவர். ஊரில் எத்தனை பேர் இருக்கிறார்கள். ஒருவரென்றாலும் கிருஷ்னனுக்கு அடிப்பித்தது நான் என்று நினைக்கவில்லை. ஆனால் கதிரேசன் கிருஷ்னனது வீட்டிற்கு அவனை வருத்தம் பார்க்கப் போவது போலச் சென்று அவன் சந்தேகப்படாத முறையில் நடந்தவற்றையெல்லாம் அறிந்து வந்திருக்கிறார். அதே போலச் சுவரில் ஒட்டிய துண்டுப் பிரசுரம் பற்றியும் அவர் சொன்னது சரி. நவராசாவுக்கும் புஷ்பநாதனுக்கும் கணனியையே தெரியாது. இது கற்றவர் ஒருவரின் வேலைதான். சிவசக்தியின் சகோதரர்கள் பயங்கரவாதிகள். அவர்களுக்கு நான் ஊருக்கு வருந்தது விருப்பமில்லை.'' என்று நினைத்தான் ஜெயபாலன்.

அவனும் சிவசக்தியும் ஊருக்கு வரும்போது சிவசக்தியின் மூத்த சகோதரன் சொன்னது அவனது காதுகளில் ஒலித்தது; ''ஜெயபாலு, ஒன்பது பேருக்குச் சிவசக்தி சகோதரி. நாம் எமது பிள்ளைகளை விட இவளையே உயிருக்குயிராக நேசிக்கிறோம். அதனால் அவள் பிரிந்து செல்வதை நாம் விரும்பவில்லை. ஓரிரு நாட்கள் ஓரிரு மாதங்கள் என்றால் பரவாயில்லை. நீங்கள் நிரந்தரமாக அங்கு தங்கப் போவதாகச் செல்வது எமக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. இந்தச் செல்வந்த ஊரை விட்டு விட்டு வறிய கிராமத்தில் நீங்கள் குடியேறுவதையிட்டு நான் கவலைப்படவில்லை. எமது சகோதரி என்னை விட்டுப் போகிறாள் என்றுதான் கவலைப்பர்றன். நீங்கள் தனியாப் போய் இருங்கோ...''

“சிவசக்திக்கும் என்னைவிடத் தனது சகோதரர்களில் தான் பாசம் அதிகம். அதனால் அவள் எதையும் செய்வாள். சென்றவாரம் ஒரு தடித்த கடிதம் வந்தது. அக்கடிதத்துள்தான் அத்துண்டுப் பிரசுரம் வந்ததோ...?” என்று எண்ணினான் ஜெயபாலன்.

அவனுக்கு எழுத வாசிக்கத் தெரியாது. அத்துடன் பிள்ளைகளோ மச்சான்மாரோ எழுதும் கடிதங்களை அவன் வாசிப்பதில்லை. சிவசக்திதான் வாசிப்பாள். வாசித்து விட்டு அவர்கள் எழுதியதைச் சொல்வாள். ஆனால் அவன் அதைக் கேட்பதையும் விரும்புவதில்லை.

“சிவசக்தியிடம் அன்று வந்த கடிதத்தைப் பற்றிக் கேட்கலாம். ஒருநாளுமில்லா தவாறு கடிதத்தைப் பற்றிக் கேட்டால் அவள் சந்தேகிப்பாள். அத்துடன் இந்த விஷயம் கதிரேசனுக்கு எப்படித் தெரிய வந்தது. அதை நினைக்க ஜெயபாலனுக்கு மண்டை வெடித்து விடும் போல இருந்தது; “ஒருவனுக்கு உறவு முறையானவர்களிடம் உட்பகை உண்டாகுமானால், அது அவனது உயிரை அழிக்கத்தக்க குற்றங்கள் பலவற்றை உண்டாக்கும்” என்று கதிரேசன் கூறிய வார்த்தைகள் ஜெயபாலனது காதுகளில் பலமாக ஒலித்தன; “எனது மனைவியும் அவளது சகோதரர்களும் என்னைப் பகைத்தால் எனது பிள்ளைகளும் என்னைப் பகைப்பார்கள். அதனால் நான் அழிந்து போய்விடுவேன். அவர்கள் மிகவும் கொடியவர்கள். அதனால் நான் மனைவியையும் அழைத்துக் கொண்டு வெளிநாடு செல்வது தான்

நல்லது'' என்று நினைத்தவாறு வீட்டுக்குச் சென்றான். வாசலில் அவளது மனைவி பத்திரகாளியாகி நின்று அவனை வரவேற்றாள்.

''இனிமேல் நீங்கள் இங்கே இருக்க முடியாது. உங்களது விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காகத்தான் நான் உங்களோடு இங்கு வாழலாமென்று வந்தேன். ஆனால் இந்த ஊரவர்கள் உங்களை இங்கு நிம்மதியாக வாழ விடமாட்டார்கள். தினமும் பிரச்சினைப்பட்டு அவமானத்தால் கூனிக்குறுகி வாழ்வதை விட நாம் திரும்பிப் போய்விடுவோம். பிள்ளைகளும் அண்ணாமாரும் அதைத்தான் விரும்புகிறார்கள்; ''உங்களை உடனடியாக வரட்டாம். இல்லாவிட்டால் தாங்கள் இங்கு வந்துதான் அழைத்துக் கொண்டு போக வேண்டிய நிலையேற்படும்'' என்று கடிதம் எழுதியிருக் கிறார்கள். இராத்திரி உங்களைப் பற்றிக் கேலமாக எழுதி ஒட்டியிருக்கிறார்கள். பணம் கொடுத்ததற்கு இப்படி ஒரு வாழ்த்தா....? உங்களுக்கு வெட்கமாக இல்லை...'' சிவசக்தி கத்திக் கொண்டிருந்தாள்; ''ஒருவனுக்கு அவனது இனத்தவர்களிடையே பகையேற்படு மானால், அது அவனை அழித்துவிடும். சிவசக்தியின் சகோதரர்கள் அப்படி யானவர்கள்'' என்று நினைத்தான் ஜெயபாலன்.

**886. ஒன்றாமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்**
**பொன்றாமை ஒன்றல் அரிது.**

ஒருவனுக்கு அவனுடைய உற்றாரிடத்தில் பகை ஏற்படுமானால், அந்த உட்பகையால் அவன் அழியாது இருத்தல் அரிதாகும்.

## வேற்றுமை தெரியாது

ஜெயபாலனின் மனம் அமைதியை இழந்து தவித்தது. சாதாரணமாக மனிதர்களை விடச் சிவசக்தி கடுமையான போக்குடையவள். ஒன்பது சகோதரர்களும் அவளைச் செல்லமாக வளர்த்தமையால் அவளைக் கண்டிப்பதே அவளுக்குப் பிடிக்காது. அவன் கடுமையாகக் கண்டித்தால் அவள் தனது சகோதரர்களுக்கு அதைச் சொல்லி விடுவாள். அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவனைக் கண்டிப்பார்கள். அதனால் அவளுடன் பிரச்சினைப்படும் நாட்களில் தொலைபேசி அழைப்புக்கள் வந்தால் அவன் எடுக்கமாட்டான். சிவசக்தி எடுத்துவிட்டு; ‘‘மூத்தண்ணை உங்களோடு கதைக்கப் போகிறாராம்’’ என்பாள். ஜெயபாலன் அவர்களுடன் பேசமறுத்து விடுவான். அவர்கள் எல்லோரும் ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கு வந்து விடுவார்கள். பின் ஒன்பது பேரும் உபதேசஞ் செய்வார்கள்; எச்சரிப்பார்கள்; மிரட்டுவார்கள். அவளின் மூத்த சகோதரன் முழு முரடன். அவன் சொல்வான்; ‘‘தங்கையின் புரிஷன் என்பதால் தான் பொறுத்துக் கொள்கிறேன். அது அளவுக்கு மிஞ்சக்கூடாது’’ என்பான். பின் நன்றாகக் குடித்து விட்டு ஜெயபாலனுக்கு அடிப்பான்.

அவற்றை நினைக்க ஜெயபாலனின் உடல் நடுங்கியது. மன அமைதிக்காகக் கதிரேசனது வீட்டுக்குச் சென்றான்; ‘‘எனது மனைவியும் அவளது சகோதரர்களும் மிகவும் கொடியவர்கள். அவள் யாருக்கும் அடங்கமாட்டாள். அவளுக்காக அவளது சகோதரர்கள் எதுவும் செய்வார்கள். அவள் கடிதம் எழுதினால் அவர்கள் புறப்பட்டு வந்து விடுவார்கள்’’ என்று பயப்பட்டான் ஜெயபாலன்.

‘‘பயப்படும் உனக்கு ஏன் துணிவான எண்ணம்? உனது மனைவியின் விருப்பப்படி நீ நட. அது தான் உனக்கு நல்லது’’ என்றார் கதிரேசன்.

‘‘துன்பங்களிலிருந்து விடுபடத்தான் நான் இங்கு வந்தேன். அந்த நாட்டில் நான் சுதந்திரமாக ஒரு நிமிடம் கூட வாழவில்லை. இருபத்திநான்குமணி நேரமும் வேலை செய்தேன். அதற்குக் காரணம் எனது மனைவிதான். இங்கு நிம்மதியாக இருக்கலாம் என்று வந்தால் அதைவிடத் துன்பமாக இருக்கிறது. மனைவியும் சகோதரர்களும் எனது பகைவர்கள்’’ என்றான் ஜெயபாலன்.

‘‘உட்பகை நிலவும் குடியில் இருப்பவர்கள் ஒற்றுமையாக வாழ்வதைப் போலத் தோன்றினாலும் உள்ளத்தால் ஒன்றியிராது ,செம்பும் அதன் மூடியும் வெளியே பார்ப்பதற்கு ஒன்றாக இருப்பதைப் போலத் தோன்றுவதைப் போலவே இருப்பார்கள். அது தான் உனது குடும்பத்தில் நடைபெறுகிறது. உனது மனைவி தனது சகோதரர்களைக் கொண்டு உன்னை மிரட்டுவது, அடியாட்களைக் கொண்டு பகைவர்களை அடக்குவதைப் போன்றது. அதை

யாராலும் பொறுத்துக் கொள்ள முடியாது. நீ உனது மனைவியை அனுப்பி விட்டு உனது சகோதரர்களுடன் இங்கு கொஞ்ச நாட்களுக்கு இருக்கலாம் தானே'' என்றார் கதிரேசன்.

``உங்களுக்கு வெளிநாடுகளைப் பற்றித் தெரியாது. எனது பேரப்பிள்ளைகளைப் பராமரிப்பு நிலையங்களில் விட்டுப் பராமரிக்கப் பெருந்தொகையாகப் பணம் கட்டுதல் வேண்டும். அதனால் நானும் மனைவியும் தான் பேரப்பிள்ளைகளைப் பராமரிக்கின்றோம். இது தவிர ஆயிரம் பிரச்சினைகள். அவள் கடைசி வரையும் என்னை விட்டு விட்டுச் செல்ல மாட்டாள். அதற்கு அன்பு, அக்கறை காரணமில்லை. அங்குள்ள பிரச்சினைகள் தான் காரணம்'' என்றான் ஜெயபாலன்.

``பணம் பொருள் அந்தஸ்துப் போன்றவை ஒருவனுக்கு நிம்மதியைக் கொடுப்பதில்லை. ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் அத்தனை பேரும் ஒருவரை ஒருவர் புரிந்து விட்டுக்கொடுத்து அன்பு கூர்ந்து அனனியோன்னியமாக வாழ்ந்தால் தான் குடும்பம் சிறக்கும். அதை விட்டு விட்டு காட்டு மிருகங்களைப் போலப் பகையுடன் வாழ்ந்தால் இல்லறம் சிறக்காது. இப்போ கிராமங்கள் அழிந்து விட்டன என்றே கூற வேண்டும். ஒவ்வொரு கிராமமும் இப்போது வெளிநாட்டு மோகமுள்ள குடும்பங்களாகவே மாறியுள்ளன. செயற்கையாக யாவும் சொர்க்கம் போலத் தோன்றினாலும் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு நரக உலகமாக மாறிவிட்டது. எங்கு பார்த்தாலும் சுயநலமே தலைவிரித்தாடுகிறது. கணவன் மனைவியிடையே

அன்பு இல்லை; புரிந்துணர்வு இல்லை. அதே போலப் பெற்றோர்களும் பிள்ளைகளும் வாழ்கின்றார்கள். இதை அவரவர் உணர்ந்து திருந்தினால் தான் மகிழ்ச்சியுண்டாகும். அதை இன்னொருவரால் உண்டாக்க முடியாது. நீ இவ்வளவு காலமும் உனது மனைவியின் சொற்படி வாழ்ந்ததைப் போல இனியும் வாழவேண்டியதுதான். வேறுவழியில்லை'' என்றார் கதிரேசன்.

ஜெயபாலன் பெருமூச்சு விட்டான். கூண்டில் அடைக்கப்பட்ட விலங்கு போல் அவனது மனம் துடிதுடித்தது. பல்வேறு விதமான பிரச்சினைகள் இங்கே வந்தாலும் ஒருவித மகிழ்விருந்தது. இனி அதற்கு மேல் அவனால் நினைக்க முடியவில்லை.

**887. செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே**
**உட்பகை உற்ற குடி.**

செப்பின் கலப்பைப் போல புறத்தே சேர்ந்திருந்தாலும், உட்பகை உண்டான குடியில் உள்ளவர்கள் மனத்தினால் கூடியிருக்க மாட்டார்கள்.

**உட்பகை**

ஜெயபாலன் வீட்டுக்கு வந்தவுடன் சிவசக்தி ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

‘‘யாருடைய கடிதம்?'' என்று கேட்டான் ஜெயபாலன்.

“மூத்தண்ணா எழுதியிருக்கிறார். வாசித்துப் பாருங்கோ”

ஜெயபாலன் சிவசக்தியைப் பார்த்தான். பின் “என்னவாம்” என்றான்.

“நீங்கள் வாசித்துப் பாருங்கோ”.

“வாசித்ததைச் சொல்”.

“வாசிக்கிறன் கேளுங்கோ” என்றாள் சிவசக்தி

ஜெயபாலன் நாற்காலியில் அமர்ந்தான். அவன் என்ன எழுதியிருப்பான் என்று ஜெயபாலனுக்குத் தெரியும். அதை நினைக்க அவனுக்குக் கவலையாக இருந்தது.

“அன்பான எனது தங்கை சக்தி, மைத்துனன் ஜெயம், நீங்கள் நலமுடன் இருப்பீர்களென்று எனக்குத் தெரியும். காரணம் நான் வணங்கும் வெள்ளெருவை விநாயகன் உங்களுக்கு எந்தவிதமான மனக்குறையையும் விடமாட்டான். நீங்கள் ஊருக்குச் சென்று இரண்டு மாதகாலம் இரண்டு யுகங்களைப் போல கழிந்து விட்டது. சக்தி உன்னைக் காணாது நானும் எனது சகோதரர்களும் துடியாய்த் துடிக்கின்றோம். நான் இன்னோர் ஆபரணக் கடை திறக்கவுள்ளேன். அதை எனது உடன் பிறப்பான நீதான் ஆரம்பித்து வைத்தல் வேண்டும். முதல் இரண்டு ஆபரணக் கடைகளையும் நீதான் ஆரம்பித்து வைத்தாய். அது இன்று ஓகோ என்று நடைபெறுகிறது. அதற்குக் காரணம் உனது

கைராசி தான். எங்கள் ஒன்பது குடும்பங்களுக்கும் நீதான் தலைவி. மச்சான் உன்னை அழைத்துச் சென்ற பின்பு நிலவில்லா வனம் போல எமது உள்ளங்கள் இருண்டு விட்டன. அதனால் உடனே வா. மைத்துனருக்கு ஊர்த்தொண்டு துரவுகள் பிடிக்கும். ஊரில் உல்லாசமாக வாழ நினைப்பார். அதனால் இங்கு வர விரும்ப மாட்டார். அவருடன் சென்று நீ உங்கு தங்கிவிடாதே. மைத்துனர் வர மறுத்தால் எழுது. உடனே நாங்கள் வந்து உங்கள் இருவரையும் அழைத்து வருகிறோம்'' என்று வாசித்து விட்டு நிறுத்தினாள். சிவசக்தி.

``இவ்வளவும் தானா. இல்லை இன்னும் இருக்கா?'' என்று கேட்டான் ஜெயபாலன்.

``இவ்வளவும் பொதுவாக எழுதியது. இனி உங்களுக்கு எழுதியதை வாசிக்கிறேன். கேளுங்கள்; ``ஜெயம், உங்களுக்கு இங்கு வர விருப்பமில்லை என்று எனக்குத் தெரியும். ஊரில் உங்களின் பழைய நண்பர்கள் எல்லோரும் வந்து சேர்ந்திருப்பார்கள். அவர்களுடன் பொழுதைக் கழிக்கவே நீங்கள் விரும்புவீர்கள். நீங்கள் தனியச் சென்றால் திரும்பிவர மாட்டீர்கள் என்பதற்காகத்தான் உங்களுடன் தங்கையைச் சேர்ந்து அனுப்பினோம். நாம் அன்புடன் செய்வதையெல்லாம் நீங்கள் தவறாக நினைத்து எம்மீது பகை கொண்டுள்ளீர்கள். நாம் எமது தங்கையின் மீது கொண்ட அளவற்ற பாசத்தால் சில சமயம் உங்களுடன் சற்று உரிமை கலந்த கண்டிப்புடன் நடந்து கொள்கிறோம். அதைத் தவறாகப் புரிந்து கொண்ட நீங்கள் எம்முடன் கோபமுற்று எம்மைப் பகைவராகக் கருதுகின்றீர்கள்.

தங்கைக்காக நாம் உங்களுக்கு எவ்வளவு உதவிகள் புரிந்துள்ளோம். இன்னும் புரியவுள்ளோம். எம்மிடம் உதவி பெறுவது பாவம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அதனால் தான் நீங்கள் எம்மை வெறுத்துச் சென்றீர்கள். உறவினர்களுக்கிடையில் உட்பகை ஒருபோதும் இருத்தலாகாது. நீங்கள் எம்முடன் பழகும் போது சிரித்துக் கதைத்துக் கலகலப்பாகப் பழகுகிறீர்கள். ஆனால் நாமில்லாத வேளையில் எமது தங்கையை வெருட்டி எம்மைப் பகைவர்களாகக் கருதுவதாகக் கூறுகிறீர்கள். அது குடும்பத்தின் அழிவுக்கு வழிவகுக்கும். "அரத்தினால் தேய்க்கப்பட்ட இரும்பைப்போல உட்பகைக்கு ஆளான குடி வலிமை குறைந்து தேய்ந்து அழிந்து விடும்" என்று மூதறிஞர்கள் கூறியிருக்கிறீர்கள். நீங்கள் எம்மை பகைவர்களாகக் கருதியதால் தான் எம்முடன் கூடி வாழ விரும்பாமல் எம்மைத் தவிக்க விட்டுவிட்டு நீங்கள் பிரிந்து சென்று விட்டீர்கள். ஜெயம், என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அதனால் சக்தியையும் அழைத்துக் கொண்டு விரைவாக வந்து சேருங்கள். உங்கள் இருவரினதும் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்." அன்புடன் மைத்துனன் ரகுவரன்.

கடிதத்தை வாசித்து முடித்து விட்டுச் சிவசக்தி சொன்னாள்; "இரண்டு பேரினதும் கடவுச் சீட்டையும் முகவர்களிடம் கொடுத்துவிட்டேன். முகவருக்கு அண்ணா தொலைபேசியில் எமது பிரயாணத்திற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்யச் சொல்லி இருக்கிறார். அவன் வீட்டுக்கு காலையில் வந்தவன்"

ஜெயபாலன் எதுவும் பேசத் தோன்றாது நாற்காலியில் அமர்ந்திருந்தான். அவனால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை.

**888. அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது உட்பகை உற்ற குடி.**

உட்பகை உண்டான குடி, அரத்தினால் தேய்க்கப்பட்ட இரும்பைப் போல வலிமை கெட்டு அழிந்து விடும்.

## எள்ளின் பிளவளவு

“ரகுவரன் கூறுவதைப் போலச் சிவசக்தி மிகவும் ராசிக்காரி. அவள் தொட்டதெல்லாம் துலங்கும். நான் வெளிநாட்டுக்குச் செல்லும் போது சாதாரணமான மனிதனாகத் தான் இருந்தேன். இன்று கோடீஸ்வரனாவதற்குக் காரணம் அவள்தான். அவளது ஒன்பது சகோதரர்களும் வருடாவருடம் தமது வருமானத்தின் ஒரு பகுதியை அவளுக்குக் கொடுப்பார்கள். அவனது நண்பன் ஒருவன் சொல்வான்; “ஜெயம், உனக்குப் பத்துப் பேரின் வருமானம் இருக்கு. நீ கொடுத்து வைத்தவன். நாங்கள் இங்கு உழைத்து எங்கள் குடும்பத்தைப் பராமரிக்க வேண்டும். அத்துடன் ஊரில் பெற்றோர், சகோதரங்கள், நண்பர்கள் என்று பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவுதல் வேண்டும். இது தவிர கோயில்கள், சனசமூக நிலையங்கள் இருக்கு. அதற்கு வருடா வருடம் விழாக்கள் பல வரும். அவைக்கெல்லாம் உதவும்படி எழுதுவார்கள். உனக்கு அவையொன்றும் இல்லை. விடுமுறை நாட்களில் உனக்குச் சாப்பாடு தரவும்,

பண்டிகைகளின் போது உடுபிடைவைகள் வாங்கித்தரவும் மச்சான்மார் இருக்கினை. நீ, உனக்கும் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் எப்போதாவது உடைகைள் வாங்கியிருக்கிறாயா…..? உன்னைப் போல ஓர் அதிஷ்டசாலியை நான் கண்டதில்லை.’’

‘‘இவ்வளவும் இருப்பது உண்மைதான். ஆனால் இவற்றால் எனக்குச் சந்தோசம் இல்லையே. நான் நினைத்தபடி வாழ அவர்கள் விடுகிறார்களில்லையே. சிவசக்தி அற்பமான விடயத்திற்கும் கோபிப்பாள். அப்படி வாழ்வதை விட அவளை விவாகரத்துச் செய்து விடலாம்’’ என்று நினைப்பான் ஜெயபாலன்.

ஒருநாள் அவனது நண்பன் அவனையும் சிவசக்தியையும் மதிய உணவு அருந்தத் தனது வீட்டுக்கு வருமாறு அழைத்தான். அன்று அவன் திருமணமாகி மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடினான். அதற்குச் செல்லச் சிவசக்தி மறுத்து விட்டாள் ‘‘இன்று இரண்டாவது அண்ணாவின் பிறந்த தினம். எப்படி அதைவிட்டு விட்டு நான் வருவது. அவர் உங்கள் நண்பர் என்பதை ஒத்துக் கொள்கின்றேன். நீங்கள் இங்கு வந்தபின்தான் அவர் நட்பானவர். எனது சகோதரன் அப்படியா….? இரண்டு தினங்களுக்கு முன்பே வரச்சொல்லிச் சொன்னவர். நீங்கள் உங்கள் நண்பனுக்குத் தொலைபேசியில் உள்ளதைச் சொல்லுங்கள். அண்ணன்மார் என்னை மிகுந்த பாசத்துடன் வளர்த்து விட்டனர். அத்துடன் எமது குடும்பத்தினர் முழுப்பேரும் அங்கு நிற்கையில் நாங்கள் எப்படிச் செல்லாமல் இருக்க முடியும்.

உங்களுக்கு எப்படிச் சொன்னாலும் விளங்குவதில்லை. நான் சொல்வது நியாயமில்லை என்று உங்களுக்குத் தோன்றினால் வேறு யாரிடமாவது கேட்டுப்பாருங்கள்'' என்றாள்.

''நான் ஏன் யாரையும் கேட்க வேண்டும். நான் உனது கணவன். நான் சொல்வதை நீ கேட்கவேண்டும்'' என்றான் ஜெயபாலன்.

''நீங்கள் என்னுடைய கணவன். இல்லையென்று நான் எப்போதாவது சொன்னேனா..? அதைவிட நீங்கள் சொல்வதை நான் எப்போதாவது கேட்காமல் விட்டிருக்கிறேனா…? நீங்கள் எனது சகோதரர்களோடு அவ்வளவு கலகலப்பாகப் பழகுவதில்லை. அது அவர்களுக்கு மிகுந்த கவலையை அளித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் அன்புடனும் அக்கறையுடனும் செய்பவற்றை அதிகாரத்துடன் செய்வதாக நீங்கள் நினைக்கிறீர்கள். அவர்கள் என்மீது வைத்திருக்கும் அளவுக்கதிகமான பாசத்தால்தான் அப்படி நடந்து கொள்கின்றார்களே தவிர உங்களை அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல. அதை நீங்கள் ஏன் புரிந்து கொள்ளத் தவறுகிறீர்கள். அத்துடன் அம்மாவுடனும் அப்பாவுடனும் கூட நீங்கள் கலகலப்பாகப் பழகுவதில்லை. சகோதரர்களின் பிள்ளைகளுடனும் நீங்கள் அன்பாகப் பழகுவதில்லை. அந்தச் சிறு குழந்தைகள் உங்களுக்கு என்ன செய்தார்கள்?'' விம்மினாள் சிவசக்தி.

ஜெயபாலன் பேசாமல் இருந்தான். “உறவினர்களிடையே எள்ளின் பிளவைப் போல மிகச் சிறிய அளவிலான மனக்கசப்பு இருந்தாலும் அது காலப்போக்கில் வளர்ந்து குடியைக் கெடுக்கக்கூடிய கேட்டை உண்டாக்கும்” என்று அப்பா அடிக்கடி உங்கள் போக்குப் பற்றிக் கூறும் வேளைகளில் சொல்வார். அண்ணாமார் தான் என்னில் உள்ள பாசம் காரணமாக அப்படி நடக்கிறார்கள். ஆனால் அவர்களது மனைவிமார் “நீங்கள் திமிர்பிடித்தவர்” என்று கூறுகின்றனர். அதனால் உங்களை அவர்களுக்குப் பிடிப்பதில்லை. அதனால் தயவு செய்து அண்ணாமாருடன் ஒத்துப் போங்கள்” ஒருநாள் சிவசக்தி கூறி அழுதது அவனுக்கு நினைவுக்கு வந்தது.

“சிவசக்தி சகோதரர்களுடன் சேர்ந்து நடிக்கிறாள். அவளை ஒருபோதும் நம்பக் கூடாது. இவ்வளவு காலமும் பட்ட நரகவேதனை போதும்” என்று நினைத்தான் ஜெயபாலன்.

---

**889. எள்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு.**

---

எள்ளின் பிளவைப் போல உட்பகை சிறியதாக இருந்தாலும், அது ஒரு குடியை அழிக்கவல்ல கேட்டை உண்டாக்கும்.

## பாம்புடன் வாழ்வோர்

“நான் உனது கணவன் என்று நீ நினைத்திருந்தால் பிரயாணத்திற்கான

ஆயத்தங்களைச் செய்யுமுன் எனக்குச் சொல்லியிருப்பாய். கடவுச் சீட்டை முகவருக்குக் கொடுக்கு முன் என்னை ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம் தானே?''.

''கேட்கலாம் தான். நிலைமையை நீங்கள் உணரக்கூடியவரல்ல. அண்ணா வெளிநாட்டிலிருந்து முகவருக்கு எமது பிரயாண ஒழுங்கைக் கவனிக்குமாறு தொலைபேசியில் கூறி விபரங்களை அனுப்பியுள்ளார். அவன் அதற்காக காலையில் வந்து உங்களுக்காகக் காத்திருந்தான். பதினொரு மணியாகியும் நீங்கள் வரவில்லை. அவன் அவசரப்பட்டான். அதனால் கொடுத்தேன். நீங்கள் வந்தவுடன் சொல்லி விட்டேன் தானே''

''எனக்கு அங்கு வரவிருப்பமில்லை. இங்கேயே வாழ விரும்புகிறேன்'' என்றான் ஜெயபாலன்.

சிவசக்தி சில கணங்கள் எதுவும் பேசவில்லை. பின் சொன்னாள்; ''இங்கு நீங்கள் ஏன் வாழ வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். உங்களது பழைய உறவுகளைப் புதுப்பிக்க விரும்புகிறீர்கள். பலர் எனக்கு உங்களைப் பற்றிச் சொன்னார்கள். அந்தச் சீரழிந்த வாழ்க்கை உங்களுக்கு வேண்டாம். என்னையும் பிள்ளைகளையும் பிரிந்து வாழ உங்களுக்கு எப்படிமனம் வந்தது…? என்னைவிட இன்பந் தரும் பலர் இங்கு இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். இப்போது உங்களுக்கு எத்தனை வயது …? அறுபது வயது கடந்த பின்பும் உங்களுக்கு ஏன் இப்படியான விபரீதமான

ஆசைகள் வருகின்றன. தற்போது நீங்கள் மனதை அடக்கி ஆத்மீக வாழ்வில் ஈடுபடுவதை விட்டு விட்டு ஆட்கடத்தலிலும் அடாவடித்தனங்களிலும் ஈடுபடுகிறீர்கள். காலையில் உங்களைப் பற்றிக் கேவலமாக எழுதிச் சுவர்களில் ஒட்டியுள்ளார்கள். கிருஷ்னன் உங்களது பால்ய நண்பன். அவன் உங்களை மிரட்டிப் பணம் சம்பாதிக்கும் கீழான செயலைச் செய்தவன். அதற்காக அவனைக் கடத்திச் சென்று அவனைத் தாக்கியிருக்கிறீர்கள். இது தேவைதானா...? இப்படியான கேவலமான செயல்களைச் செய்வதால் எமது குடும்பமானம் போகிறது'' அழுதாள் சிவசக்தி.

தனது மனைவிக்கு அவை தெரிந்ததால் சற்று அதிர்ச்சியடைந்தான் ஜெயபாலன்; ''இவற்றை அவள் தனது சகோதரர்களுக்கு எழுதினால் அவர்கள் இங்கு வந்து விடுவார்கள்.'' என்று நினைக்க அவனுக்குப் பயமாக இருந்தது. ஒருநாள் கதிரேசனுக்கு அவன், சிவசக்தியும் அவளது சகோதரர்களும் செய்யும் கொடுமைகளைக் கூறிய போது அவர் சொன்னார்; ''ஒருவனுக்குப் பணம், பொருள், கற்ற கல்வி போன்றவற்றால் நிம்மதி கிடைப்பதில்லை. அவனது குடும்பத்தில் அமைதி நிலவ வேண்டும். குடும்பத்தவர்கள் ஒவ்வொரு வரும் அன்னியோன்னியமாகப் பழகி அன்புடன் வாழ வேண்டும். கொடுஞ் சொற்கள் பாவிக்கக் கூடாது. பாவத்தைக் கண்டு பயப்படல் வேண்டும். பாவத்திற்கு அஞ்சாமலும் நீதிக்குப் பிறம்பாகவும் ஒருவர் நடந்தால் கூட அந்தக் குடும்பம் அழிந்து விடும். நீ சொல்வதிலிருந்து உனது குடும்பத்தவரோ இனத்தவரே உன்னை மதிப்பதில்லை என்று கூறுகிறாய். உனது மனைவியின் சகோரர்கள்,

அவர்களது மனைவிமார், பிள்ளைகள் எல்லோரும் கெட்டவர்களா...? உனது பிள்ளைகளும் உன்னை மதிப்பதில்லை என்று கூறுகிறாய். அதனால் எனக்குச் சந்தேக மேற்படுகிறது. பிழை அவர்களிடம் இல்லை. உன்னிடம்தான் உள்ளது போல எனக்குத் தோன்றுகிறது. நீ இங்கு செய்யும் செயல்களைப் போல அங்கும் செய்தால் உன்னை எப்படி மதிப்பார்கள்?. உனது மனைவி கூறுவதைப் போல அவர்கள் அன்பின் நிமிர்த்தம் செய்ய, நீ அதை ஏன் தவறாக நினைக்கிறாய்? ‘‘மனப்பொருத்தம் இல்லாதவர்களுடன் சேர்ந்து வாழ்வதென்பது, ஒருவீட்டில் பாம்புடன் சேர்ந்து வாழ்வதைப் போன்றதென்று’’ பெரியவர்கள் கூறியிருக் கிறார்கள். நீ, அவர்கள் பொருத்தமில்லாதவர்கள் என்று கூற, அவர்கள் நீ பொருத்தமில்லாமில்லாதவன் என்று கூறுகிறர்கள். பார்க்கப் போனால் உன்னில் தான் பிழைகள் உள்ளன போல எனக்குத் தோன்றுகிறது. இந்த ஊர்மிகவும் அமைதியாக இருந்தது. நீ வந்தபின்பு இருந்த அமைதி கெட்டு விட்டது. அதனால் நீ இங்கிருந்து செல்வது தான் நல்லது. அங்கு சென்று ஒற்றுமையாக வாழப்பார். மனிதப் பிறவி இனி ஒருபோதும் உனக்குக் கிடைக்க மாட்டாது. கிடைத்த பிறவியில் ஏன் மற்றவர்களையும் வருத்தி நீயும் வருந்துகிறாய்? பலர் உன்னுடன் ஒத்துப் போக முடியாது. நீ ஒருவன் ஒத்துப் போகலாம் தானே’’

கதிரேசன் கூறிய வார்த்தைகளை நினைத்துப் பார்த்தான். தனது மைத்துனர்கள் கூறுவதைப் போலவே அவரும் கூறுகிறார். முன்பின் தெரியாத அவருக்கு இவையெல்லாம் எப்படித்

தெரிய வந்தது. "எதையும் அவர் ஆராய்ந்து அறிந்து விடும் தன்மை உடையவர்" என்று நினைத்தான் ஜெயபாலன்.

**890. உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்**
**பாம்போடு உடன்உறைந் தற்று.**

மன ஒருமைப் பாடு இல்லாதவருடன் சேர்ந்து வாழ்வதென்பது, ஒரு குடிசையில் பாம்போடு கூடி வாழ்வதைப் போன்றது.

## சிறந்த பாதுகாப்பு

கணபதி மத்திய மகா வித்தியாலய அதிபர் கனகலிங்கம் அன்று சுவாமியாரைத் தரிசிக் கவந்தார். அவரது முகம் வாடிக் களை இழந்திருந்தது. அவர் வரும் போது சுவாமியார் நிஷ்டையில் இருந்தார். வேறு இரண்டு பேர் அவரைத் தரிசிப்பதற்காகக் காத்திருந்தனர். வெகுநேரம் சுவாமியார் நிஷ்டையில் இருந்தார். காத்திருந்த இருவரும் எழுந்து சென்று மகாகணபதி ஆலயத்தைத் துப்பரவு செய்தனர்.

சுவாமியார் கண்விழித்துப் பார்த்தார். கனகலிங்கம் கவலையுடன் நின்றார்; "மனிதன் தான் எல்லாவற்றையும் உருவாக்குகின்றான்; பிறரின் தேவையை அறிந்து செயற்படுகிறான்; அன்பு, கருணை, கரூண்ணியம் மிக்கவனாக அவன் எந்நாளும் இருந்தல் வேண்டும். பெயரும் புகழும் அவனைத் தேடிவர வேண்டுமே தவிர அவற்றைத் தேடி அவன் செல்லக் கூடாது. அவன் அவற்றைத் தேடிச் சென்றால் அவற்றிற்கு எதிர்மாறனவை தான்

அவனைத் தேடி வரும். முதலில் ஒவ்வொருவரும் மனிதனாக இருக்கப் பழகிக் கொள்ளல் வேண்டும். மனிதனாக ஒருவன் வாழ்ந்தால் சகல சௌபாக்கியங்களும் அவனைத் தேடி வந்தடையும். அடுத்தவனை மதி; அடுத்து உனது சேவையை மதி; மதிக்கப்படும் ஒருவனை மறந்தும் குறை கூறாதே; நல்ல இலட்சியத்திற்காக உழைத்தவர்கள் தான் இன்று போற்றப்படுகின்றனர். ஒவ்வொருவரும் தாம் தாம் வாழ்ந்ததற்கு அறிகுறியாக எதையாவது விட்டுச் செல்லல் வேண்டும். உண்மையான செயல்களை, சேவைகளை எவற்றாலும் மறைத்து விட முடியாது. எப்பொழுதும் ஒருவன் நேர்மையானவனாக வாழ வேண்டும். எத்தகைய துன்பங்கள் வந்தாலும் சுயநலமில்லாது வாழ்பவன்தான் மனிதன். நீ அப்படியான மனிதனுடன் வாழ்ந்தும் அவற்றைக் கைக்கொள்ளவில்லை. மேற்கொள்ளும் செயல்களில் வெற்றி பெறுபவனுடைய திறமையை இகழ்வது ஒருவனுக்குப் பாதுகாப்பைக் கொடுக்க மாட்டாது'' என்றார் சுவாமியார்.

சுவாமியாரைத் தரிசித்து விட்டு வரும்போது கதிரேசனைக் கோயில் வாசலில் கண்டார் கனகலிங்கம்.

''ஜெயபாலனிடம் இரண்டு அலுமாரிகள் கேட்டீர்களாம். அவன் தனக்குத் தர விருப்பமில்லையென்று உங்களைக் கண்டால் கூறும்படி சொன்னான். முன்பு தருவதாக ஒப்புக் கொண்டவனாம். ஊரவை துண்டுப்பிரசுரம் ஒட்டிய பின்பு ஊருக்கு எதையும் செய்ய விரும்பவில்லை என்று சொல்லச் சொன்னான்'' என்றார் கதிரேசன்.

கனகலிங்கத்தின் முகம் மாறுபாடடைவதைக் கதிரேசன் கண்டார்; "சிவானந்தன் பத்து அலுமாரிகளும், முந்நூறு கதிரைகளும், கணனிகளும், றோணியோ இயந்திரமும் தருவதாக ஒப்புக் கொண்டவர். அவர் கொழும்பில் இருக்கிறார். அவருடன் தொடர்பு கொண்டால் அவற்றைப் பெறலாம். அவர்கள் பெரியவர்கள். பல தொழில் உள்ளவர்கள். நாம்தான் முயற்சிக்க வேண்டும். முன்பு விக்னேஸ்வரமூர்த்தி பல தடவைகள் கொழும்பிற்குச் சென்று அவரைச் சந்தித்தவர். "நீங்கள் போகலாம், அல்லது பழைய மாணவர்களில் ஒருவரை அல்லது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் உள்ள யாரையாவது அனுப்பிக் கேட்கலாம்" என்று விக்னேஸ்வரமூர்த்தி கூட்டத்திலை சொன்னவர்" என்றார் கதிரேசன்.

"முன்பு தணிகாசலத்தைத் தவிர வேறுயார் உதவி செய்தவை. விக்னேஸ்வரமூர்த்தி தன்னுடைய பணத்தைச் செலவு செய்து, சிரமத்தைப் பாராமல் தானே எல்லா இடமும் சென்று காரியம் பார்த்தவர். இப்ப ஆர் இருக்கினை?" என்றார் கனகலிங்கம்.

"அதுவும்சரிதான். பதவிக்கென்று வந்தால் எல்லாவற்றையும் செய்தல் வேண்டும்; "மேற்கொள்ளும் செயல்களில் வெற்றி பெறுபவனுடைய திறமையை இகழ்ந்து விடாமல் இருப்பது ஒருவனுக்குச் சிறந்த பாதுகாப்பைத் தரும்" என்பார்கள். இங்கு யார் இப்ப விக்னேஸ்வரமூர்த்தியை மதிக்கிறார்கள். அயலூரவனும் பிறத்தியாரும்தான் மதிக்கிறார்கள்.

ஊரவையின் மனத்தை அறிந்த விக்னேஸ்வரமூர்த்தி இப்போது எதிலும் அக்கறை காட்டுவதில்லை. அவர் நினைத்தால் சகலதையும் ஓரிரு நிமிடங்களில் செய்து முடித்து விடுவார்'' என்று கூறிவிட்டு நடந்தார் கதிரேசன்.

கனகலிங்கத்திற்கு அவமானமாக இருந்தது; ``அன்றன்று சோற்றுக்குக் கஷ்டப்படும் கிழவன் எனக்கு ஆலோசனை கூறிவிட்டுச் செல்கிறான்'' என்று நினைத்தார்; ``ஜெயபாலன் தருவதாகச் சொன்ன அலுமாரிகளைத் தரமாட்டேன் என்று கூறிவிட்டான். அவன் தான் என்ன செய்வது. ஊரவர்கள் அவன் கொடுத்தால் பரிகசிக்கிறார்கள்'' என்று நினைத்தவாறு நடந்தார் கனகலிங்கம்.

**891. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை.**

செய்ய நினைத்த செயலைச் செய்து முடிக்க வல்ல ஆற்றலுள்ள பெரியவர்களை இழந்து விடாமல் இருப்பது ஒருவனுக்குச் சிறந்த பாதுகாப்பாகும்.

## நீங்காத துன்பம்

அன்று இரவு ஜெயபாலன் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தான். அப்போது விக்னேஸ்வரமூர்த்தி தனிமையில் இருந்தார். முன்பு அவன் வந்த போது ஊர்ப் பிரமுகர்களும் உத்தியோகம் சம்பந்தமாக வந்த

சிலரும் இருந்தனர். விக்னேஸ்வரமூர்த்தி அவனை வரவேற்று நாற்காலியில் அமர்த்தினார்.

“ஐயா, நான் இங்கு நிரந்தரமாகத் தங்குவதற்காகத் தான் வந்தேன். அதனால் தான் இங்குள்ள வறிய மக்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும் கோயில்களுக்கும் உதவினேன். ஏனோ தெரியவில்லை இங்குள்ளவர்கள் எனது உதவியை எதிர்க்கிறார்கள். இது எனக்கு ஏன் என்று புரியவில்லை. நீங்கள் இந்தக் கிராமத்தில பெரியவர்; ஆற்றல் மிக்கவர். நான் இலக்கியப் பேரவைக்குக் கொடுத்த பணத்தைப் பற்றி எழுதியதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எந்தவிதமான சுயநல நோக்கமும் இல்லாமல் ஏழை எளியவர்களுக்கு உதவ வேண்டும் என்பதற்காகவே நான் உதவி வருகிறேன். இவ்வளவு காலமும் நான் என்னைப் பற்றியே நினைத்து வந்தேன். இங்கு வந்து பல பெரியவர்களுடன் பழகிய பின்புதான் எனக்குப் பொதுத் தொண்டுகள் செய்ய வேண்டுமென்ற ஞானம் பிறந்தது. கதிரேசனுடன் கதைத்த பின்புதான் நான் என்னில் உள்ள குறைபாடுகளை உணர்ந்து கொண்டேன். நான் நல்லவனாக இருந்தால் எனது சுற்றமும் நல்லதாகவே இருக்கும். அதை எனக்கு உணர்த்தியவர் கதிரேசன். நான் எனது மனைவியைப் பற்றியும் அவளது சகோதரர்களைப் பற்றியும் இதுவரை காலமும் தவறான எண்ணங்களையே கொண்டிருந்தேன். உண்மையில் அவர்கள் எல்லோரும் நல்லவர்கள். தமது தங்கையின் நல்வாழ்வுக்காகச் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்தவர்கள். அத்துடன் எனது மனைவி, எனக்காக எவ்வளவோ தியாகங்களைச் செய்தவள். எனக்காகத்தான் அவள்

என்னுடன் ஊருக்கு வந்தாள். எனது தீய செயல்களை அறிந்த எனது மைத்துனர்கள் என்னை திரும்பவும் வெளிநாட்டிற்கு வரும்படி கூறி அதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அதனால் நான் செல்லப்போகிறேன்.'' என்று கூறிவிட்டு விக்னேஸ்வரமூர்த்தியின் முகத்தைப் பார்த்தான் ஜெயபாலன்.

விக்னேஸ்வரமூர்த்தி பேசாமல் அவனது முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்; ''நான் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் ஐந்தாம் வகுப்பு வரைதான் படித்தனான். அதுவும் ஒழுங்காகப் படிக்கவில்லை. பாடசாலைக்கு உதவ வேண்டும் என்று நினைத்தேன். தற்போதய அதிபர் எனது வீட்டுக்கு வந்து பாடசாலைக்கு உதவி செய்யுமாறு கேட்டார். நான் உதவி செய்வதாகச் சொன்னேன். ஆனால் எனது உதவிகளைப் பெறக்கூடாது என்று துண்டுப் பிரசுரம் ஒட்டியபின் எனக்கு உதவி செய்யப் பயமாக இருக்கிறது, அதனால் கதிரேசனிடம் நான் உதவி செய்யமாட்டேன் என்று கூறிவிட்டேன். ஆனால் மனச்சாட்சி கேட்கவில்லை. அதனால் நான் உங்களிடம் ஐந்து இலட்ச ரூபா தருகிறேன். தேவையான பொருட்களை நீங்கள் வாங்கிக் கொடுங்கள். நான் தந்ததாகச் சொல்ல வேண்டாம். தற்போதய அதிபரின் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. அவர் ஆற்றல் மிக்க பெரியவர்கள் பலரை மதிக்காமல் நடக்கிறார். அதனால் அவர் பெரும் துன்பங்களுக்கு ஆளாகப் போகிறார். பாடசாலை நூலகத்திற்கு உதவும் படி நவராசாவைக் கேட்டவராம். முன்பு நவராசாதான் நூலகத்திற்கு உதவியவனாம். கனகலிங்கத்தின் போக்குப் பிடிக்காமையால் அவன் தனக்கு

வசதியில்லை என்று சொன்னதாகக் கதிரேசன் கூறினார்.'' என்றான் ஜெயபாலன்.

விக்னேஸ்வரமூர்த்திக்கு அவன் கூறியதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. "பொருட்களை வாங்கினால் பிரச்சினைகள் ஏதாவது வருமோ?'' என்று எண்ணினார்.

"உங்களில் எனக்கு நம்பிக்கையிருக்கு. நீங்கள் யார் தந்தது என்று இப்போதைக்குக் கூறவேண்டாம். கால நேரம் வரும் போது கூறுங்கோ. உங்களை மதிக்காததால் வேலாயுதபிள்ளை, தணிகாசலம் போன்றோர் பாடசாலைப் பக்கம் போவதில்லை. அது எனக்குத் தெரியும். ஆனால் கனகலிங்கம், "அவர்கள் இப்போது பாடசாலைப் பக்கம் வருவதில்லை" என்கிறார். யாரையும் மதித்தால்தான் அவர்களும் மதிப்பார்கள். இலக்கியப் பேரவையில் இருந்தும் என்னை நீக்கிவிடுங்கள். முன்பு அதில் நான் உறுப்பினனாக வேண்டுமென்று ஆசைப்பட்டேன். இப்போது அந்த ஆசை எனக்கு இல்லை.'' என்று கூறிய ஜெயபாலன் காசோலைப் புத்தகத்தை எடுத்து வினேஸ்வரமூர்த்தியின் பெயரில் ஐந்து இலட்சரூபாவை எழுதிக் கொடுத்தான். சிறிது தயங்கிய விக்னேஸ்வரமூர்த்தி அவனிடம் காசோலையைப் பெற்றுக் கொண்டார்.

**892. பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும்.**

ஒருவன் ஆற்றல் மிக்க பெரியாரைப் போற்றி மதிக்காமல் நடந்தால், அவனுக்கு அப் பெரியாரால் நீங்காத துன்பம் ஏற்படும்.

## கெட்டுப் போவோர்

அன்று திங்கட்கிழமை. பாடசாலை தொடங்கிய சில நிமிடங்களில் இரண்டு வாகனங்கள் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் வந்து நின்றன. அதில் இருந்து ஐந்து இலட்ச ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களை இறக்கி அதிபர் கனகலிங்கத்திடம் விக்னேஸ்வரமூர்த்தி ஒப்படைத்தார். அவ்வளவு பொருட்கள் பாடசாலைக்குக் கிடைக்குமென்று கனகலிங்கமோ, பாடசாலைச் சமூகமோ எதிர்பாக்க வில்லை; "யார் அப்பொருட்களைத் தந்தது?" என்று பலரும் பலவாறு யோசித்தனர்.

"என்மீது நம்பிக்கையும், பாடசாலையின் மீது அளவற்ற அபிமானமும் உள்ள ஒருவர் தனது பெயரை யாருக்கும் தெரிவிக்க வேண்டாம் என்ற அன்புக் கட்டளையுடன் ஐந்து இலட்ச ரூபா பணத்தை என்னிடம் தந்தார். பாடசாலைக்கு என்னென்ன பொருட்கள் தேவையென்பது எனக்கும் தெரியும். ஆதலால் நான் பாடசாலை நிர்வாகத்தைக் கேளாமல் தேவையான பொருட்களை வாங்கித் தந்துள்ளேன். மேலும் ஏதாவது பொருட்கள் தேவையானால் என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்"

என்று கூறிவிட்டு விக்னேஸ்வரமூர்த்தி சென்று விட்டார்.

வழமையாக விக்னேஸ்வரமூர்த்தி பாடசாலைக்கோ அல்லது மகாகணபதி ஆலயத்திற்கோ யாராவது ஏதாவது உதவி செய்ய விரும்பி அவரை அணுகினால் அதைப் பற்றிச் சுவாமி யாருக்கும் தணிகாசலத்திற்கும் குருக்களுக்கும் சொல்வார். அவர்கள் அப்பொருட்களைக் கொண்டு வரும்போது ஏராளமான மக்கள் குழுமி நின்று மகிழ்ச்சி ஆராவாரஞ் செய்து அப்பொருட்களைக் கையேற்பர். ஆனால் அன்று எந்தவிதமான ஆரவாரங்களுமின்றிப் பெருந்தொகையான பொருட்கள் கையளிக்கப்பட்டன. அது பலருக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்தது.

பொருட்கள் கொடுக்கப்பட்டதை அறிந்த தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் சுவாமியாரிடம் வந்தனர். சுவாமியார் அவர்கள் ஏன் வந்திருக்கிறார்கள் என்று தெரிந்து சிரித்தார்; “என்ன பாடசாலைக்குப் பல இலட்சரூபாவுக்கான பொருட்களை விக்னேஸ்வர மூர்த்தி கொண்டு வந்து கொடுத்துள்ளார். அவருக்கு யார் அப்பொருட்களை வாங்கப் பணம் கொடுத்தது என்று யோசிக்கிறீர்களா....? எனக்கும் அவர் சொல்லவில்லை..?” என்றார்.

அப்போது கனகலிங்கம் அங்கே வந்தர். “ஐந்தாறு இலட்ச ரூபாவுக்கு எமக்குத் தேவையான பல பொருட்களை விக்னேஸ்வமூர்த்தி கொண்டு வந்து தந்து விட்டுச் செல்கிறார். யார் தந்தது என்ற

விபரத்தைச் சொல்லவில்லை. அதை அறிந்தால் அவரை பாடசாலைக்கு அழைத்துப் பாராட்டலாம்'' என்றார்.

சுவாமியார் புன்னகைத்தார்; ''அதைப்பற்றி விக்னேஸ்வரமூர்த்தி யாருக்கும் சொல்லவில்லை. அவருடன் பல வருடங்கள் ஒன்றாகப் பணிபுரிந்த உங்களுக்கு அவரின் குணவியல்புகளைப் பற்றித் தெரியாது. நீங்கள் விசுவாசத்துடன் பழகியிருந்தால் சொல்லியிருப்பார். அவர் பெயருக்காகவோ புகழுக்காகவோ சேவை செய்யவில்லை. அத்துடன் இங்கு சமீப காலமாக நடைபெறும் சில நிகழ்வுகளால் அவரது மனம் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் தான் அவர் யாருக்கும் சொல்லாது கருமமாற்றி யுள்ளார். யாருக்கும் எதுவும் தெரியத் தேவையில்லை. விக்னேஸ்வரமூர்த்தி மீது அதீத நம்பிக்கையுள்ள ஒருவன் பணத்தைக் கொடுத்துள்ளான். கொடுத்தவனே தன்னை இனங்காட்டாத போது நீங்கள் ஏன் அதைப் பற்றி அலட்டிக் கொள்கிறீர்கள். எண்ணினால் எண்ணியவுடன் எதையும் சாதிக்கக் கூடிய வல்லமை உள்ளவர்களைக் கெட்டுப்போக விரும்புவனே எதிர்ப்பான். அல்லது தீங்கு செய்ய முயல்வான். ஒவ்வொரு வரும் தாம் தாம் செய்வது, மற்றவர்களுடன் பேசுவது என்பன மற்றவர்களுக்குத் தெரியாது, அல்லது விளங்காது என்று நினைக்கிறார்கள். செய்யும் செயலை நிறைவேற்றிய பின் தெரிவிப்பதே தொழில் வலிமையாகும். இடையில் வெளிப்படுத்தினால் அது தீராத துன்பத்தையே தரும்.' என்றார் சுவாமியார்.

“விக்னேஸ்வரமூர்த்தியைப் பற்றி நீங்கள் நினைத்தாலே அவர் அதை அறிந்து கொள்வார். சமீப காலமாக உங்கள் அனைவரினதும் போக்கிலும் மாற்றம் உள்ளது. விக்னேஸ்வரமூர்த்தியால் பாடசாலைக்கு இன்னும் பெரும் பெரும் உதவிகளைச் செய்ய முடியும். திரும்பவும் சொல்கிறேன். எண்ணினால் எண்ணியவுடன் பகைவரை வெல்லக் கூடிய ஆற்றல் உடையவனைக் கெட்டுப் போக விரும்பவனே எதிர்ப்பான்.” என்றார் சுவாமியார்.

“விக்னேஸ்வரமூர்த்தி எனக்கு எல்லா விடயமும் சொல்பவர். இன்று ஏன் சொல்லாமல் விட்டார்?” என்று கவலைப்பட்டார் தணிகாசலம்.

**893. கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்<br>ஆற்று பவர்கண் இழுக்கு.**

பகைவரைத் தான் நினைத்தபடி அழிக்கக் கூடிய வல்லமை பொருந்தியவனுக்குக் கெட்டுப் போக விரும்புகின்றவனே தீங்கு செய்வான்.

## கைதட்டி அழைப்போர்

கதிரேசன் கிருஷ்னனின் வீட்டுக்குச் சென்றார். அவர் சென்ற போது அங்கு நவராசா இருந்தான். அந்த நேரம் கதிரேசன் அங்கு வருவார் என்பதை எதிர்பாராத நவராசா தடுமாறினான்.

கிருஷ்னனது வீட்டுக்கு வந்த கதிரேசன், கிருஷ்னனுக்கு அருகில் சென்று அமர்ந்தார். நவராசா எழுந்து செல்ல முயற்சித்தான்.

“இரு நவராசா. நான் கிருஷ்னனுடன் சில விஷயங்களைக் கதைப்பதற்காக வந்தேன். நீ இங்கிருந்தது வாய்ப்பாகப் போய்விட்டது. இல்லாவிட்டால் உனக்கு இன்னொரு முறை சொல்லவேண்டி வந்திருக்கும். கிருஷ்னா. ஆற்றல் உள்ளவனுக்கு ஆற்றல் இல்லாதவன் தீங்கு செய்வது என்பது, எமனைக் கைதட்டி அழைப்பதைப் போன்றதாகும். நீ ஜெயபாலனின் பழையநண்பன். இளம் வயதில் இருவரும் பல அடாவடித்தனங்களில் ஈடுபட்டீர்கள். அதற்காகத்தான் அவன் உன்னை மதித்து ஏராளமான பணத்தை உனக்குத் தந்துள்ளான். அதில் நீ திருப்திப்பட்டிருத்தல் வேண்டும். நீ திருப்திப்பட்டனி. ஆனால் நவராசாவும் புஷ்பநாதனும் இலட்சுமியும் உன்னைத் தூண்டி விட்டமையால் தான் நீ குடித்து விட்டு அவனைப் பற்றிக் கேவலமாக விமர்சித்தாய்”

அப்போது நவராசா ஏதோ சொல்ல முயன்றான். அதற்குக் கதிரேசன் விடவில்லை; “நீ எதுவும் சொல்ல வேண்டாம். உனக்கு எதுவும் தெரியாது. முன்பு ஜெயபாலன் இலட்சுமியுடன் காதல் கொண்டிருந்தவன்….”

“என்ன இலட்சுமியுடன் காதல் கொண்டவனா…..?” ஆச்சரியப்பட்டான் நவராசா.

“காதல் கொண்டது மட்டுமல்ல பலகாலம் அவளுடன் வாழ்ந்தவன். பின் வெளிநாட்டுக்குச்

சென்று விட்டான். இந்த விஷயம் புஷ்பநாதனுக்குத் தெரியக் கூடாதென்பதற்காகத்தான் ஜெயபாலன் புஷ்பநாதனின் நட்பைத் துண்டிக்க முயன்றான். அதை நீயும் புஷ்பநாதனும் தவறாக நினைத்து விட்டீர்கள். அத்துடன் இலட்சுமியும் ஜெயபாலனைப் பழிவாங்க நினைத்தாள். அதற்காக அவள் கிருஷ்னனைப் பயன் படுத்தினாள். கிருஷ்னன் நல்லவன். இலட்சுமியைக் காட்டிக் கொடுக்க விரும்பாதவன். அதனால் தான் இலட்சுமிக்காக அவன் குடித்து விட்டுப் பல இடங்களிலும் ஜெயபாலனை அவமதித்தான். இலக்கியப் பேரவையில் அவமதித்ததைப் பொறுக்க முடியாத ஜெயபாலன் பட்டணத்தில் உள்ள தனது நண்பர்கள் மூலம் கிருஷ்னனுக்கு அடிப்பித்தான். அதை ஊரவர் நவராசாவும் புஷ்பநாதனும் கஜேந்திரனும் தான் செய்தனர் எனக் கதைத்தனர்'' மூச்சு விட்டார் கதிரேசன்.

''ஜெயபாலனைப் பற்றி எழுதி ஒட்டியதும் நீங்கள்தான்.'' அதிர்ந்து போனான் நவராசா; ''ஆனால் உங்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நான் ஜெயபாலனுக்கு அவனது மனைவியும் அவளது சகோதரர்களும் சேர்ந்து வெளிநாட்டிலிருந்து கணனியில் அடித்து இங்கு அனுப்பி ஒட்டியதாக சொன்னேன். அதை அவன் நம்பி விட்டான். இவ்வளவும் போதும். இப்போது நீங்கள் அவனது மனைவிக்கு அவனைப் பற்றித் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கிறீர்கள். ஒன்றை மட்டும் யோசித்துப் பாருங்கள். ஜெயபாலன் மானத்திற்கு அஞ்சாதவன். அத்துடன் இந்த ஊரை விட்டுப் போகப் போகிறான். அத்துடன் எந்தத் தீய செயல்கள் வெளிப்பட்டாலும் அவன்

கவலைப்படவோ வெட்கப்படவோ மாட்டான். அத்துடன் அவனது மனைவிக்கு அவனைப் பற்றித் தெரிந்ததால் தான் அவள் அவனுடன் வந்துள்ளாள். ஜெயபாலன் ஆற்றல் உள்ளவன்; பணபலம் மிக்கவன். பணத்தால் அவன் எதையும் செய்யத்தயங்க மாட்டான். புஷ்பநாதன் தான் தனக்கு எதிரி என்று நினைத்தால் அவன் இலட்சுமியோடு கூடி வாழ்ந்ததை அச்சமின்றிச் சொல்லி விடுவான். இதனால் எவ்வளவு பிரச்சினைகள் வரும். அத்துடன் புஷ்பநாதனுக்கும் உனக்கும் கிருஷ்னனுக்கும் அவன் ஆட்களை வைத்து அடிப்பிக்கமாட்டான் என்று சொல்வதற்கில்லை. அதனால் தான் நான் அவனைத் தேடிச் சென்று கதைக்கிறேன்''.

கிருஷ்னனுக்கு அதைக் கேட்கப் பயமாக இருந்தது; ''அப்பு சொல்வது உண்மைதான். அவன் எதற்கும் அஞ்சாதவன். கொலை கூடச் செய்வான். முன்பு ஈவிரக்கமில்லாமல் பல தீமைகளைச் செய்தவன்.'' பயந்து நடுங்கினான் கிருஷ்னன்.

''நவம் இன்றோடு எல்லாவற்றையும் விட்டுவிடு. தேவையில்லாமல் எங்கோ செல்லும் யமனைக் கைதட்டி அழைக்காதே. அது உங்கள் மூவருக்கும் கெடுதியைத்தான் தரும்'' என்றார் கதிரேசன்.

''உண்மை. இனிமேல் நான் உங்களுடன் சேரமாட்டன். புஷ்பநாதனுக்கு நீசொல்லு'' என்றான் கிருஷ்னன்.

---

**894.கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு**

**ஆற்றாதார் இன்னா செயல்.**

ஆற்றல் உள்ளவருக்கு ஆற்றல் இல்லாதவர்கள் தீங்கு செய்வது, எமனைக் கை காட்டி அழைப்பதைப் போன்றது ஆகும்.

## தப்ப முடியாதவர்கள்

வித்தியா கஜேந்திரனைப் பலநாட்களாகக் காணாமையால் மிகவும் துக்கப்பட்டாள். அன்று அவளை அவன் துவிச்சக்கரவண்டியில் ஏற்றி வந்ததை வேலாயுதபிள்ளை கண்டபின் பல பிரச்சினைகள் உருவாகின. அதனால் கஜேந்திரன் மிகவும் குழப்ப மடைந்தவனாகக் காணப்பட்டான். அவளைச் சந்திப்பதையும் தவிர்த்து வந்தான். அதனால் துயரம் கொண்ட வித்தியாவால் எதுவும் செய்ய முடியவில்லை. அவன் எழுதிய கதைகளை வாசிப்பதே அவளது பொழுது போக்காக இருந்தது. அவன் எழுதிய கதையை எடுத்துப் பிரித்தாள்.

"நக்கீரா, நாகபுரியின் தளபதி அருண்பாண்டியன் மகதநாட்டு இளவரசனுடன் சேர்ந்து கொண்டு நாகபுரிக்கு எதிராகப் பல சதி முயற்சிகளில் ஈடுபடுகிறான். அவனது தீய செயல்களால் நாகபுரி மக்கள் சொல்லொணாத் துயரத்தக்குள்ளாகியுள்ளனர். அதனால் எனது மாமனாரான விஷ்வப் பிரமன் மிகுந்த கவலை கொண்டிருக்கிறார். அதனால் காயத்திரி மிகவும் வருந்துகிறாள். என்னுடன் கலகலகப்பாகப் பழகுகிறா ளில்லை. எந்த வேளையிலும் கவலையோடு இருக்கிறாள். அவளது மனத்தில்

பூரணமான புன்னகையைக் கண்டு பலநாளாகி விட்டது. உடனடியாக உனது தலைமையில் தெரிந்தெடுக்கப்பட்ட பத்து வீரர்களை அழைத்துச் சென்று அருண்பாண்டியனைக் கைது செய்து வா. அல்லது அவனைக் கொன்றுவிடு. எனது அன்பான காதல் மனைவி துன்பப்படுவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவள் தான் என் இன்னுயிர். அவளது துயரத்தைத் தீர்க்காத நான் வாழ்வதில் அர்த்தமில்லை. அவனுக்குக் கொடுக்கும் தண்டனையில் இருந்து மற்ற நாட்டரசர்கள் எமக்கெதிராகவும் எனது மனைவியின் நாட்டிற்கெதிராகவும் தீமைகளைச் செய்ய நினைக்கவே கூடாது'' என்று கொதித்தான் ஏமநாதன்.

அதைப்படித்த வித்தியா கரைந்து போனாள். அவன் எதை எழுதுவதனாலும் அவளின் பண்புகள் குணங்களைப் பற்றி எழுதாமல் விட மாட்டான். அத்துடன் அவள் மீது கொண்ட காதலை வெளிப்படுத்தாமலும் விட மாட்டான். அவளது கண்கள் கரைந்து ஒழுகியதால் எழுத்துக்கள் மறைந்தன. கண்ணீர்த்துளிகள் தாளில் விழுந்ததால் அதைத் துடைத்தாள் அதனால் எழுத்துக்கள் அழிந்தன.

‘‘அரசே, மிக்க வலிமையுடைய மன்னரைப் பகைத்தவன், அவனிடமிருந்து தப்புவதற்காக எங்கே சென்றாலும் அவனால் வாழ முடியாது'' என்று தர்ம சாஸ்திரம் கூறுகிறது. அதனால் கவலை கொள்ளாதிர்கள். தங்களின் கட்டளைப்படி நான் தெரிந்தெடுத்த பத்து வீரர்களுடன் மகத நாட்டிற்குச்

சென்று அவனைக் கைது செய்து கொண்டு வருகிறேன்'' என்றான் நக்கீரன்.

''அவனைக் கைது செய்ய வேண்டிய தேவையில்லை. அவனைக் கொன்றாலே போதும்'' என்றான் ஏமநாதன் கோபமாக.

''இல்லை அரசே, நீங்கள் மிக்க வலிமை படைத்தவர் என்பதை அவன் அறிந்து கொள்ளல் வேண்டும். அத்துடன் அவனுக்குத் துணையாக இருந்து நமக்குத் தீமைகள் பலவும்செய்யும் வீரமார்த்தாண்டன் தன்னையும் நீங்கள் கைது செய்து தமது நாட்டிற்குக் கொண்டு வந்து விடுவீர்கள் என்று பயந்து நடுங்க வேண்டும். அத்துடன் தாங்கள் தங்கள் மனைவி மீதுள்ள அளவு கடந்த காதலால் செயற்கரிய காரியங்களையெல்லாம் செய்வீகளென உலகம் நினைத்தல் வேண்டும்'' என்றான் நக்கீரன்.

பத்துத் தினங்கள் கழிந்தன. அன்று மங்களபுரி அரசசபை அவசரமாகக் கூடியது. கைது செய்யப்பட்ட அருண்பாண்டியனை அன்று சபைக்குக் கொண்டு வருவதாக நக்கீரன் ஒற்றர்கள் மூலம் அறிவித்திருந்தான். அதனால் சபையில் பரபரப் பேற்பட்டிருந்தது.

பத்து மணிக்கு நக்கீரனும் அவனுடன் கூடச் சென்றவர்களும் மங்கள புரி அரச சபையினுள் நுழைந்தனர். முதலமைச்சர் வெங்கடேசர் திகைத்துப் போயிருந்தார். ஏமநாதனைத் தவிர வேறு யாருக்கும் அவன் அருண்பாண்டியனை கைது செய்ய வீரர்களை மகதநாட்டிற்கு அனுப்பிய விபரம்

தெரியாது. தன் முன் நடப்பது கனவா என்று நினைத்தார் வெங்கடேசர். எதிரியின் நாட்டில் நுழைந்து எதிரியைக் கைது செய்து கொண்டு வருவதானால் எவ்வளவு திறமை வேண்டும். அவர் தனது காலத்தில் அப்படியான ஒருசெய்தியை இதுவரை கேட்டதில்லை.

சபைக்குள் வீரமுடன் நுழைந்த நக்கீரன் சொன்னான்; "அரசே, தங்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து விட்டோம். மிக்க வலிமை படைத்த மன்னனுக்குத் தீங்கு செய்ய நினைப்போர் எந்த நாட்டில் எவ்வளவு பாதுகாப்புக்களோடு வாழ்ந்தாலும் அவனால் தப்பி வாழ முடியாது என்பதை நிரூபித்துள்ளோம். இனித் தண்டனை வழங்குவது தங்களின் பொறுப்பு" என்றான் நக்கீரன் வீராவேஷத்துடன்.

புன்சிரிப்புடன் ஏமநாதன் அருண்பாண்டியனின் முகத்தைப் பார்த்தான். அவனது முகத்தில் மரண பீதி காணப்பட்டது. முகம் கறுத்துக் கண்கள் வீங்கியிருந்தன.

---

**895. யாண்டுச்சென்று யாண்டும் உளராகார் வெம்துப்பின்**
**வேந்து செயற்பட் டவர்.**

---

மிக்க வலிமையுடைய அரசர்களின் சினத்திற்கு ஆளானவன், அவனிடமிருந்து தப்புவதற்காக எங்கே சென்றாலும் வாழ முடியாது.

**தப்பிப் பிழைக்க முடியாது**

மங்களபுரி அரச சபையில் அன்று விஷவப் பிரமனும் பிரசன்னமாகியிருந்தார். காயத்திரி தனது தகப்பனைப் பார்த்தாள். அவரின் முகத்தில் என்றுமில்லாத மகிழ்வு இருந்தது. அப்படி அவர் மகிழ்ந்திருந்ததை இதுவரை அவள் காணவில்லை. திரும்பித்தனது கணவனைப் பார்த்தாள். பத்துத்தினங்களுக்கு முன் அவன் அந்தப் புரத்திற்குச் சென்ற போது அவள் பஞ்சணையில் குப்புறப் படுத்திருந்தாள். அவனைக் கண்டதும் அவளது துயரம் அழுகையாக வெடித்தது. விம்மி விம்மி அழுதாள்.

மிகவும் உற்சாகமாக அவளுடன் கூடியிருக்க வேண்டும் என்று குதூகலித்ததுடன் வந்த ஏமநாதனுக்கு அவளின் அழுகை உற்சாகத்தைக் குறைத்தது. உடலுள் உணர்வுகள் ஆர்ப்பரித்து மோதியதால் அவளது அழகு மிகுந்த உடலைக் கற்பனை செய்து கொண்டு வந்த ஏமநாதனுக்கு மிகுந்த ஏமாற்றமாக இருந்தது. அவள் கடந்த சில நாட்களாக அவனுடன் மகிழ்ச்சியாக் கூடியிராததால் அவனது உணர்வுகள் அடங்க மறுத்தன. வேண்டா வெறுப்பாக மகிழ்வின்றி அவள் அவனை அணைப்பதால் அவனது உணர்வுகள் மாறுபட்டன; “அன்பே, நீர் படும் துயரம் எனக்குப் புரிகிறது. அதற்காக என்னைத் தண்டிக்கலாமா? எழுந்து மகிழ்வுடன் சிரியும்”

காயத்திரி சிணுங்கினாளே தவிரப் பஞ்சனையால் எழும்பவில்லை. அது ஏமநாதனுக்கு வருத்தத்தைக் கொடுத்தது. கற்பனைகள் சிதறியதால் அவனுக்குச் சினம் வந்தது. எனினும் அதைச் சிரமப்பட்டு அடக்கிவிட்டுச் சொன்னான்;

‘‘நாம் மகிழ்ந்திருக்க வேண்டுமானால் அருண்பாண்டியனைச் கொல்லுதல் வேண்டும். அவனைக் கொன்று விட்டுத்தான் உம்மை அணைப்பேன்’’ என்று கூறிவிட்டுச் சென்று விட்டான்.

காயத்திரி மோக மிகுதியுடன் அவனைப் பார்த்தாள். உடனே அச்சபையிலேயே அவனை அணைத்து முத்தமிட வேண்டுமென அவளது உணர்வுகள் துடித்தன. வீரபுரிஷனான அவனைப் பார்க்கப் பார்க்க அவளுள் உணர்வுகள் கிளர்ந்து கொண்டேயிருந்தன.

‘‘அரசேஇ உங்கள் பெயரைக் கேட்டாலே மகதநாட்டு வீரர்கள் நடுங்குகிறார்கள். அருண்பாண்டினைப் பற்றி நாம் அங்கு சென்றதும் விசாரித்தோம். அவன் பெண்பித்தன். வீரமார்த்தாண்டனது பேருதவி அவனுக்கிருந்தததால் அவன் மகத நாட்டு வீரர்களுடன் இரவு வேளைகளில் வீடுகளுக்குச் சென்று பெண்களோடு தகாத உறவு கொண்டு வந்தான். இதை அறிந்ததும் நாம் மிகவும் மகிழ்ந்தோம். அவனது நடமாட்டங்களை உன்னிப்பாகக் கண்காணித்தோம். அவர்களுக்கு நாட்டில் பலத்த எதிர்ப்பிருப்பதையும் அறிந்து கொண்டோம். அதனால் அந்நாட்டு வீரர்களோடு நட்புப் பூண்டோம். வீரர்களோடு அருண்பாண்டியன் நட்புரிமையுடன் நடக்காது கொடுமையாக நடந்ததால் அவர்களே திட்டமிட்டு அவனைக் கொலை செய்யச் சந்தர்ப்பம் பார்த்திருந்தனர். இரண்டு தினங்களுக்கு முன்பு அருண்பாண்டியன் ஒரு வீட்டிற்குச் சென்ற போது நாம் மறைந்திருந்து அவனைக் கைது செய்தோம். மக்களும் வீரர்களும் அவனை நாம் கைது

செய்தமையைக் கண்டு மிகவும் மகிழ்ந்தார்கள். மகத நாட்டின் மீது படையெடுத்தால் ஓரிரு நாட்களில் கைப்பற்றி விடலாம். தங்களின் ஆட்சிப் பெருமையை உணர்ந்த மகத நாட்டு மக்கள் தங்களின் படையெடுப்பை மிகவும் விரும்புகிறார்கள்'' என்றான் நக்கீரன்.

''நக்கீரா, உன்னைப் போன்ற சுத்தமான நாட்டுப் பற்று மிகுந்த வீரர்கள் பலர் இருப்பதால் தான் நான் எதிரிகளை மிகச் சுலபமாக அடக்க முடிகிறது. உனக்கும் உன்னோடு வந்த வீரர்களுக்கும் பல பரிசுகள் அளிக்கப்படும். அப்பரிசுகள் அளிக்கப்படும் நாள் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படும்'' என்றான் ஏமநாதன்.

''அருண்பாண்டியா, நீ எமது நாட்டின் தளபதியாக, எனது நம்பிக்கைக்குரியவானக இருந்து கொண்டு எனக்கும் நாட்டிற்கும் எவ்வளவு தீமைகளைச் செய்தாய். தீமைகள் செய்த ஒருவன் எங்கு சென்று ஒளித்தாலும் அவனால் தப்பிக்க முடியாது என்பதை இப்பொழுது உணர்ந்திருப்பாயென நினைக்கிறேன். ஒருவன் தீயால் எரிக்கப்பட்டாலும் ஒருகால் உயிர் பிழைத்து வாழ முடியும், ஆனால் ஆற்றல் மிகுந்தவர்களைப் பகைத்தால் அவனால் தப்பிப் பிழைக்கவே முடியாது. எனது மருமகன் ஆற்றல் மிகுந்த ஓர் அரசன். அவனால் எதையும் செய்ய முடியும். நீ செய்த கொடுமைகளுக்கு உனக்கு மரண தண்டனை வழங்கப்படல் வேண்டும். இரக்க சிந்தனை உள்ள அரசர் உனக்கு என்ன தண்டனை வழங்குவாரோ தெரியவில்லை'' என்று நாகபுரி

மன்னர் சொல்லும் போது ஏமநாதன் குறுக்கிட்டுச் சொன்னான்; ‘‘இப்படியானவர்களுக்கு மரண தண்டனை தான் வழங்கவேண்டும். அருண்பாண்டியனுக்கு மரணதண்டனை வழங்குகிறேன்’’ என்றான் ஏமநாதன்.

**896. எரியால் சுடப்படினும் உய்வுஉண்டாம்; உய்யார் பெரியார்ப் பிழைத்து ஒழுகு வார்.**

தீயினால் எரியுண்டாலும் ஒரு வேளை உயிர் பிழைத்து வாழலாம், ஆனால் ஆற்றல் மிகுந்த பெரியவரிடம் தவறு செய்பவர் ஒரு போதும் தப்பிப் பிழைக்க முடியாது.

## உறுதியாக அழிவோர்

நாகபுரி அரசர் மகிழ்வுடன் பலத்துச் சிரித்தார்; ‘‘இன்று தான் நான் மிகவும் மகிழ்வுடன் இருக்கிறேன். நாகபுரி மக்களும் மகிழ்வாாக்ள். துரோகியான உன்னை நம்பி நான் உனக்கு எவ்வளவு உதவிகள் புரிந்தேன். பொன்னையும் மணிகளையும் திரவியங்களையும் அள்ளித் தந்தேன். விளைச்சல் மிகுந்த நிலங்களைத் தந்தேன். ஆயிரக்கணக்கான பசுக்களைத் தந்தேன். இருந்தும் உனது ஆசை அடங்காததால் மகத நாட்டு இளவரசனோடு சேர்ந்து அவனிடமும் பொருட்களைப் பெற்றாய். அப்போதும் உனது ஆசை அடங்கவில்லை. நாகபுரியில் இருந்து தப்பிச் சென்று மகதநாட்டில் இருந்து கொண்டு எனக்கும் எனது நாட்டு மக்களுக்கும் எவ்வளவு

கொடுமைகளைச் செய்தாய். எமது நாட்டு மக்கள் இரவில் கண்ணயரப் பயந்தனர். நீ வீடுகளைக் கொள்ளை யிட்டதோடு அழகிய பெண்கள் பலரைக் கடத்திச் சென்றாய். மகத நாட்டில் நீ சீரும் சிறப்புமாக வீரமார்த்தாண்டனுக்குரிய பெருமைகளைப் பெற்று வாழ்ந்தாய். திரண்ட செல்வங்கள் உன்னிடம் குவிந்திருந்தன. இருந்த போதும் என்ன பயன். தகுதி மிக்க ஆற்றல் மிக்க எம்மைப் பகைத்ததால் இன்று எல்லாவற்றையும் இழந்து கைதியாக நிற்கிறாய். உனது செயல்கள் மற்றவர்களுக்குப் பாடமாக அமைதல்வேண்டும்'' என்றான் நாகபுரி மன்னன்.

அருண்பாண்டியன் எதுவும் பேசாது நின்றான். அவனது உணர்வுகள் யாவும் அடங்கி விட்டன. இப்படியொரு நிலைதனக்கு ஏற்படும் என்று அவன் எதிர்பாராமையால் அவனால் அதிர்ச்சியில் இருந்து மீள முடியவில்லை.

அளவுக்கதிகமாக ஆசைப்படுவோரும் நம்பிக்கைத் துரோகிகளும் மனம் கூசாமல் தீமைகள் செய்பவர்களும் அழிக்கப்பட வேண்டியவர்கள். உன்னைச் சிறையில் அடைத்து வைப்பது பயனற்றது. அதனால் தான் எமது நீதியான மன்னர் உனக்கு மரண தண்டனை வழங்கினார். தொடர்ந்தும் மகதநாட்டு இளவரசன் நாகபுரிக்குத் தீமைகள் செய்வானானால் அவனுக்கும் உனது நிலைதான் விரைவில் ஏற்படும்'' என்றார் முதலமைச்சர்.

சபை கலைந்தது. ஏமநாதன் அந்தப் புரத்திற்குச் சென்றான். படுக்கை அறை அன்று திருமண நாளைவிடச் சிறப்பாக

அலங்கரிக்கப்பட்டிருந்தது. தூரத்தில் செல்லும் போதே நறுமலர்களின் வாசம் அவனது மூக்கைத் துளைத்தது. ஆர்வத்துடன் ஏமநாதன் உள்ளே நுழைந்தான். காயத்திரி என்றுமில்லாதவாறு அன்று மிக்க அழகுடன் மிளிர்ந்தாள். அவனைக் கண்டதும் உற்சாக மிகுதியால் ஓடிச் சென்று அவனைக் கட்டியணைத்தாள்.

"அன்பானவரே, உங்களைக் கணவனாக அடைய நான் முற்பிறப்பில் பெருந்தவஞ் செய்திருத்தல் வேண்டும். எனது பெற்றோர் மகதநாட்டு இளவரசன் வீரமார்த்தாண்டனுக்குத் தான் என்னைத் திருமணம் செய்ய நினைத்திருந்தனர். அன்று இந்திரவிழாவில் உங்களைக் கண்டு காதல் கொள்ளாவிட்டால் நான் அவனைத்தான் திருணம் செய்திருப்பேன். நீங்கள் என்மீது கொண்ட அன்பை ஒவ்வொரு செயலிலும் காட்டி வருகிறீர்கள். எனக்காகத்தான் நீங்கள் உயிர் வாழ்கிறீர்கள். நான் பெரும் பேறுகள் பலவற்றைப் பெற்றுள்ளேன். எனது நாட்டிற்குத் தீமை வந்தபோது அது உங்களுக்கு வந்ததாக நினைத்துந் செயற்பட்டீர்கள். எதிரியை அந்த நாட்டிற்குச் சென்று கைது செய்து வந்து சிரச்சேதஞ் செய்ய எவ்வளவ துணிவு வேண்டும். நீங்கள் ஆற்றல் உள்ளவர். சகலாகலா வல்லவர்" ஏமநாதனின் நெஞ்சுள் முகத்தைப் புதைத்து முனகினாள் காயத்திரி.

அதை வாசிக்க வித்தியாவுக்கு வெட்கமாக இருந்தத. அவள் கஜேந்திரனின் நெஞ்சில் சாய்ந்திருந்து கூறுபவற்றையெல்லாம் ஒன்றும் விடாமல் எழுதியிருந்தான்.

தொடர்ந்து வாசித்தாள் வித்தியா; ‘‘அன்பே, நீர் என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர். உமது மகிழ்வுதான் எனது வாழ்வு. நீர் கடந்த சில நாட்களாக மனவருத்தத்துடன் என்னோடு கூடியிருந்த போது எனது வாழ்வே எனக்குக் கசந்தது. உமது சந்திர வதனம் வாட்டமுற்ற போது எனது இதயத்தாமரை சுருங்கிவிட்டது. வாழ்நாள் முழுவதும் நீர் வாடாமல் இருத்தல் வேண்டும். மகிழ்வுடன் சிரித்தல் வேண்டும். இல்லாவிட்டால் எனது உயிர் போய்விடும். அதனால் தான் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டேன். என்னைப் போலவே எனது வீரர்களும் மிக்க திறமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். உமக்காக நான் வானத்தையும் வில்லாக வளைப்பேன்’’ என்றான் ஏமநாதன்.

வித்தியா சிரித்தாள்; ‘‘கஜேந்திரன் தன்னுடன் கதைக்கும் போது கூறுபவை யெல்லாவற்றையும் கதையில் அப்படியே எழுதியுள்ளார். வெட்கம் கெட்டவர்’’ என்று நினைத்தாள். அவளுக்கு வெட்கமாக இருந்தது.

**897.வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்**
**தகைமாண்ட தக்கார் செறின்.**

தகுதியால் உயர்ந்த ஆற்றல் மிக்க பெரியவரின் கோபத்திற்கு ஆளானவர், பல பெருமைகளையும், பெரும் பொருளையும் உடையவராக இருந்தாலும் பயனற்றவராவார்.

## குடும்பத்துடன் அழிவோர்

மகத நாட்டுக்குள் வந்து நுளைந்து அருண்பாண்டியனைக் கைதுசெய்து மங்கள புரிக்குக் கொண்டு சென்று அங்கு அவனைச் சிரச்சேதம் செய்து விட்டார்கள் என்ற செய்தி காட்டுத் தீயைப் போல மகதநாடெங்கும் பரவியது. மகதநாட்டு மன்னன் மகேந்திரவர்மன் அதைக் கேட்டுத் திகைத்துத் திகிலடைந்து விட்டான். உடனடியாக அவன் அரச சபையைக் கூட்டினான்.

‘‘மங்களபுரி மன்னன் ஏமநாதனது படைவீரர்கள் எமது நாட்டுள் சட்ட விரோதமாகப் புகுந்து பல நாட்கள் தங்கியிருந்து இங்குள்ள எமது நாட்டின் முக்கிய பிரமுகர் ஒருவரை கைது செய்து கொண்டு சென்று, அவனைச் சிரச்சேதஞ் செய்திருக்கிறார்கள் என்றால் அவர்களின் அடாவடித்தனத்தை என்னென்று சொல்வது. அருண்பாண்டியன் மங்களபுரிக்குத் தீமை செய்யவில்லையே. அப்படியிருக்க எப்படி எமது நாட்டுள் அவர்கள் அனுமதியின்றி நுழைய முடியும்? இதற்கு நாம் தகுந்த நடவடிக்கை எடுக்கா விட்டால் நாளை அவர்கள் அரண்மனையுள்ப் புகுந்து இளவரசனையும் கைது செய்து கொண்டு சென்று விடுவார்கள்’’ என்றான் மகேந்திரவர்மன்.

சபையில் நிசப்தம் நிலவியது. யாரும் எதுவும் பேசவில்லை. யாராவது ஏதாவது சொல்வார்கள் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த மன்னர், யாரும் எதுவும் சொல்லாததால் சொன்னார்; ‘‘ஒரு நாட்டிற்குப் பிரச்சினை கொடுப்போர் இன்னொரு நாட்டிலிருந்தால், அதை அந்நாட்டு மன்னனுக்கு அறிவித்து நடவடிக்கை எடுக்க

வேண்டுமே தவிரத் தான் தோன்றித் தனமாக நடந்து கொள்ளக் கூடாது. இந்த அத்துமீறிய செயல் இன்னொரு முறை நடவாதவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்'' கர்ஜித்தான் மகேந்திரவர்மன்.

''நிதானமாக இருந்து யோசித்துப் பார்த்தால் நாம் செய்யும் தவறுகள் புலனாகும். நாகபுரியின் மாப்பிள்ளை தான் மங்களபுரியின் அரசர். நாகபுரி இளவரசியை நமது இளவரசருக்குத் திருமணம் செய்ய நீங்கள் விரும்பினீர்கள். ஆனால் நாகபுரி இளவரசி மங்களபுரி மன்னனை விரும்பி விட்டாள். அதனால்நாகபுரி மன்னர் திருமணம் செய்து வைத்தார். திருமணம் நடக்கு முன்பே அருண்பாண்டியன் தனது நாட்டிற்குப் பல துரோகச் செயல்களைச் செய்துள்ளான். பின் அவன் செய்த செயல்களுக்காகப் பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டான். அங்கிருந்து தந்திரமாகத் தப்பி வந்து நமது நாட்டு இளவரசரோடு சேர்ந்து நாகபுரிக்குப் பல தீங்குகளைச் செய்து வந்தான். இதைப் பொறுக்க முடியாததால் தான் இத்தனையும் நடைபெற்றது. நாம் எமது நாட்டில் இருந்து கொண்டு அயல் நாட்டுக்குத் தீமைகள் பல புரிந்தால் இப்படியான நிகழ்வுகள் தான் நடக்கும். அது தர்ம மீறலல்ல'' என்றார் முதலமைச்சர்.

மகேந்திரவர்மன் சிறிது நேரம் யோசித்துப் பார்த்தான். ''அருண்பாண்டியன் எமது நாட்டில் மறைந்திருந்து கொண்டு நாகபுரிக்குப் பல தீமைகள் செய்தது பிழைதான்'' என்று அவரது உள்மனம் கூறியது.

“மன்னா, தாங்களுக்கு இதைப் பற்றி நான் பலமுறை கூறியுள்ளேன். இளவரசரும் அருண்பாண்டியனும் சேர்ந்து நாகபுரிக்குச் செய்யும் கொடுமைகளைச் சொல்லில் அடக்க முடியாது. அவற்றை நீங்கள் உரிய நேரத்தில் கவனித்திருந்தால் இந்த நிலை உருவாகி யிருக்கமாட்டாது. மங்களபுரிப்படை வீரர்களுக்கு நமது நாட்டு மக்கள் பல உதவிகளைச் செய்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் அருண்பாண்டினும் நமது இளவரசரும் சேர்ந்து நமது நாட்டு மக்களை வருத்தியதுதான். அதனால் நாம் இனியாவது கவனமாகச் செயற்பட வேண்டும். மங்களபுரி அரசன் மாவீரன்; செயற்திறன் மிக்கவன்; சிறந்த படைப்பலம் உடையவன். அவனை எம்மால் எதிர்க்க முடியாது. மலை போன்ற மிக உயர்வான நிலையில் இருப்போரைக் குறைவாக மதிப்பீடு செய்வோர் எப்படிப் பட்டவராக இருந்தாலும் அவர்கள் தம் குலத்தோடு அழிவது உறுதி. எனவே ஏமநாதனது பலத்தைக் குறைத்து மதிப்பிடாது அவனை மதித்து நடத்தல் வேண்டும். இல்லாவிட்டால் மகதநாடு நாகபுரியோடு இணைக்க்ப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை” என்றார் முதலமைச்சர்.

மகேந்திரவர்மனுக்கு உள்ளூரப் பயமாக இருந்த போதும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது சொன்னான்; “ஏமநாதன் எம்மீது படையெடுத்தால் எமது படைகள் அவனை எதிர்த்து முறியடிக்கத் தயாராக இருத்தல் வேண்டும்”

**898. குன்றுஅன்னார் குன்ற மதிப்பின் குடியொடு**
**நின்றன்னார் மாய்வர் நிலத்து.**

மலை போன்ற உயர்வான நிலையில் இருக்கும் பெரியோரைக் குறைவாக மதிப்பவர் பெருந்தகுதியுடையவராக இருந்தாலும் அவர் தம் குடும்பத்தோடு அழிவர்.

## சிறந்தவரின் சீற்றம்

“ஏமநாதன் எமது நாட்டின் மீது படைபெயடுத்தால் எமது வீரர்கள் போராடாது சரணடைந்து விடுவார்கள். அந்த நிலையில் தான் எமது படை நிலைமை உள்ளது. அரசே! தங்களுக்கு நாட்டின் நிலைமை தெரியாது. இவ்வளவு காலமும் அதைத் தெரியப்படுத்த இளவரசர் விடவில்லை. இளவரசரும் அருண்பாண்டியனும் சேர்ந்து நாட்டு மக்களுக்குச் சொல்லொனாத் துன்பங்களைச் செய்து வந்தனர். நாம் யாராவது உங்களுக்குச் சொல்லிவிடுவோம் என்று நினைத்து அவர்கள் இருவரும் எம்மை மிரட்டிக் கொண்டே இருந்தனர். அதனால் நாம் எதையும் சொல்ல முற்படவில்லை. சென்றவாரம் எமது அம்மன் கோயிற்குருக்களின் மகளை அருண்பாண்டியனும் இளவரசருமாகச் சேர்ந்து கடத்தி வந்தனர். சேனாதிபதி சுந்தரசிங்கன் படை வீரர்கள் பலருடன் சென்று அவளைக் காப்பாற்றி மறைவிடம் ஒன்றில் வைத்துள்ளான். அவளைக் காப்பாற்றியது சுந்தரசிங்கன் என்று இதுவரை யாருக்கும் தெரியாது. அவள் கடத்தப்பட்ட விஷயத்தையும் நாம் உங்களுக்குக் கூறவில்லை. கூறினால் அருண்பாண்டியனும் இளவரசனும் எம்மைக் கொன்டு விடுவார்கள் என அஞ்சினோம். இனிமேலும் நாம் பொறுத்துக் கொண்டிருக்க

முடியாது. இளவரசர் நாட்டு மக்களுக்குச் செய்யும் தீங்குகளுக்காக உடனே அவர் கைது செய்யப்படல் வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் புரட்சி செய்வார்கள்'' என்றார் முதலமைச்சர்.

''அரசே, அம்மன் கோயிற் குருக்கள் பெரும் அறிவாளி; வேத உபநிடதங்களைக் கசடறக் கற்றவர்; உயர்ந்த கொள்கைகளை உடையவர்; மக்களின் ஆதரவைப் பெற்றவர். அத்துடன் சிறந்த பூசகர். 'அம்மனுடன் நேரடியாகக் கதைப்பவர்' என்று மக்கள் சொல்கிறார்கள். அப்படியான உத்தமர் சீற்றங் கொண்டால் இந்த நாடு அழிந்து விடும். மன்னன் ஆட்சி அழிந்து கெட்டு விடுவான். இதை நான் சொல்லவில்லை. நாட்டில் உள்ள பெரியவர்கள் சொல்கிறார்கள். அதனால் மேலும் மேலும் தவறுகள் நிகழாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.'' என்றான் சுந்தரசிங்கன்.

மகேந்திரவர்மன் அதிர்ந்து போனான். அவனால் அவர்கள் கூறுவதை நம்ப முடியவில்லை; ''நான் நீங்கள் கூறுவதை நம்ப மாட்டேன். அப்படி அவர்கள் நடந்தால் எனக்குக் கூற வேண்டியது தானே'' என்றான்.

''உங்களுக்குக் கூறினால் எங்கள் தலை சீவப்பட்டிருக்கும். அளவுக்கதிகமாக இளவரசர் மேல் அன்பும் நம்பிக்கையும் கொண்ட உங்களுக்கு நாம் எப்படி அவற்றைக் கூறுவது? நாம் இளவரசரைப் பற்றிக் கூறும் போதெல்லாம்; ''அவன் சிறு வயதினன். முடி சூடியதும் ஒழுங்காக

அரசாள்வான்'' என்பீர்கள். அதனால் தான் நாம் கூறப் பயந்தோம்'' என்றார் முதலமைச்சர்.

''இதைக் கூற எமக்கு வெட்கமாக இருக்கிறது. மங்களபுரியிலிருந்து வீரர்கள் வந்த போது எமது நாட்டு மக்கள் அவர்களுக்குத் தேவையான அத்தனை உதவிகளையும் செய்திருக்கிறார்கள். அருண்பாண்டியனை அவர்கள் கைது செய்ய உதவி செய்துள்ளார்கள். அத்துடன் அவர்கள் நாட்டின் எல்லையைக் கடக்கும் வரை அச்செய்தியை மறைத் திருக்கிறார்கள். அவர்கள் மங்களபுரிப் போர் வீரர்களிடம் மகத நாட்டைக் கைப்பற்றும் படி கேட்டிருக்கிறார்கள். மங்களபுரி அரசன் எமது நாட்டைக் கைப்பற்ற முயன்றால் எமது மக்களும் போர் வீரர்களும் அவர்களுக்குச் சார்பாகவே தொழிற்படுவார்கள்.'' என்றான் சுந்தரசிங்கன்.

''இன்னும் காலங் கடந்து விடவில்லை. மக்களுக்குத் துன்பஞ் செய்த அருண்பாண்டியன் சிரச்சேதஞ் செய்யப்பட்டு விட்டான். இளவரசனைத் தர்மத்தை மீறக் கூடாதென்பதற்காக மங்களபுரிப்படையினர் கைது செய்யாது விட்டு விட்டுச் சென்றுள்ளனர். அதனால் தாங்கள் இளவரசனை அழைத்துப் புத்திமதி கூறுங்கள். இனி எக்காரணங் கொண்டும் போர் வீரர்களுடன் சேர்ந்து நாகபுரிக்குச் சென்று நாகபுரி மக்களுக்குத் தீமைகள் செய்ய வேண்டாமென்று கூறுங்கள். மீறி இளவரசன் நாகபுரிக்குச் சென்றால் அவரும் சிரச்சேதம் செய்யப்படுவார் என்பதை மறந்து விடாதீர்கள்; ''அம்மன் கோயிற் குருக்கள் அம்மன் மீது பழியைப் போட்டுள்ளார்; ''அம்மன்

உண்மையான தெய்வமாக இருந்தால், நான் அம்மனை வழிபடுவது உண்மையாக இருந்தால் எனது மகளைக் கடத்தியவர்கள் அழிந்து போவார்கள்'' என்று சபித்துள்ளார். அருண்பாண்டியன் அழிந்து போனான். இளவரசரும் குருக்களின் சாபத்திலிருந்து தப்புவது கடினம். உயர்ந்த பண்புடைய சிறந்தவர்கள் சீற்றம் கொண்டால், "நாட்டைட ஆளும் அரசனும் இடையிலே தன் ஆட்சி அழிந்து கெடுவான். என்பதைத் தங்களுக்கு மீண்டும் நினைவுபடுத்துகிறேன். தயவு செய்து உடனே நடவடிக்கை எடுங்கள். அம்மன் கோயில் குருக்களைச் சாந்தப்படுத்துங்கள்'' என்றார் முதலமைச்சர்.

---

**899. ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து வேந்தனும் வேந்து கெடும்.**

---

உயர்ந்த கொள்கைகளை உடைய பெரியவர் கோபம் கொண்டால் நாட்டை ஆளும் அரசனும் இடை நடுவே தன் ஆட்சியை இழந்து கெடுவான்.

**உயர்ந்தவரின் சீற்றம்**

மகேந்திரவர்மனுக்குப் பயமாக இருந்தது. அம்மன் கோயிற் குருக்கள் சாந்தமானவர்; அம்மனின் மீது அளவு கடந்த பக்தியுள்ளவர்; மந்திரங்கள் தெரிந்தவர்; வைத்தியம் பார்ப்பவர்; அதனால் மக்கள் அவரின் மீது பேரன்பு கொண்டுள்ளனர். மக்கள் எல்லோரையும் அவர் ஏற்றத் தாழ்வின்றி மதிப்பதால், மக்கள் அவரின்

மீது உயிரையே வைத்திருந்தனர். அவரின் மகளை அருண்பாண்டியனும் வீர மார்த்தாண்டனும் கடத்தியதை நினைக்க அவரின் உயிர் போய் விடும் போல இருந்தது; "நல்லவேளை சுந்தரசிங்கன் அவளைக் காப்பாற்றினான். அவன் காப்பாற்றாவிட்டால் எனது மானம்மரியாதையாவும் போயிருக்கும்" என்று நினைத்தான் மகேந்திரவர்மன்.

"மன்னா, அரசகுமாரன் ஒருவன் முடிசூடுமுன் இராமாயண காவியத்தில் இராமன் வாழ்ந்து காட்டிய முறைகளைப் பற்றிக் கற்றல் வேண்டும். இராமாயணத்தில் இராமன் ஓர் அவதாரமூர்த்தி என்று இராமனுக்கும் அவனோடு வாழ்ந்த அனைவருக்கும் தெரியும். ஆனால் இராமன் தான் ஒரு மனிதன் என்றே நினைத்தான். அதுபோல அவனுடன் கூடியவாழ்ந்தோரும் அவனை மனிதன் என்றே நினைத்தனர். ஓர் அரசகுமாரனுக்குரிய கடமை, பண்புகள், செயல்கள் போன்றவற்றில் இராமன் எப்போதென்றாலும் தன் தெய்வத் தன்மையைக் காட்டவில்லை; தன் அதிகாரத்தைக் காட்டவில்லை. எல்லாச் சந்தர்ப்பத்திலும் அவன் நீதியாகவே நடந்து கொண்டான். அதை அரச குமாரர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும்" என்று அரச சபைக்குரு கூறியது மகேந்திரவர்மனின் காதுகளில் ஒலித்தது. "அளவு கடந்த வலிமை உடையவராக இருந்தாலும், பலம்மிக்கவர்களது துணையுடைய வர்களாக இருந்தாலும், உயர்ந்த பண்புடையவர்களின் சினத்திற்கு ஆளானால் அவர்களால் ஒருபோதும் தப்பிப் பிழைக்க முடியாது". மகேந்திரவர்மனின் தந்தையார் அடிக்கடி அவருக்குக் கூறுவது அவரின் நினைவுக்கு வந்தது.

“பெரும் பிழை செய்து விட்டேன். மகனின் மீதிருந்த அளவற்ற பாசத்தால் நாட்டு மக்களுக்கும், நாட்டில் வாழும் உயர்ந்தவர்களுக்கும் கேடு செய்து விட்டேன்” என்று மனம் வருந்தினான் மகேந்திரவர்மன்.

“மன்னா, தவறுகள் நிகழ்வது இயல்பு. அதைத் தவறென்று உணர்ந்து சம்பந்தப்பட்டவர்களிடம் மன்னிப்புக் கோரினால் அத்தவறால் வரும் கேடு இல்லாமல் போய் விடும். அதனால் தாங்கள் அம்மன் கோயிற் குருக்களிடம் நடந்த தவறிற்காக மன்னிப்புக் கோருங்கள். அத்துடன் இளவசருக்குத் தகுந்த தண்டனை வழங்குங்கள். வாலிப மிடுக்கில் தான் செய்பவையெல்லாம் சரியென்று இளவரசர் நினைக்கிறார். இளவரசரானாலும் குற்றம் செய்தால் தண்டனை பெற வேண்டுமென்பதை அவருக்கு உணர்த்துங்கள்” என்றார் முதலமைச்சர்.

“இளவரசரைக் கைது செய்து சிறையில் அடையுங்கள்” என்று உத்தவிட்ட மகேந்திரவர்மன், முதலமைச்சருடன் அம்மன் கோயிலுக்குச் சென்றார்.

அம்மன் கோயிற் குருக்ள சோகத்துடன் அம்மனின் வாசலில் இருந்தார். அவரது விழிகளால் கண்ணீர் ஒழுகியபடி இருந்தது; “குருவே, நடந்த தீமைகள் எதுவும் எனக்குத் தெரியாது. எல்லோரும் எனக்கு மறைத்து விட்டனர். தனது பெண்பிள்ளைக்கு ஏற்பட்ட தீங்கை ஒரு தந்தையால் இறக்கும் வரை மறக்க முடியாது. நான் உங்களுக்கு ஆறுதல் கூற வரவில்லை. உங்களிடம் மன்னிப்புக் கோரவே வந்தேன்.

அருண்பாண்டியனுக்கு அம்மன் தண்டனை வழங்கி விட்டார். அதே போல இளவரசனையும் பிடித்துச் சிறையில் அடைத்துள்ளேன். நீங்கள் என்ன தண்டனை கொடுக்கச் சொல்கிறீர்களோ அதை நான் கொடுக்கிறேன்'' என்று அவரது பாதங்களில் விழுந்தார் மகேந்திரவர்மன்.

''எனது மகளுக்கு ஏற்பட்ட களங்கத்தை நீக்க வேண்டுமானால் இளவரசர் அவளைத் திருமணம் செய்தல் வேண்டும். எனது மகளுக்குக் கேடு நேராவிட்டாலும், மக்கள் அவள் கெட்டுப் போய் விட்டதாகக் கருதுகிறார்கள். அவளுக்குப் நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை இப்போது அவளைத் திருமணம் செய்ய முடியாதென்று கூறிவிட்டான். இன்னொருவனுக்குச் செய்து கொடுத்தாலும் அவளைத் திருமணம் செய்பவன் அவளை நம்ப மாட்டான். அதனால் தான் இளவரசரைத் திருமணம் செய்யுமாறு கூறினேன்'' என்றார் குருக்கள்.

''அரசனானாலும் உயர்ந்த பண்புகளில் சிறந்தவர்களின் மனதைப் புண்படுத்தினால் அவனால் தப்பிப் பிழைக்க முடியாது'' என்று கேள்விப்பட்டுள்ளேன். அதனால் அடுத்த முகூர்த்தத்தில் இத்திருமணம் நடக்கும். முதலமைச்சரே உடனே நாடு முழுவதிற்கும் முரசறைந்து தகவலைத் தெரிவியுங்கள்'' என்றார் மன்னர். குருக்கள் மனம் மகிழ்ந்து சிரித்தார்.

---

**900. இறந்துஅமைந்த சார்புடையர் ஆயினும் உய்யார்**
**சிறந்துஅமைந்த சீரார் செறின்.**

---

உயர்ந்த பண்புகளில் சிறந்த பெரியவர்கள் சினந்தால், அளவு கடந்து பக்க பலமாகத் துணைகள் பலவும் கொண்டவராலும் தப்பிப் பிழைக்க முடியாது.

## கடமை செய்ய முடியாதவர்

காலை எட்டுமணியாகியும் துர்க்கா நித்திரையால் எழும்பவில்லை. முதல்நாள்இரவு தொலைக்காட்சியில் இரவு இரண்டு மணிவரை படம் பார்த்தமையால் அவளால் எழும்ப முடியவில்லை. சுப்பிரமணியம் வந்து எழுப்பியதால் நவராசா எழுந்து வந்தான்.

“தோட்டத்தில் இன்று பத்துப் பேர் வேலைக்கு வருவதாகச் சொன்னபடியால் காலை உணவாகத் தோசை சுட ஆயத்தம் செய்தேன். ஆனால் அவர்கள் இன்று மரண வீடு காரணமாக வரமுடியாது என்கிறார்கள்..”என்றான் சுப்பிரமணியம்.

“மரண வீடென்றால் வரமுடியாது தானே. எனக்கும் துர்க்காவுக்கும் தோசை கொண்டுவா. மிகுதியை நீங்கள் சாப்பிடுங்கள்…” என்று கூறிவிட்டுச் சென்று பல் துலக்கி முகங்கழுவினான் நவராசா. பின் தேநீர் தயாரித்துக் கொண்டு படுக்கை அறைக்கு வந்தான். துர்க்கா பல்துலக்கி குளித்து விட்டு வந்திருந்தாள். நவராசா தேநீரை நீட்டினான். துர்க்கா அதை வாங்கி ஒரு வாய் குடித்து விட்டுச் சொன்னாள்; “மிகவும் சுவையாக இருக்கிறது. நான் அதிஸ்டசாலி” சிரித்தாள். அந்தச்

சிரிப்பில் மிகுந்த மோகம் கொப்பளித்தது. தேநீர்க் கோப்பையை வைத்து விட்டு அவளின் அருகே நெருங்கி வந்தான். சந்தண வாசமுடைய சவர்க்காரமிட்டு அவள் குளித்ததால் சந்தணவாசம் அவனது மூக்கைத் துளைத்தது. இரவு படத்தில் வந்த நாயகியைப் போல அவள் மிகமிகக் கவர்ச்சியாக இருந்தாள். குளித்து விட்டு வந்த பின்பும் அவள் இரவு அணியும் ஆடையை அணிந்திருந்தமையால் அவளது பொலிவான அங்கங்கள் நவராசாவுக்குக் கிளர்ச்சியை உண்டுபண்ணின. மெல்ல அவளது தோளில் கையை வைத்தான். துர்க்கா மோகத்துடன் சிணுங்கினாள். “இன்று தோட்டத்தில் வேலை இல்லையா..? இரவு என்னை ஒழுங்காகப் படம் பார்க்கவும் நீங்கள் விடவில்லை… காலை எழுந்தவுடனும் …. தோட்டத்திற்குப் போங்கோ… இன்று தோட்டத்தில் ஏதோ வேலை நடப்பதாகச் சொன்னீர்கள்..” தனக்கு அவன் அங்கிருப்பது விருப்பமில்லை என்பதைப் போல மோக மிகுதியுடன் சிணுங்கினாள்.

“துர்க்கா, ஆண்களைக் கைக்குள் வைத்திருத்தல் வேண்டும். அவர்கள் பெண்கள் விஷயத்தில் மிகவும் பலவீனமானவர்கள். அவர்களுக்குக் காமம் வரும் போது நீ நோயாளியாக இருந்தாலும ்தினை அளவு கூடப் பிணங்கக்கூடாது. எந்த நேரமும் அவர் உன்னையே நினைத்து உன் அணைப்பை விரும்பி உன்னைச் சுற்றிக் கொண்டிருத்தல் வேண்டும். அந்த நிலை வந்து விட்டால் அவர் உனக்கு அடிமையாகி விடுவார். நீ அவருடன் ஒத்துழைக்கும் அளவிற்கு

அவர் உன்னை நேசிப்பார்'' என்று இலட்சுமி சொன்னது அவளுக்கு நினைவில் வந்தது.

இலட்சுமி சொன்ன பின் அவள் அப்படி நடந்து பார்த்தாள். புலியைப் போல உறுமிக் கொண்டிருந்த நவராசா அதன்பின் நாய்க்குட்டியைப் போல அடங்கிப் போனான். முன்பென்றால் அவனைத் தோட்ட வேலை செய்ய வேண்டாமென்று சொன்னால் கேட்க மாட்டான். ஆனால் இப்போது அவனின் விருப்பத்திற்கேற்றவாறு அவள் படுக்கயறையுள் நடந்து கொள்வதால் மற்றவையெல்லாம் அவளின் விருப்பப்படியே நடந்தன. ''இப்போது தோட்டத்திற்குச் செல்'' என்று சொன்னாலும் போகிறார் இல்லை'' என்று நினைக்கத் துர்க்காவுக்குச் சிரிப்பு வந்தது.

''ஏன் சிரிக்கிறீர்? உமது சிரிப்பைக் கண்டது எனது உணர்வுகள் பொங்குகின்றன.'' பிதற்றினான் நவராசா.

பேச்சளவில் பிணக்கம் கொண்டவளைப் போலக் காட்டிக் கொண்ட துர்க்கா, தனது பொய்யான நடத்தையை விட்டு விட்டு அவனை விரைந்து தழுவினாள். அவனுக்கு மூச்சு விடக் கஷ்டமாக இருந்தது.

பத்து மணிக்கு லிங்கேஸ்வரி சமையலுக்காக வந்த போது, நவராசாவும் துர்க்காவும் படுக்கை அறையிலேயே இருந்தனர். லிங்கேஸ்வரி பத்து மணிக்கு வீட்டுக்குத் தினமும் வருவதால் துர்க்கா அவள் வருமுன் தனது இரவு உடையை மாற்றி விடுவாள்.

சீலை அணிந்து நெற்றியில் திலகமிட்டுத் தேவதை போல நின்ற துர்க்காவை “இன்னொரு முறை அணைக்க வேண்டும்” என்று நினைத்தான் நவராசா.

‘‘எனக்குப் பசிக்குது’’ என்றாள் துர்க்கா. நவராசாவும் துர்க்காவும் சாப்பாட்டறைக்கு வந்த போது சுப்பிரமணியம் சாப்பாட்டு மேசையில் தோசை கொண்டு வந்து வைத்திருந்தான்.

‘‘செத்த வீட்டுக்குப் போகவில்லையா....? நேற்று செத்ததால் காலை ஒன்பது மணிக்கு எடுத்து விட்டார்கள்’’ என்று கேட்டாள் லிங்கேஸ்வரி

‘‘யார் செத்தது? காலையில் சுப்பிரமணியம் சொன்னவன்’’ என்றான் நவராசா.

‘‘என்ன உங்களுக்குத் தெரியாதா..? இராசகோபாலின் தகப்பன். இப்போது அவரின் உடல் சாம்பராகியிருக்கும்’’ என்றாள் லிங்கேஸ்வரி.

‘‘அப்படியா...? இராசகோபால் எனக்கு நெருங்கிய சொந்தக்காரன். நேற்றே போயிருக்க வேண்டும். இப்ப போட்டு வாறன்...’’ என்று புறப்பட்டான் நவராசா.

‘‘கனநேரம் அங்கே நிற்கவேண்டாம். செத்த வீடுகளில் குடித்து விட்டுத் தேவையில்லாமல் அடிபடுவார்கள். போறதும் வாறதுமாக வந்திடுங்கோ’’ என்றார் துர்க்கா.

“இராசகோபாலு வின் வீட்டில் சண்டை பிடிக்க யாரும் இல்லை. அதோடு சுடலைக்குச் சென்றவர்களும் வந்து தத்தமது வீட்டுக்குச் சென்றிருப்பார்கள்” என்றாள் லிங்கேஸ்வரி.

“நான் வாறன்” என்று புறப்பட்டான் நவராசா.

“கெதியாய் வாருங்கோ” குழைந்தாள் துர்க்கா.

அதைப் பார்க்க லிங்கேஸ்வரிக்கு எரிச்சலாக இருந்தது. அவள் வந்த நாளில் இருந்து துாக்காவையும் நவராசாவையும் கவனித்தாள்; “நவராசா துாக்காவைப் பெரிதும் விரும்பி அவளுக்கு அடங்கி, அவள் சொல்வதைத் வேதவாக்காகக் கேட்டு நடக்கிறான். இவன் உருப்படமாட்டான். தனது நாளாந்தக் கடமைகளையும் செய்யமாட்டான். மனைவிக்கு மதிப்புக் கொடுக்கத்தான் வேண்டும். இது அடிமைத்தனம்” என்று நினைத்தாள் துர்க்கா.

**901.மனைவிழைவார் மாண்பயன் எய்தார், வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது.**

மனைவியிடம் பெறும் இன்பத்தை விரும்பி அவளின் சொற்படி நடப்பவர் சிறந்த பயனை அடைய மாட்டார்; கடமையைச் செய்ய விரும்புபவரின் வேண்டாப் பொருளும் அதுவே.

**வெட்கத்திற்குரியது**

நவராசா இராசகோபாலுவின் வீட்டுக்கு வந்த போது சுடலைக்குச் சென்றவர்களெல்லோரும் சுடலையால் திரும்பி வந்து தத்தமது வீடுகளுக்குச் சென்று விட்டனர். இராச கோபாலுவும் மனைவியும் பிள்ளைகளும் தணிகாசலமும் கதிரேசனும் வேறு சில இரத்த உறவினர்களும் அங்கு இருந்தனர்.

நவராசாவைக் கண்டதும் வள்ளியம்மை பெருங்குரலெடுத்து அழுதாள். பின் ஒப்பாரி வைத்தாள்; ‘‘ஊரை ஆண்ட ராசா உலகை விட்டுப் போன செய்தி அவர் சுடலை சென்ற பின்புதான் உன்னை வந்தடைந்ததோ….? நேற்று வருவாயென வழி மீது விழி வைத்தேன். உன்னைத் தூக்கி வளர்த்தவரின் பொன்னான உடல்காண ஓடோடி வந்திருந்தால் பேரும் புகழும் பேசப்பட்டிருக்கும். யார் மறித்தார் சொல்லிவிடு? ஊரார் மறித்தாரோ…? உன்னை வந்தடைந்த பெருஞ் செல்வம் மறித்ததோ…..?’’ பலத்து ஒப்பாரி வைத்தாள் வள்ளியம்மை.

‘‘எனக்குத் தெரியாது’’ என்றவாறு கட்டிப் பிடித்து அழும் வள்ளியம்மையை விலக்கிவிட்டு முற்றத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியொன்றில் வந்தமர்ந்தான் நவராசா.

கதிரேசன் தானிருந்த இடத்திலிருந்து எழுந்து வந்து அவனுக்கு அருகில் இருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டார்.

‘‘நவம், சில பிரச்சினைகளை நாம் மிகவும் அவதானமாகக் கதைத்தல் வேண்டும். தர்மலிங்கம்

காலமானது உண்மையில் உனக்கத் தெரியாதா...? நேற்றுத் தொடக்கம் பறை மேளம் அடிக்கிறார்கள். அதன் சத்தம் உனக்குக் கேட்கவில்லையா...? இன்று உனக்குத் தோட்டத்தில் பத்துப் பதினைந்து பேர் வேலை செய்வதற்கு வரவிருந்தனர். அவர்களுக்கு நீ காலை உணவு தயாரிக்கச் சொல்லிச் சுப்பிரமணியத்திற்குச் சொன்னாய். அவன் இன்று காலை உனது வீட்டுக்கு வந்து செத்த வீடு ஆகையால் தொழிலாளர்கள் வரமாட்டார்கள் என்று சொன்னான். அப்போது நீ யார் செத்தது என்று கேட்டிருக்கலாம். ஏன் நீ கேட்கவில்லை? ஊருக்குள் வேண்டியவர்கள் யாராவது இறந்தால் தொழிலாளர்கள் வேலைக்கு வராமல் நிற்பார்கள். இனத்தவர்கள் அல்லாவதர்கள் காலமானால் வேலை களுக்குச் செல்லு முன் செல்வார்கள்; இல்லாவிட்டால் வேலையால் வந்து செய்வார்கள். அல்லது பிரேதம் எடுக்கும் நேரம் வருவார்கள். இதெல்லாம் சாதாரண விஷயங்கள். இது கூடவா உனக்குத் தெரியாது?'' கவலைப்பட்டார் கதிரேசன். நவராசா அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தானே தவிர எதுவும் பேசவில்லை. அவன் ஏதாவது சொல்வான் எனக் காத்திருந்த கதிரேசன் அவன் எதுவும் சொல்லாததால் மிகுந்த கவலைப்பட்டார்.

``நவம். நீ இப்போது மிகவும் சந்தோசமாக வாழ்வதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அத்துடன் ஊர் விஷயங்களையும் கவனித்தல் வேண்டும். தர்மலிங்கம் உனது இரத்த உறவினன். உன்னை அவர் தூக்கி வளர்த்தவர். அதனால் நேற்று நீ இங்கு வரவில்லை என்று பலரும் குறைப்பட்டனர். மனைவியைப் பெரிதும் விரும்பி,

அவளின் சொல்லை ஆராயாமல் கேட்டு நடப்பவர்கள் தமது கடமைகளைச் சரிவரச் செய்ய மாட்டார்கள். அத்துடன் அவளின் பெண்மையை விரும்பி அதற்கு அடிமைப்பட்டு வாழ்பவன் ஊராரின் கேலிக்கு இடமாவான். நேற்று அதுதான் இங்கு நடந்தது. எனது காதில் கேட்கும்படியாகப் பலர் கதைத்துச் சிரித்தனர். "ஒவ்வொருவனும் தத்தமக்குரிய கடமைகளைப் பெரிதாக எண்ணுதல் வேண்டும். அப்படி எண்ணாமல் மனைவியின் விருப்பத்தைப் பெரிதாக மதிப்பவனின் செல்வம் கூட பெரும் வெட்கத்துக் குரியதாகி வேதனையைத்தரும்" என்று பெரியவர்கள் சொல்வார்கள். நான் உனது வீட்டிற்கு வந்து சொல்யிருப்பேன். அல்லது யாராவது ஒருவரிடம் சொல்லியனுப்பியிருப்பேன். முன்பு நடேசு இறந்த போது நான் வந்து உனக்குச் சொல்ல, உனது மனைவி எனக்கு முன்னால் என்ன சொன்னவள்? "அந்த வீடுகளுக்கெல்லாம் போகாதைங்கோ. சாப்பாட்டுக்கு வழியில்லாதவர்கள், தெருக்களில் குடித்து விட்டுச் சண்டைபிடிப்பார்கள். உங்களுக்கும் சாராயம் தருவார்கள். பின் சாப்பாடும் தருவார்கள். இப்படியானவர்களின் வீடுகளுக்குப் போகக்கூடாது" என்று துர்க்கா சொன்ன வார்த்தைகள் நவராசாவின் காதுகளில் ஒலித்தது.

"நாம், ஊரவரையும், இனத்தவரையும் அயலவரையும் மதிக்க வேண்டும். அவர்கள்தான் தேவையான சமயங்களில் உதவுவார்களே தவிர உனது பணம் உதவாது. இதை உனக்குத் தனிமையில் சந்தித்துச் சொல்ல விரும்பினனான். சொல்லிவிட்டேன். இனி யோசித்து நட" என்று கூறிவிட்டு எழுந்தார் கதிரேசன்.

“நாளைக்கு இரவு அப்பாவுக்குச் சமைத்துப் படைக்கப் போகிறோம் வந்திடு” என்று இராசகோபால் நவராசாவுக்கு அருகில் வந்து சொன்னான்.

“கட்டாயம் வருவன்” என்று கூறினான் நவராசா.

**902. பேணாது பெண் விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.**

தனது கடமைகளைப் பெரிதாக விரும்பாமல் மனைவியின் பெண்மையைப் பெரிதாக மதிப்பவனின் செல்வம் வெட்கத்திற்குரியதாகிப் பெரும் வேதனையைத் தரும்.

### நாணும் நிலை

நவராசா வீட்டுக்கு வந்த போது முற்றத்தில் அலங்கார தேவதையாகத் துர்க்கா நின்றாள்; “குளித்துவிட்டு வாருங்கள். சாரமும் துவாயும் வெளியே எடுத்து வைத்துள்ளேன். குளியல் அறைக்குள் செல்லாதீர்கள். வெளியே லிங்கேஸ்வரி கிடாரத்தில் நீர் நிரப்பி வைத்திருக்கிறாள்” என்றாள் துர்க்கா.

அவன் குளித்து விட்டு வந்த போது ஆவி பறக்கும தேநீருடன் நின்றாள் துர்க்கா. அவளது செய்கையை நினைக்க நவராசாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. புன்சிரிப்புடன் அதை வாங்கிக் குடித்தான். முன்பென்றால் அவன் மரண

வீடுகளுக்குச் செல்வதே அவளுக்குத் தெரியாது. அவன் மரண வீடுகளுக்குச் சென்று வந்து குளியலறையில் சென்று குளிப்பான். தேநீர் கொடுக்கவோ சாப்பாடு போட்டுக் கொடுக்கவோ யாரும் இருக் கமாட்டார்கள். ஆனால் இப்பொழுது துர்க்கா அவனுடன் அருகில் மிக நெருங்கியிருந்து உணவு பரிமாறுவாள். உணவு பரிமாறம் போது அவளது உடல் அவனின் மீது சாய்ந்திருக்கும். அதனால் சில சமயங்களில் உணவு உண்பதை நிறுத்திக் கையைக் கழுவிவிட்டு அவளைத் தழுவுவான்.

“தர்மலிங்கம் ஒருவழியில் எனக்கு மாமா முறை. நேற்றுத் தெரிந்திருந்தால் சென்றிருக்கலாம். நேற்று லிங்கேஸ்வரி சமையலுக்கு வராததால் அறையைப் பூட்டி விட்டு இருந்தமையால் எதுவும் தெரியாமல் போய்விட்டது” என்றான் நவராசா.

துர்க்கா மிகவும் கவர்ச்சியாகச் சிரித்தாள். அதில் மோகம் மிகுந்திருந்தது. நவராசா அவளது அழகான சிவந்த உதடுகளைப் பார்த்தான். அவை மேலும் சிவந்து மோக மிகுதியுடன்துடிதுடித்தன; “நீர் சொல்லாமல் சிரித்தாலும், உம்மைக் கடந்து உமது உதடுகள் எனக்குச் செய்தி சொல்லும். இப்போது உமது உதடுகளுக்கு உறவு தேவையாம்...” காதுள் கிசுகிசுத்தான் நவராசா.

எதுவும் பேசாது கீழுதட்டைப் பற்களால் கடித்தாள் துர்க்கா. அப்படி அவள் உதட்டைக் கடித்தால் நவராசா அவளது இரசிகனாகி அவளது முகத்தை உற்றுப் பார்த்து இரசிப்பான். அந்த அழகான கவர்ச்சி மிக்க முகத்தைத் தினமும்

எத்தனையோ தரம் பார்த்தாலும் அவனுக்கு சலிப்பு ஏற்படுவதில்லை. மாறாகப் புத்துணர்ச்சியும் புதுமையும் ஏற்படும்.

“செத்த வீட்டில் என்ன நடந்ததென்று சொல்லவில்லையே” என்று கேட்டாள் துர்க்கா.

“வள்ளியம்மை பலமாக ஒப்பாரிவைத்தாள். அதில் நான் வரவில்லை என்று முறையிட்டாள். கதிரேசு அப்பு ஏசினார். நாளைக்குச் சமைத்துப் படைக்கப் போகிறார்களாம் வருமாறு இராசகோபாலு கூறினான்” என்றான் நவராசா.

“அங்கு ஆடு, மாடு, கோழியெல்லாம் வெட்டிக் காய்ச்சுவார்கள். கள்ளும் சாராயமும் எடுப்பார்கள். எல்லோரும் வயது வித்தியாசமின்றி குடித்து விட்டுக் கும்மாளம் போடுவார்கள். அதனால் நீங்கள் அங்கே போக வேண்டாம். நான் அரிசியும் காய்கறிகளும் பருப்பும் தேங்காய்களும் வாங்கி வைத்திருக்கிறேன். சுப்பிரமணியத்தை வந்து எடுத்துக் கொண்டு சென்று கொடுக்கச் சொல்லி லிங்கேஸ்வரியிடம் சொன்னனான்” என்றாள் துர்க்கா.

“உமக்கு எல்லாம் தெரியும்...” என்றான் நவராசா. அவனது மனதுள் கதிரேசன் கூறிய வார்த்தைகள் எவையும் அப்போது இருக்கவில்லை; “நேரில் துர்க்காவைப் பார்க்கின்ற போது யாரும் ஏதாவது கூறினால் அவற்றை மறந்து போய்விடுகிறேன். அவளைக் காணாத வேளைகளில் தான் பிறர் கூறுவது நியாயமாக எனக்குத் தோன்றுகிறது” என்று நினைத்தான் நவராசா.

லிங்கேஸ்வரி சமையல் முடித்து வீட்டுச் செல்லும் போது துர்க்கா சொன்னாள்; "லிங்கேஸ் மறந்து போகாமல் சுப்பிரமணியத்திட்டைச் சொல்லிவிடு. நாளைக்கு எட்டு ஆகையால் சமைத்துப் படைப்பார்கள். இன்றே கொண்டு சென்று கொடுத்தல் வேண்டும்" என்றவள்; "இஞ்சேருங்கோ.... இஞ்சேருங்கோ" என்றாள்.

"என்ன?" என்றவாறு நவராசா அங்கு வந்தான்.

"அரிசி காய்கறிகளுடன் காசும் ஓர் ஆயிரம் ரூபா குடுப்பம்" என்றாள்.

"சரி" என்று தலையாட்டினான் நவராசா.

"இவர் தலையாட்டும் பொம்மைதான். மனைவியிடம் காரணமின்றி தாழ்ந்து நடக்கும் இழிந்த தன்மை ஒருவனுக்கு எப்போதும் சிறப்பைத் தராது" என்று எண்ணியவாறு சென்றாள் லிங்கேஸ்வரி.

இரண்டு நாட்களின் பின்பு தணிகாசலம் நவராசாவைத் தோட்டத்தில் சந்தித்தார். எனினும் அவனைக் காணாதது போலச் சென்றார். அது நவராசாவுக்குத் தெரிந்தது; "ஏன் அவர் அப்படி நடக்கிறார்?" என்று புரியாது; "தணியண்ணை" என்று அழைத்தான்.

"ம், சொல்லு" என்றார் தணிகாசலம்.

அவரின் வார்த்தைகளிலும் வித்தியாசம் இருப்பதை உணர்ந்தான் நவராசா. எனினும் அதைக் காட்டிக் கொள்ளாது; “உங்களை இப்போ காண முடிவதில்லை” என்றான்.

“ஏன் நான் வீட்டில் ஒளித்தா இருக்கிறேன்? தினமும் முன்பு போலச் செய்வதெல்லாவற்றையும் தவறாமல் செய்து வருகிறேன்” என்றார்.

நவராசா எதுவும் கதைக்காது சிறிது நேரம் நின்றான் பின்; “நான் வாறன்” என்று சொல்லிவிட்டு நடந்தான். தணிகாசலத்தின் மனது துடித்தது. அதை அடக்கிப் பார்த்தார் முடியவில்லை. அதனால்; “நவராசா” என்று அழைத்தார்.

நவராசா நின்று திரும்பிப் பார்த்தான். தணிகாசலம் சிலகணங்கள் தனது மனதுடன் பேராடினார். பின்பு; “நவம், எப்பொழுதும் ஆண்மகன் தனது எண்ணப்படி வாழப் பழகிக் கொள்ளல் வேண்டும். அதற்காக மனைவியைப் புறக்கணிக்குமாறு கூறவில்லை. நீ அன்று தர்மலிங்கத்தின் செத்தவீட்டுக்கு வரவில்லை. எட்டுச் செலவுக்கும் வரவில்லை. யாரோ ஒருவனிடம் பொருட்களைக் கொடுத்து விட்டாய். தர்மலிங்கம் உனது இரத்த உறவினன். நீ கட்டாயம் வந்திருத்தல் வேண்டும். மனைவியிடத்துக் காரணமின்றி ஆண்மையை இழந்து தாழ்ந்து நடக்கும் இழிவான தன்மை உடையவர்களுக்கு, நல்லவர்களிடையே மதிப்பிராது. அவர்களைக் கண்டு நாணும் நிலைதான் உண்டாகும்” என்று கூறிவிட்டு நடந்தார் தணிகாசலம்.

**903. இல்லாள்கண் தாழ்ந்த இயல்புஇன்மை எஞ்ஞான்றும்**
**நல்லாருள் நாணுத் தரும்.**

மனைவியிடம் தாழ்ந்து நடக்கும் இழிந்த நிலை ஒருவனுக்கு எப்பொழுதும் நல்லவரோடு சேர்ந்து இருக்கும் போது நாணத்தைத் தரும்.

## மறுமைப்பயன் இல்லாதவன்

அன்று காந்திமதியினது முதலாவது சிரார்த்ததினம் சனசமூக நிலையத்தில் கொண்டாடப்பட்டது. அவள் இறந்து அன்று ஒருவருடம் பூர்த்தியாகி இருந்தது. அவள் உயிருடன் இருந்த காலத்தில் அச்சனசமூக நிலையப் பாலர் பாடசாலைக்குப் பெரும் உதவிகள் பலவற்றைச் செய்தவள்.

அவள் அப்பாலர் பாடசாலையில் கற்றுவிட்டுத்தான் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்ந்தாள். பின் அப்பாலர் பாடசாலையின் கலைவிழாக்கள், விளையாட்டுப் போட்டிகள். சமய நிகழ்வுகளுக்கு வந்து உதவிகள் பலவும் செய்வாள். அவள் உழைக்கத் தொடங்கியதும் முதல் மாதச் சம்பளத்தின் ஒருபகுதியை அப்பாலர் பாடசாலைக்குக் கொடுத்தாள்.

பாலர் பாடசாலை விழாக்கோலம் பூண்டிருந்தது. அன்று நான்கு மணிக்குச் சமய

ஆராதனைகளுடன் விழாத் தொடங்கியது. சனசமூக நிலையத் தலைவர் விழாவுக்குத் தலைமைதாங்கினார். பாலர் பாடசாலையின் அதிபர் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தலைவர் தனது தலைமையுரையில் காந்திமதி அச்சனசமூக நிலையத்திற்கும் பாலர் பாடசாலைக்கும் ஆற்றிய சேவைகளைப் பற்றி விரிவாகக் கூறினார். நவராசாவைத்தவிர அக்கிராமத்தில் உள்ள அனைவரும் அவ்விழாவுக்கு வந்திருந்தனர். தணிகாசலம் நவராசாவைத் தேடிப் பார்த்தார். அவனைக் காணவில்லை. அவரும் வேலாயுதபிள்ளையும் விழா சம்பந்தமாகக் கதைக்கவென நவராசாவின் வீட்டுக்குச் சென்றனர். நவராசா அவர்களை அன்புடன் வரவேற்று ஆசனங்களில் இருத்தினான். துர்க்கா தேநீரும் வடையும் கொண்டு வந்து கொடுத்தாள்.

‘‘காந்திமதி இறந்து ஒரு வருடமாகிறது. அவள் எமது கிராமத்திற்கு ஆற்றிய சேவை அளப்பரியது. நாங்கள் அவளது சிரார்த்தத்தினத்திலன்று ஒரு விழா கொண்டாடவுள்ளோம். அதற்காகத்தான் வந்தோம்’’ என்றார் தணிகாசலம்.

நவராசா திரும்பி அருகில் நின்ற துர்க்காவைப் பார்த்தான். அவள் உள்ளே சென்று ஆயிரம் ரூபாத் தாள் ஒன்றை எடுத்து வந்து தணிகாலத்திடம் கொடுத்தாள்.

‘‘நன்றி நவம். காசு தருவது பெரிதல்ல. விழாவுக்கான ஆயத்தங்கள் செய்தல் வேண்டும்.

முன்பு விழாக் கொண்டாடும் போது ஆறேழு நாட்களுக்கு நீ அங்கு வந்து வேலை செய்வாய். அந்த மாதிரி வந்திடு'' என்று சொல்லிவிட்டுப் புறப்ட்டார் வேலாயுதபிள்ளை.

ஆனால் நவராசா ஒருநாளும் அங்குவரவில்லை. அதை நினைக்கத் தணிகாசலததிற்கு வேதனையாக இருந்தது.

சுவாமியார் ஆசியுரை வழங்கிக் கொண்டிருந்தார்; ''அன்பானவர்களே, இன்றுடன் காந்திமதி மறைந்து ஒருவருடம் பூர்த்தியாகிறது. ஆனால் அதை என்னால் நம்ப முடியவில்லை. அவள் என்னுடன் அன்பாகவும் கலகலப்பாகவும் நகைச்சுவையுடனும் பழகுவாள். இன்றும் அவள் உயிருடன் உலாவுவது போன்றதோர் உணர்வு என் மனத்திலுண்டு. புகழ்பெற்றவர்கள் ஒருபோதும் இறப்பதில்லை. ஒவ்வொருவரினது மனங்களிலும் அவர்கள் உறைந்து வாழ்கிறார்கள். காந்திமதி இக்கிராமத்திற்குக் கணக்கிலடங்காத பல உதவிகளைச் செய்தவள். அவளது நினைவாகப் பல இடங்களில் மரங்கள் நடப்பட்டன. அவற்றில் பல இன்று பட்டு விட்டன. மரம் நடுவது முக்கியமல்ல. அதைப் பராமரிப்பதுதான் முக்கியம். அவளது நினைவாக ஓர் அன்பர் மகா கணபதி ஆலய முன்றலில் நட்ட வேப்பமரம் ஓரிரு மாதத்தில் கவனிப்பாரற்றுப் பட்டு விட்டது.'' என்று சுவாமியார் பேசிக் கொண்டிருக்கும் போது நவராசா அங்கு வந்தான். அவனுக்குச் சுவாமியார் சொல்வதைக் கேட்க வெட்கமாக இருந்தது. அவன்தான் மகாகணபதி ஆலயத்தில் அந்த வேப்பமரத்தை நட்டவன்.

“நான் நீரூற்றியிருப்பன். நீ காந்திமதி மீது கொண்ட காதல் மிகுதியால் அந்த வேப்பமரத்தை நட்டாய். பின் துர்க்காவைத் திருமணம் செய்தாய். அதன்பின் நீ அந்த வேப்பமரத்தை மட்டும் மறக்கவில்லை எல்லாவற்றையும் மறந்து விட்டாய். நீ காந்திமதியை மறந்த பின் ஏன் அந்த வேப்பமரம் உயிரோடு நிற்க வேண்டும். நீ முந்திய ஆளில்லை. இப்போது நீ கோயிலடிப் பக்கம் கூட வருவதில்லை. மக்களுடன் சேர்ந்து நடப்பதில்லை, கோயில் கூட்டங்களில் கூடக் கலந்து கொள்வதில்லை. நீ வசதியுள்ளவன்; செயல்திறன் மிக்கவன்; நல்ல உழைப்பாளி; நல்லவன். அதனால் உனது சேவை பொது நிலையங்களுக்கெல்லாம் தேவை. தயவு செய்து முன்பு போல வந்து உதவி செய். முன்பு உன்னை மதித்தவர்களெல்லோரும் இப்போது இகழ்கிறார்கள்” என்றார் தணிகாசலம்.

நவராசா சிரித்தானே தவிர எதுவும் பேசவில்லை; “எப்போதும் மனைவிக்கு அஞ்சும் மறுமைப் பயன் இல்லாதவன், செயலாற்றும் ஆண்மை உள்ளவனாக இருந்தாலும் ஒருபோதும் பெருமை அடைய மாட்டான். எனவே நீ பழையபடியும் வந்து சேவை செய்” என்றார் தணிகாசலம்.

---

**904. மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்**
**வினையாண்மை வீறுஎய்தல் இன்று.**

---

மனைவிக்கு அஞ்சி நடக்கின்ற மறுமைப் பயன் இல்லாத ஒருவன் செயலாற்றும் ஆண்மைத்

தன்மையைப் பெற்றிருந்தாலும் ஒரு போதும் அவன் பெருமை அடைய மாட்டான்.

## பயப்படுபவன்

சிவகுருநாதன் கதிரேசனிடம் வந்தார். பலநாட்களுக்குப் பின்பு அவர் கதிரேசனிடம் வந்தார். முன்பென்றால் நவராசாவை அவரது பேர்த்திக்குத் திருமணம் செய்ய வேண்டுமென்று விரும்பிய கதிரேசன் அடிக்கடி அவரின் வீட்டுக்குச் செல்வார். அந்தச் சம்பந்தம் குழம்பிய பின்பு கதிரேசனுக்குச் சிவகுருநாதனின் வீட்டுக்குச் செல்ல விருப்பமில்லை.

“வா சிவகுரு, உனது வீட்டுக்கு வரவேண்டும், வரவேண்டுமென்று நினைக்கிறனான். வெயிலுக்கை வெளிக்கிட முடியாமல் இருக்கு. இப்படி இரு” என்று ஒரு நாற்காலியை இழுத்து விட்டார் கதிரேசன்.

“நிலத்தில் இருக்கும் சௌகரியம் கதிரையில் இல்லை” என்றவாறு கதிரேசனுக்குப் பக்கத்தில் அமாந்தார் சிவகுருநாதன்.

“சொல்லப்பா. கனநாள்க் காணவில்லை. என்ன புதினம்...?” என்றார் கதிரேசன்.

“என்ரை வயதுதான் தர்மலிங்கத்திற்கு... அவன் நிம்மதியாகப் போய்விட்டான்” என்று பெருமூச்சுவிட்ட சிவகுருநாதன் சொன்னார்; “பிள்ளைகளைப் பெற்றால் கஷ்டம் தான். அதுகள்

கெட்டு நொந்து போனால் அதைப் பார்த்துச் சகிக்க முடியாமல் இருக்கும். அவன் நாகேந்திரன்... என்ரை இளையவளின்ரை மூத்த மகன். காதலித்து யாரோ ஒரு பெண்ணைக் கூட்டிக் கொண்டு வந்திட்டான். தகப்பன் அவன் திருமணம் செய்த பின் வேலையில்லாமல் சும்மாய் இருக்கக் கூடாதென்பதற்காகத் தான் செய்த தோட்டத்தில் கொஞ்சத்தைக் கொடுத்துள்ளார். விதைதானியம், இயந்திரம், பசளை எல்லாம கொடுத்தாயிற்று. இப்பா காசு வேணுமென்று சொல்கிறான். தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் இப்ப முந்தின மாதிரி இல்லை. அதனால் நீ நவராசாவிடம் ஐயாயிரம் ரூபா வாங்கித்தா. சின்னத்தம்பி என்னட்டைப் பத்தாயிரம் ரூபா வாங்கினவன். இரண்டொரு வாரத்திலை தந்திடுவன். அவன் தரத்தாறன்'' என்றார் சிவகுருநாதன்.

கதிரேசனுக்கு நவராசாவைக் கேட்கத் தயக்கமாக இருந்தது. முன்பென்றால் கேட்க முன் தரும் நவராசா இப்போ மனைவியைக் கேட்க வேண்டும் என்பான். சென்ற வாரம் அவனது தகப்பானார் விதை வெங்காயம் வாங்குவதற்காக நவராசாவிடம் இருபத்தை யாயிரம் ரூபா பணம் கேட்டார். அதற்கு அவன்; ''அப்பா, மருமகளைக் கேளுங்கோ'' என்று தயங்காமல் சொல்லிவிட்டான். அது அவருக்குப் பிடிக்கவில்லை. அதனால் சொன்னார்; ''நவம் பெற்றவர்கள் பிள்ளைகளிடம்தான் உதவி கேட்க முடியும். பிறத்தியாரிடம் கேட்க முடியாது. பெற்றோர், மதிப்பு மிக்க பெரியவர்கள் ஏதாவது உதவி கேட்டால் அதைச் செய்ய வேண்டுமே தவிர மனைவியைக் கேட்கும்படி கூறக்கூடாது. அப்படிச் சொன்னால்,

பெரியவர்கள் நீ மனைவிக்கு அஞ்சி நடப்பவனென்றே எண்ணுவார்கள். துர்க்கா எனது மருமகளானாலும் கொடுக்கல் வாங்கல்களில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்'' என்றார். அதை நினைக்க கதிரேசனுக்கு ஒருமாதிரியாக இருந்தது. அதனால் நவராசாவிடம் பணம் கேட்கத் தயங்கினார்.

''நீ முன்பு போல இப்ப இல்லை. எனக்கு அவசரமாகப் பணம் வேண்டும். நாளைக்கு வருகிறேன்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் சிவகுருநாதன்.

அன்று மாலை நவராசா வீட்டுக்கு வந்து கதிரேசனுக்கு அருகில் அமர்ந்தான். பின்தான் கொண்டு வந்த பொருட்களைக் கொடுத்தான். அவன் வந்து வெகுநேரமாகியும் அவர் கதைக்காது யோசித்துக் கொண்டிருந்தது நவராசாவுக்கு வியப்பைக் கொடுத்தது; ''என்னப்பு யோசிக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

கதிரேசன் பின்பும் சிலகணங்கள் பேசாது இருந்துவிட்டுச் சொன்னார்; ''சிவகுருநாதன், தனது பேரனான நாகேந்திரன் தோட்டம் செய்வதற்காகக் கொஞ்சப் பணம் கேட்டார்'' கதிரேசன் கூறிமுடிக்கு முன்பு நவராசா சொன்னான்; ''அப்பு உங்களுக்கு ஏன் உந்த வேலை? நாகேந்திரன் யாரோ ஊர் பேர் தெரியாதவளைக் கூட்டிக் கொண்டு வந்திட்டான். அவன் உருப்பட மாட்டான். நான் காசைத் துர்க்காவிடம் கேட்க அவள் ஆயிரத்தெட்டு விளக்கம் கேட்பாள்'' என்று சொல்லிக் கொண்டிருந்தான் நவராசா.

கதிரேசன் பெருமூச்சு விட்டார். அவரால் எதையும் பேச முடியவில்லை; ‘‘தம்பி நவம்; சிவகுருநாதனை நம்பித்தான் நான் பணங்கேட்கிறேன். அவன் எனது உற்ற நண்பன். மனைவிக்குப் பயந்து நடப்பவன் எப்போதும் மதிப்புமிக்கவர்களுக்கும் நன்மை செய்யப்பயப்படுவான். அன்று நீ உனது தந்தை கேட்ட உதவிக்கே மனைவியைக் கேட்கச் சொன்னாய். ஆனால் அவர் அவளிடம் அதைக் கேட்கவில்லை. துர்க்காவை நீ திருமணம் செய்யு முன்பும் நாம் கடன்பட்டோம். திருப்பியும் குறித்த தவணையில் கொடுத்தோம்...’’ என்று அவர் கூறும் போது நவராசா சொன்னான்; ‘‘இனிமேல் தேவையில்லாதவர்களின் விஷயத்தில் தலையிடாதங்கோ’’

**905. இல்லாளை அஞ்சுவான் அஞ்சும்மற்று எஞ்ஞான்றும்**
**நல்லார்க்கு நல்ல செயல்.**

மனைவிக்குப் பயந்து வாழ்கின்றவன் எப்பொழுதும் நல்லவர்களுக்கு நன்மையானவற்றைச் செய்வதற்கும் அஞ்சுவான்.

## சிறப்பில்லாதவன்

கதிரேசன் கவலையோடு நவராசாவைப் பார்த்தார். நவராசா அப்படிச் சொன்ன பின்பு அவரால் அவனுடன் கதைக்க முடியவில்லை. கதிரேசன் கவலையுடன் இருப்பதை உணர்ந்த நவராசா சொன்னான்; ‘‘அப்பு, உங்களுக்குத் துர்க்காவைப் பற்றித் தெரியும். நான் காசு கேட்டால்

காரணம் கேட்பாள். நான் சொன்னால் ‘‘இது உங்களுக்குத் தேவையா..?’’ என்று கேட்பாள். ஆறேழு மாதத்திற்கு முன்பு கிருஷ்னன் இரண்டாயிரம் ரூபா வாங்கியவன். இரண்டு நாளில் திரும்பித்தந்து விடுவேன் என்றவன். இப்ப ஆறேழு மாதமாச்சு. நான் காசு கேட்டால் அதைத்தான் துர்க்கா சொல்வாள். நான் மனைவிக்குப் பயந்தவனல்ல. அவளை மதிப்பவன்.’’ என்றான் நவராசா.

கதிரேசன் பதில் கூறவில்லை. அதனால்; ‘‘நான் வாறன்’’ என்றான் நவராசா.

கதிரேசன்; ‘‘ம்’’ என்றார்.

வீட்டுக்குச் செல்லும்வரை நவராசா, கதிரேசனது நடவடிக்கைகளைப் பற்றி நினைத்துக் கொண்டு சென்றான். சிவகுருநாதன் மிகவும் நேர்மையானவர். அவருடன் கதிரேசன் கொண்ட உறவு அவனுக்குத் தெரியும். அதனால்; ‘‘துர்க்காவிடம் கேட்டுப் பார்ப்பம்’’ என்று நினைத்தான்.

அவன் சென்ற போது துர்க்கா கட்டிலில் படுத்திருந்தாள். தலைமாட்டில் இருந்த மேசையில் வானொலிப் பெட்டி ஒன்று மெல்லிய குரலில் சினிமாப்பாடலொன்றைப் பாடிக் கொண்டிருந்தது. அவனைக் கண்டதும் துர்க்கா கண்களை மூடினாள். அவளின் அருகே அமர்ந்த நவராசா அவளது முகத்தை மூடியிருந்த போர்வையை நீக்கினான். துர்க்கா கண்களை மூடியபடியே நித்திரை செய்பவளைப் போலப் பசாங்கு செய்தாள். நவராசா

மெல்லக் குனிந்து அவளது கன்னத்தைக் கடித்தான். துர்க்கா கண்களைத் திறக்காமலே அவனைக் கட்டித் தழுவினாள். போர்வையை விலக்கிய போது அவன் அதிர்ந்து போனான். போர்வைதான் அவளது உடையாக இருந்தது.

துர்க்கா அவனை இன்ப அதிர்ச்சிக்குள்ளாக்குவதில் வல்லவள். அவன் நினைக்காத வேளைகளில் அவள் திடீரென்று அவனைக் கட்டியணைத்து முத்தமிடுவாள். கண் பார்வையில் பிணக்கம் கொண்டவளைப் போல அவள் காட்டிக் கொண்டாலும் அவனைத் தவிக்க விடாது அவள் சில நேரங்களில் முந்திச் சென்று தழுவுவாள். சில நேரம் அவன் முந்தித் தழுவினால் பிணங்கிய பின் சம்மதிப்பாள்.

“துர்ககா” மெல்ல அவளது காதைக் கடித்தான்

“ம்” என்றாள்.

“நான் ஒன்று கேட்கலாமா?”

“கேளுங்கோ” என்றவாறு தனது பிடியை இறுக்கினாள்.

“அப்பாவுக்கு இருபத்தையாயிரம் ரூபா தேவையாம். தந்தீரென்றால் நான் கொடுத்து விட்டு வந்து விடுவேன்”.

அப்பொழுது இலட்சுமி சொன்ன வார்த்தைகள் அவளின் காதுகளில் ஒலித்தன;

“எப்பொழுதும் கணவனைக் கைக்குள் வைத்துக் கொள்வதைப் போலக் கணவனினது உறவினர்களையும் கைக்குள் வைத்துக் கொள். கணவனது பெற்றோர்க்கும் சகோதரர்களுக்கும் சகல உதவிகளையும் செய். அப்போதுதான் நீ மதிக்கப்படுவாய். நீ அவர்களால் மதிக்கப்பட்டால் உனது கணவனைக் கூட அவர்கள் பெரிதாக நினைக்கமாட்டார்கள். நீ விரும்பியபடி நடந்து கொள்ளலாம். தேவரைப் போல இவ்வுலகில் மிக்க பெருமை உடையவர்களானாலும் மனைவிமாரின் தோள்தரும் இன்பத்திற்காக அவர்கள் எதையும் துறப்பார்கள்”

“நான் கொண்டு சென்று கொடுக்கிறேன்” அவனை இறுக்கமாகக் கட்டிப் பிடித்தாள். அதற்கு மேல் அவனால் எதுவும் பேச முடியவில்லை. “சரி” என்றான். பின் அப்புவும் ஐயாயிரம் ரூபா யாரோ ஒரு நண்பனுக்குக் கொடுப்பதற்காகக் கேட்டவர். இரண்டொரு நாளில் தந்து விடுவார்” என்றான்.

“சரி” என்றாள் துர்க்கா.

அன்று மாலை துர்க்காவும் நவராசாவும், நவராசாவின் பெற்றோரின் வீட்டுக்குச் சென்றனர். கதிரேசன் வாசலில் இருந்தார். அவரின் அருகிற் சென்ற துர்க்கா கைப்பையைத் திறந்து ஐயாயிரம் ரூபா எடுத்துக் கொடுத்து விட்டு வீட்டுள்ச் சென்றாள். நவராசா அவருக்கு அருகில் வந்து அமர்ந்தான். அவனைப் பார்க்க அவருக்கு அருவருப்பாக இருந்தது; “என்ன அப்பு கேட்ட பணத்தைத் தந்து விட்டேன் தானே… பிறகேன் யோசிக்கிறீர்கள்” என்று கேட்டான்.

“நவம் தேவரைப் போலச் சிறப்புமிக்கவர்களாக வாழ்ந்தாலும் மனைவியின் தோள்கள் தரும் இன்பத்திற்கு அஞ்சி வாழ்ந்தால் அவர்களுக்குச் சிறப்பில்லை. நான் உன்னிடம் தான் பணம் கேட்டேன். அதைப் போல உனது தந்தையாரும் உன்னிடம் தான் பணம் கேட்டார். நீ தந்தால் எமக்குக் கடமை இல்லை. அவளை நீ கெஞ்சி மன்றாடி இருப்பாய். அவள் உனது கரைச்சலுக்காகக் கொண்டு வந்திருப்பாள். குறித்த தவணையில் கொடுக்காவிட்டால் வாங்கியவர்கள் அவளுக்குப் பயப்படல் வேண்டும்.” என்றார் கதிரேசன்.

**906. இமையாரின் வாழினும் பாடுஇலரே இல்லாள்**
**அமைஆர்தோள் அஞ்சு பவர்.**

மனைவியின் தோளுக்கு அஞ்சி வாழ்கின்றவர் தேவரைப் போல இவ்வுலகத்தில் சகல சௌகரியங்களும் பெற்றுச் சிறப்பாக வாழ்ந்தாலும் பெருமை இல்லாதவரே ஆவார்.

## பெண்மையே சிறப்பு

நவராசா எதுவும் பேசவில்லை. கதிரேசனைப் பார்த்துக் கொண்டு இருந்தான். அவனுக்கு அவர் அப்படிச் சொன்னதற்காகக் கவலையோ வெட்கமோ ஏற்படவிலலை; “முன்பு நாம் ஒற்றுமையாக வாழக் காலம் விடவில்லை. கிரகங்கள் பகைத்தமையால் தினமும் சண்டையுடனும் சச்சரவுகளுடனும் வாழ்ந்தோம். இப்போது நாம் ஒற்றுமையாக வாழ இனத்தவர்கள் விடுகிறார்கள் இல்லை. கதிரேசப்பு படிக்காவிட்டாலும் உலக அறிவுள்ளவர். மற்றவர்கள்

ஒன்றாக வாழ வேண்டும் என்று நினைப்பவர். என்று நினைத்திருந்தேன். அவருக்குக் கூடத் துர்க்கவைப் பிடிக்கவில்லை. துர்க்கா வசதியானவள்; பணக்காரி சற்றுத் திமிராகத் தான் நடப்பாள். அதை இவர்கள் பொறுத்துக் கொண்டால் என்ன....?'' என்று நினைத்தான்.

"என்ன நவம் யோசிக்கிறாய்? நான் சிவகுருநாதனுக்கு இன்னொருவரிடம் வாங்கிப் பணத்தைக் கொடுத்துவிட்டேன். ஆகையால் எனக்குப் பணம் தேவையில்லை. துர்க்கா வந்து பணத்தை வைத்து விட்டுப் போகிறாள். நான் வேண்டாமென்று சொல்லு முன் சென்று விட்டாள். அதை எடுத்துக் கொண்டு போய் அவளிடம் கொடு'' என்றார் கதிரேசன்.

உள்ளே சென்ற துர்க்கா உடனே திரும்பி வந்தாள். அவளது முகம் சற்று மாறி இருந்ததைப் போல நவராசாவுக்குத் தோன்றியது. "என்ன துர்க்கா...?'' பரபரத்தான் நவராசா.

துர்க்கா மகிழ்வுடன் சிரித்தாள்; "மாமா வெண்காயத்தைத் இராசகோபால் அண்ணையிடம் கடனாக வாங்கிவிட்டாராம். காசு தேவையில்லை என்று சொன்னார்'' என்றாள் துர்க்கா.

"இதையும் கொண்டு போ பிள்ளை. சிவகுருநாதன் வேறு யாரிடமோ வாங்கி விட்டானாம்'' என்றார் கதிரேசன்.

‘‘அப்படியா?’’ என்று கேட்ட துர்க்கா கதிரேசனிடமிருந்து தான் கொடுத்த பணத்தை வாங்கினாள்.

‘‘மகா கணபதி ஆலயத் திருப்பணி வேலைக்குப் பணம் தேவையென்று அன்று வந்தவை. இதைக் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வாருங்கள்’’ என்றாள் துர்க்கா. நவராசா துர்க்காவிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு சென்றான்.

‘‘மினக்கெடாமல் வாருங்கோ’’ என்றாள் துர்க்கா.

‘‘முன்புதான் எமக்குள்ளே பிரச்சினைகள் பல இருந்தன. இப்போது ஒன்றும் இல்லை. முன்பென்றால் நான் ஏதாவது சொன்னால் அவர் சண்டைக்கு வருவார். இப்போ அப்படியல்ல. நான் சொல்வது எல்லாவற்றையும் செய்வார். முன்பு இவர் தோட்டம் செய்வது எனக்குப் பிடிப்பதில்லை. இப்போ அவருக்குத் தான் தோட்டம் செய்வது பிடிப்பதில்லை. அவர் கூலியாட்களைக் கொண்டுதான் எல்லாவற்றையும செய்விப்பார். இப்போ அவர் என்னை எனது இனத்தவர் வீடுகளுக்கும் நண்பர்களது வீடுகளுக்கும் அழைத்துச் செல்கிறார். முன்பென்றால் ஜெயபாலனுடனும் கிருஷ்னனுடனும் சேர்வார். இப்போ அவர் யாருடனும் சேர்வதில்லை’’ என்றாள் துர்க்கா.

‘‘உண்மைதான். கோயில் குருக்கள் சொன்னார்; ‘‘முன்பென்றால் கோயிலில் நவராசா

எல்லா வேலைகளும் செய்வான். இப்போ கோயில் பக்கம் வருவது குறைவு. செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் பூசை நேரத்திற்கு மனைவியுடன் வந்து கும்பிட்டு விட்டுச் செல்கிறான்'' என்றார். தணிகாசலமும் அப்படித்தான் சொன்னான். இப்ப நவராசா சனசமூக நிலையப் பக்கமே போவதில்லையாம்'' என்றார் கதிரேசன்.

''ஓம் தாத்தா. தேவையில்லாமல் அங்கெல்லாம் சென்றால் வீணான பிரச்சினைகள் தேடி வரும். வீட்டோடு இருந்து விட்டால் பிரச்சினை இல்லை'' என்று நான் தான் சொன்னேன். அவர் சம்மதித்து விட்டார். வீட்டில் இருந்து நான் கூறும் வேலைகளைச் செய்து கொண்டு எனக்குத் துணையாக இருக்கிறார்'' என்றாள் துர்க்கா.

''அதுதான் ஆண்பிளைக்கு அழகு என்று நீ நினைக்கிறாய். உனது விருப்பத்தை அவன் நிறைவேற்றுகிறான்'' என்றார் கதிரேசன்.

அப்போது நவராசா வந்தான். அவனைக் கண்டதும்; ''மாமிக்குச் சொல்லிவிட்டு வருகிறேன்'' என்று எழுந்தாள் துர்க்கா.

கதிரேசன் வேதனையுடன் நவராசாவின் முகத்தைப் பார்த்தார். அவனது முகம் பூரண மகிழ்வுடன் இருந்தது.

''தான் சொல்லும் வேலை ளைத் தவிர வேறு எந்த வேலைகளையும் நீ செய்யத்தான் விடுவது இல்லை'' என்று துர்க்கா சொன்னாள்.

இப்ப நீ மனைவிக்கு அடிமையாகி அவளுக்கு ஏவலாளாய் வாழ்வதாகச் சொல்லிப் பெருமைப் பட்டாள். ஆண்களது வேலைகளை விட்டு விட்டுப் பெண்களுக்கு ஏவலாளர்களாக வாழ்வதைவிட இயல்பாக நாணத்தை உடைய பெண்மை பெருமைக்குரியது. இப்படி வாழ்ந்தால் உன்னை ஊரில் யாரும் மதிக்க மாட்டார்கள்'' என்றார் கதிரேசன்.

நவராசா சிரித்தான்; ''ஊரவை எதைப் பற்றியும் கதைக்கட்டும். முன்பு ஜெயபாலனிடம் பணம் பெறச் சொன்னார்கள். பின்பு அவனிடம் பணம் வாங்கக்கூடாது என்றார்கள். வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடு என்றார்கள். இப்படியான ஊரவரின் பேச்சைக் கேட்டால் நான் வாழ முடியாது. இன்பமாக வாழ வேண்டுமானால் ஆண் பெண் என்ற பேதம் பார்க்காமல் ஒற்றுமையாகக் கூடி வாழ வேண்டும்'' என்றான் நவராசா.

**907. பெண்ஏவல் செய்துஒழுகும் ஆண்மையின் நாணுடைப்**
**பெண்ணே பெருமை உடைத்து.**

மனைவிக்கு அடிமைப்பட்டு அவளின் ஏவலைச் செய்து வாழ்கின்றவனுடைய ஆண்மையை விட, இயல்பாக நாணத்தை உடைய பெண்மையே பெருமைக்கு உரியது.

## குறைவில்லாதவர்

நவராசாவின் வீட்டுக்கு வந்த கஜேந்திரன் வெகுநேரம் அவனோடு கதைத்து விட்டுச் சென்றான்.

அவன் சென்ற பின் நவராசா அறைக்குள் வந்தான். துர்க்கா நன்றாக முழுகி விட்டுக் கூந்தலை விரித்துக் காய விட்டிருந்தாள். மிகவும் அழகான கவர்ச்சியூட்டும் வெளிநாட்டுச் சட்டை ஒன்றை அவள் அணிந்திருந்தாள். சில நாட்களுக்கு முன்புதான் அவளது இளைய சகோதரன் வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவரிடம் அச்சட்டையைக் கொடுத்து விட்டிருந்தான். மெல்லிய சிவப்பு நிறத்தில் பச்சை நிற பூக்கள் அச்சட்டை முழுவதும் நிறைந்திருந்தன. மிகவும் கட்டையான கை. அதனால் அவளது திரட்சியான முளங்கைக்கு மேலிருந்த பகுதி பளபளத்தது. முழங்காலுக்கு ஒருசாண் மேலே சட்டையின் கீழ்ப் பகுதி தொங்கியதால் கால்களின் செழுமையும் அப்பட்டமாகத் தெரிந்தது. முதுகுப் புறத்தின் சதையும் வெகுதூரம் தெரிந்தது. மொத்தத்தில் அது ஓர் இரவு உடை என்று தான் சொல்ல வேண்டும்.

துர்க்கா நவராசாவுக்கு அருகில் வந்த போது வெளிநாட்டு வாசனைத் திரவியத்தின் நறுமணம் மூக்கைத் துளைத்தது. அருகில் வந்த துர்க்கா தனது வலது கையால் நவராசாவின் கன்னத்தில் தட்டினாள். அவள் குஷியாக இருந்தால் அப்படிச் செய்வாள். அப்படி அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டுவது நவராசாவுக்கு மிகவும் பிடிக்கும்.

“சட்டை மிகவும் நன்றாக இருக்கிறது. ஆனால் வெளியே போட முடியாது” என்றான் நவராசா.

துர்க்கா சிரித்தாள். அச்சிரிப்பில் மோகம் அளவுக்கதிகமாக் கொப்பளித்தது. “இது இரவு உடை தானே. யாராவது வந்தால் இந்தச் சட்டையைத் தூக்கிப் போட்டுக் கொண்டு செல்வேன்” என்று கூறியவாறு பெட்டியிலிருந்த இன்னொரு சட்டையை எடுத்துப் போட்டாள். அது அவளது முழு உடலையும் மறைத்தது.

நவராசா பூரிப்புடன் சிரித்தான். “அவள் தன்னை மகிழ்விக்கவே அந்தச் சட்டையைப் போட்டாள்” என்று நினைத்தான் நவராசா. துர்க்கா பின்பு போட்ட சட்டையைக் கழற்றி வைத்து விட்டு கட்டிலில் அமர்ந்தாள். நவராசா அவளது மடியில் படுத்தான். அவளது கைகள் நவராசாவின் தலை முடியைக் கோதின.

“கஜேந்திரன் ஏன் வந்தவன்? கஜேந்திரன் இன்னொருவரின் மனைவியுடன் சுற்றித் திரிவதாகச் சிலர் கதைக்கிறார்கள். அவனுடன் நீங்கள் சேர வேண்டாம்” என்றாள் துர்க்கா.

“சனம் தவறாகக் கதைக்குது. அவள் இன்னொருவனின் மனைவியல்ல. அவள் பிறந்தன்று அவளது தாயார் தனது சகோதரனின் மகனுக்கு அவளை நிட்சயித்தார். அது நடந்து இருபத்தைந்து வருடங்கள் கழிந்து விட்டன. ஆனால் ஒருநாளும் அவர்கள் இங்கு வந்ததில்லை. பெற்றோர் சகோதர பாசத்தால் அப்படி நடப்பது வழமை. எனக்கும் துரைச்சாமி மாமாவின் மகளை நிட்சயித்தவை. பதினாறு வயது வரை அவளைத்தான் எனக்குச் செய்வதென்று சொன்னார்கள். பின் அவள் வெளிநாட்டுக்குச் சென்று விட்டாள். அங்கு

ஒருவனைக் கட்டி இரண்டு பிள்ளைகளுடன் வாழ்கிறாள். அப்படித்தான் இதுவும்'' என்றான் நவராசா.

''நீங்கள் அப்படிச் சொன்னாலும் எனக்கு நீங்கள் அவனுடன் சேர்வது பிடிக்கவில்லை. அவன் இங்கு அடிக்கடி வருவதும் எனக்குப் பிடிப்பதில்லை. எனக்காக அவனுடைய சினேகிதத்தை விடுங்கோ'' சிணுங்கினாள். ''அது சரி இப்ப அவன்ஏன் வந்தவன்?''

''தாயைக் கொழும்புக்குக் கொண்டு செல்லுமாறு வைத்தியர்கள் கூறியுள்ளனர். அவன் இதுவரை கொழும்புக்குச் சென்றதில்லை. நான் பலதடவைகள் சென்றனான். என்னைத் துணைக்கு வரும்படி கேட்கிறான். நான் பல காலமாக அவனுடன் மிகவும் அன்பாகப் பழகுகிறேன். அதனால் இந்த ஒருமுறை மட்டும் சென்று வருகிறேன்'' குழைந்தான் நவராசா.

''எனக்கு நீங்கள் அவனோடு பழகுவது பிடிக்கவில்லை. நீங்கள் போக வேண்டாம்'' என்றவாறு அவனைக் கட்டியணைத்தாள் துர்க்கா.

''சரியில்லை. மிகவும் அன்புடன் பழகுகிறான்'' என்று நவராசா சொல்லிக் கொண்டிருக்கும் போது துர்க்கா குறுக்கிட்டாள்; ''உங்களைப் போக நான் விடமாட்டன். ஒருநிமிடங்கூட என்னால் உங்களைப் பிரிந்திருக்க முடியாது'' சிணுங்கினாள்.

“இன்று கோயிலில் சிரமதானஞ் செய்வதற்க வரச்சொன்னவர்கள். விடும், பாடசாலை நூலகத்திற்குக் காசு தருவதாகச் சொன்னனான். சுப்பிரமணியம் அடுத்த மாதச் சம்பளத்தையும் சேர்த்து இந்த மாதம் தரச் சொன்னவன். தனது மனைவியின் சகோதரிக்குத் திருமணமாம்...” என்று நவராசா கூறிக் கொண்டிருக்கையில் துர்க்கா குறுக்கிட்டுச் சொன்னாள்; “ஊர்வேலைகள் எதுவும் செய்யக்கூடாது. ஊரவை நன்மை செய்தாலும் குறை சொல்லீனை. ஜெயபாலன் காசு கொடுத்துப் படும் பிரச்சினைகள் தெரியும் தானே. அதனால் நன்கொடை கொடுப்பதை விட்டு விடுங்கோ. கூலிக்காரருக்கு இடங்கொடுத்தால் தலைக்கு மேலே ஏறிவிடுவார்கள். சம்பளத்தை முற்பணமாகக் கொடுத்தால் அடுத்த மாதச் செலவுக்கும் நாம்தான் பணம் கொடுக்க வேண்டும். இல்லையென்று சொல்லுங்கோ” என்றாள் துர்க்கா.

“சரி” என்று சிரித்தான் நவராசா. துர்க்கா மோகமிகுதியுடன் சிரித்தாள்.

---

**908. நட்டார் குறைமுடியார் நன்றுஆற்றார் நன்னுதலாள்**
**பெட்டாங்கு ஒழுகு பவர்.**

---

மனைவியின் விருப்பப் படி நடப்பவர், தம் நண்பர்களின் குறைகளையும் நீக்கமாட்டார், பிறருக்கு நன்மையும் செய்யமாட்டார்.

## எதுவும் செய்ய முடியாதவன்

தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் கஜேந்திரனும் நவராசாவின் வீட்டக்கு வந்தனர். அவர்களைக் கண்டதும் நவராசாவின் முகம் மாறுபாடடைவதைக் கஜேந்திரன் கண்டு கொண்டான். அவனுக்கு நவராசாவின் வீட்டுக்கு வர விருப்பமில்லை. தணிகாசலம் நவராசாவின் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று கூறிய பின்பும் அவன் தயங்கினான்.

“பொதுச் சேவை என்று வெழுக்கிட்டுவிட்டால் இன்னார் இனியாரென்று நாம் பார்க்கக்கூடாது. ஜெயபாலன் ஊருக்கு வந்தமையால் ஏகப்பட்ட பிரச்சினைகள் கோயிலிலும் சனசமூக நிலையத்திலும் இலக்கியப் பேரவையிலும் உருவாகிவிட்டன. அதனால் நாம் வீடுவீடாகச் சென்று பொதுக் கூட்டத்திற்கு அறிவிக்க வேண்டும். நாற்பத்தைந்து வருட காலமாக நான் கோயில் நிர்வாகத்தில் இருந்து விட்டேன். இம்முறை நான் நிர்வாகத்தில இருந்து விலகியிருந்து சேவை செய்யப் போகிறேன். அதனால் கட்டாயம் செல்லல் வேண்டும். ஒரு வீட்டுக்குச் சென்றுவிட்டு இன்னொரு வீட்டுக்குச் செல்லாவிட்டால் குறைவரும்” என்று கூறிக் கஜேந்திரனை அழைத்து வந்தார்.

“வேலாயுதபிள்ளையின் போக்கும் சரியில்லை. அவர் ஆராயாமல் கண்டபடி கதைக்கிறார். நவராசா சமூக வேலைகளில் இருந்து ஒதுங்கித் தனது மனைவியே தஞ்சமென்று இருக்கிறான். அத்துடன் அவன் இப்போது வீட்டை விட்டு வெளிவருவதே இல்லை. அவனிடம்

சென்றாலும் பிரயோசனமில்லை'' என்று நினைத்தான் கஜேந்திரன்.

அவர்கள் மூவரையும் கண்ட நவராசாவின் முகம் கறுக்கத் தொடங்கியது. அவர்கள் மற்றைய வீடுகளுக்குச் சென்று நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயப் பொதுக் கூட்டத்திற்கு வருமாறு அறிவிப்பதைக் கேள்விப்பட்ட துர்க்கா சொன்னாள்; ''கோயில் பொதுக் கூட்டத்திற்கு வீடுவீடாகச் சென்று அறிவிக்கிறார்களாம். நீங்கள் அதில் கலந்து கொள்ள வேண்டாம். தேவையில்லாமல் கூட்டம் கூடி அவர்கள் பிரச்சினைப் படுகிறார்கள். எமக்கேன் வீண்பிரச்சினை? கோயிலுக்குக் கொடுக்க வேண்டிய காசைக் கொடுப்போம். திருவிழா, பூசைகளைச் செய்வோம். மகாகணபதியை நன்றாகக் கும்பிடுவோம். இதற்கு மேல் கூட்டம் கூடி அங்கத்தவர்களாகித் தான் யாவும் செய்ய வேண்டும் என்றில்லை. நாம் கடமையைச் செய்வோம்'' என்றாள் துர்க்கா.

அவள் சொல்வது நவராசாவுக்குச் சரியெனப்பட்டது; ''கூட்டத்திற்குப் போனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரச்சினையைக் கிளப்புவார்கள். எல்லாம் தேவையில்லாத பிரச்சினைகள். எல்லோரும் தமது சொந்த நலனுக்காகக் கோயிலைப் பயன்படுத்து கிறார்கள். தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் சேர்த்து எவ்வளவு பிரச்சினைகளைக் கொடுக்கிறார்கள்'' என்று நினைத்தான் நவராசா.

''வாற வெள்ளிக்கிழமை நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயப் பொதுக்கூட்டம்

முப்பத்தைந்து குடும்பங்கள் சேர்ந்து தேர்த் திருவிழாச் செய்வது வழக்கம். இந்தமுறையுடன் முப்பத்தைந்து குடும்பமும் செய்து முடிகிறது. அடுத்த வருடம் புதிதாகத் தேர்திருவிழாவுக்கு உபயகாரர்களைச் சேர்க்கவுள்ளனர். அதுபற்றியும் வேறு பல முக்கிய விடயங்கள் பற்றியும் கதைக்க வேண்டும். நீ கட்டாயம் வா.'' என்றார் தணிகாசலம்.

''இப்ப நீ முற்றாக மாறிவிட்டாய். கல்யாணம் கட்டினால் பொதுவேலைகளை விடுவதா? ஒவ்வொரு வருடமும் ஆலயத்திற்கென்று உனது கமத்தில் ஒரு பகுதி நிலத்தை ஒதுக்கி அதன் வருமானத்தைத் தாறனீ. இந்த முறை அந்த நிலம் உழாமல் இருக்கு. ஏன்...?'' என்று கேட்டார் வேலாயுதபிள்ளை.

''உழ வேண்டும்'' என்றான் நவராசா.

''சரி நாங்கள் வரப்போறம்?'' என்று எழுந்தார் தணிகாசலம். நவராசா மூவரையும் படலை வரை வந்து வழியனுப்பினான்.

''மனைவிமார் ஏவிறபடி நடப்போர், அறச் செயல்களையும் அவற்றைச் செய்வதற்கு வேண்டிய பொருள் தேடும் முயற்சிகளையும் மற்றக் கடமைகளையும் செய்ய மாட்டார்கள். நவராசா எதற்கும் அவளைக் கேட்டுத் தானாம் நடக்கிறான் என்று எல்லோரும் சொல்கிறார்கள்'' என்று தணிகாசலம் சொன்னார். அது நவராசாவுக்கு கேட்டது. இருந்தும் அவன் அதைக் கேளாதது போலச் சென்றான்.

“ஒவ்வொருவரும் தாம் தாம் விரும்பியபடி நடக்கலாம் தானே. இவர்கள் ஏன் மற்றவர்களின் விஷயங்களில் தலையிடுகிறார்கள்? பொதுவேலை செய்யிறம் என்று சொல்லிக் கொண்டு இவை யெல்லாம் காசு அடிக்கிறதாகத்தானே சனம் கதைக்குது. கலியாணம் செய்தால் கொஞ்ச நாட்களுக்கு ஆறுதலாக இருந்து இன்பம் அனுபவிக்க வேண்டும் என்று இவர்களுக்குத் தெரியாதா….? ஒவ்வொன்றிற்கும் சங்கம். இப்ப மயானத்திற்கும் சங்கம் அமைக்கப் போகிறார்களாம். நீங்கள் ஒன்றிலும் சேரவேண்டாம்.” என்றாள் துர்க்கா.

“நான் ஏன் சேரப்போறன்?” என்று கேட்டுச் சிரித்தான் நவராசா.

**909. அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்**
**பெண்ஏவல் செய்வார்கண் இல்.**

அறச் செயலும் அதற்குக் காரணமாக அமைந்த பொருள் தேடும் முயற்ச்சியும் மற்றக் கடமைகளும் மனைவிக்கு அடிமையாகி அவள் ஏவுவதைச் செய்வோரிடத்தில் இல்லை.

## பேதைமை இல்லாதவன்

“இந்த முறை நீங்கள் கோயில் பொறுப்புக்கள் எதையும் தயவு செய்து ஏற்காதீர்கள். நாற்பது வருட காலமாக நீங்கள் கோயிற் பொறுப்புக்கள் எல்லாவற்றையும் ஏற்றுத்

திறம்படச் செய்து வீட்டீர்கள். இனி ஓய்வெடுங்கள். இளைஞர்கள் ஈடுபடல் வேண்டும்'' என்று தணிகாசலத்தின் மனைவி பாக்கியலட்சுமி தணிகாசலத்திற்குச் சொன்னாள்.

''ஒருபோதும் நான் எந்தப் பொறுப்புக்களையும் ஏற்பதில்லை. மக்களில் பெரும் பான்மையானோர் கூடி எனது தலையில் பொறுப்பைக் கட்டி விடுகிறார்கள். நானாக எப்போது பொறுப்புக்களை ஏற்றேன்?'' என்று கேட்டார் தணிகாசலம்.

''இந்த முறை நீங்கள் கூட்டத்திற்குப் போக வேண்டாம்'' என்றாள் பாக்கியலட்சுமி.

''நான் எப்படிக் கூட்டத்திற்குப் போகாமல் இருக்க முடியும். நிர்வாகத்தில் முக்கிய பங்கு வகிக்கும் நான் கூட்டத்திற்குச் செல்லாவிட்டால் மக்கள் என்னைச் சந்தேகிப்பார்கள்''.

''அப்படியானால் நிர்வாகசபைக்கு உங்களைத் தெரிந்தால் நீங்கள் சம்மதிக்காதீர்கள்'' என்றான் பாக்கியலட்சுமி.

''தேவையில்லாத விஷயங்களைப் பற்றி நீ வீணாக அலட்டிக் கொள்ளாதே. மனிதனாகப் பிறந்தவன் ஆக்க பூர்வமான பணிகளில் ஈடுபடல் வேண்டும். நான் அப்பணிகளில் ஈடுபட்டதால்தான் எங்களது குடும்பம் மிகவும் சௌகரியமாக வாழ்கிறது. மகா கணபதிக்குத் தொண்டு செய்யக்

கொடுத்து வைத்திருத்தல்வேண்டும்'' என்றார் தணிகாசலம்.

''இவ்வளவு காலமும் நான் உங்களுக்கேதாவது சொன்னேனா….? இப்போ மக்கள் முன் போலில்லை. நீங்கள் உங்கள் பணத்தைச் செலவு செய்துதான் பொதுச் சேவை செய்கிறீர்கள். ஆனால் மக்கள் அதில் ஏதோ இலாபம் இருப்பதால் தான் நீங்கள் செய்வதாகக் கூறுகின்றனர். இந்த முறை நீங்கள் நிர்வாக சபையில் இடம்பெறக்கூடாது'' கண்டிப்புடன் கூறினாள் பாக்கியலட்சுமி.

தணிகாசலம் சிரித்தார்; ''ஏழைகளாக இருக்கும் போது மகாகணபதிதான் எமக்கு உதவுவதாக நம்பினீர். இப்போது பணக்காரரானதும் மகா கணபதியைத் தேவையில்லை என்ன..? எப்போ எமது சேவையை மக்கள் மதித்தார்கள்? தமது தேவைகள் பூர்த்தியாகும் வரை புகழ்வார்கள். அதன்பின் குறைகளைக் கண்டு பிடிக்கத் தொடங்கி விடுவார்கள். விக்னேஸ்வரமூர்த்தி நான் சொல்லச் சொல்லக் கேளாமல் அருமையான ஒரு பாடாசலையின் நிர்வாகத்தைத் தரமில்லாத ஒருவரிடம் ஒப்படைத்து விட்டு இப்போ துக்கப்படுகிறார். படித்தவனும் சரி பாமரனும் சரி தனது எண்ணம் நிறைவேறிய பின் உதவி செய்தவர்களை மதிப்பதில்லை. நான் உயிருடன் இருக்கும் வரை மகா கணபதிக்குத் தொண்டு செய்வேன்'' என்றார் உறுதியாக.

''நீங்கள் நான் சொல்வதை எப்போது கேட்டீர்கள்?'' அழுதாள் பாக்கியலட்சுமி.

“வீணான கற்பனைகளில் ஈடுபட்டு மனதைக் கெடுக்காதே. எந்த ஒரு குடும்பத்தில் பெண்களுக்கு மேன்மையான இடம் கொடுக்கப்படவில்லையோ, அக்குடும்பம் மகிழ்ச்சியான குடும்பமாக இருக்காது என்று நம்புவன் நான். அதனால் தான் பெண்களை மதித்து நடக்கிறேன். ஏழைகளாக வாழ்ந்த போது மகா கணபதிக்குச் சேவை செய்யவே நீ விரும்பினாய். இன்னும் எமது கடமைகள் முடிந்து விடவில்லை. நாமகளுக்கு மட்டும் தான் திருமணம் முடிந்துள்ளது. மற்றப் பிள்ளைகளினது நல்வாழ்வுக்காக மகாகணபதிக்கு நான் சேவை செய்தே ஆக வேண்டும்.”

“நாமகளுக்கும் விருப்பமில்லை. இப்போ நீங்கள் வருத்தக்காரனாகி விட்டதாக அவள் சொல்கிறாள். கொஞ்ச நாட்களுக்கு ஓய்வெடுங்கள்” என்றாள் பாக்கியலட்சுமி.

“ஓய்வெடுத்தால் தான் நோய் அதிகரிக்கும். நோயாளர்களை உடற்பயிற்சி செய்யுமாறு வைத்தியார்கள் கூறுகிறார்கள். தோட்டம் செய்ய வேண்டாம் என்றீர்கள். தோட்டத்தை விட்டு விட்டேன். கோயில் வேலைகளையும் செய்ய வேண்டாமென்றால் நான் என்ன செய்வது. வீட்டுள் பாய் போட்டுப் படுக்கட்டா.?” கோபத்துடன் கேட்டார் தணிகாசலம்.

“நீங்கள் எதையும் செய்யுங்கோ. ஆனால் கோயில் நிர்வாக சபையில்சேர வேண்டாம். அது எனக்கு விருப்பமில்லை” என்று பாக்கியலட்சுமி கண்டிப்புடன் சொன்னாள்.

“என்னென்ன செய்ய வேண்டும். என்னென்ன செய்யக்கூடாது என்று எனக்குத் தெரியும். அதைப் பற்றி நீ எனக்குச் சொல்லத் தேவையில்லை. நீ ஒரு நல்ல குடும்பப் பெண்ணாக இரு. ஒரு ஆண் தவறான வழிகளில் சென்றால் தான் அவனது மனைவி அவனைக் கண்டித்துத் திருத்துதல் வேண்டும். தம்மைச் சமமாக மதிக்க வேண்டும் என்று நினைக்கும் பெண்கள் தாம் கதைப்பது சரி தானா என்று நன்கு ஆராய்ந்த பின்பே கதைத்தல் வேண்டும். இதுபற்றி இனி நீ கதைக்கக் கூடாது” என்று கோபத்துடன் கூறினார் தணிகாசலம்.

பாக்கியலட்சுமி விக்கி விக்கி அழுதாள்; “உனக்கேனம்மா உந்த வேலை. அப்பா தான் நினைத்தவற்றைத் தான் செய்வார். அவர் சொல்வதிலும் நியாயம் இருக்கு. நீ ஊரவையின் கதையைக் கேட்டுக் கதைத்ததுதான் பிழை. நான் அவருடன் கதைக்க வேண்டாம் என்று கூறக் கூறக் கேட்காமல் கதைத்தீர்கள். எமது குடும்பம் இந்த நிலைக்கு வர மகா கணபதிதான் காரணமென நினைக்கிறேன். யாரும் எதையும் சொல்லட்டும். அப்பா எதையும் நன்றாக எண்ணி முடிவுகாணும் உறுதியான மனம் படைத்தவர். யார் கூறினாலும் அதற்குக் கட்டுப்பட்டு நடக்கும் பேதைமை உள்ளவர் அல்லர். அதனால் வீணாக அழுது துன்பப்படுவதை விட்டு விட்டு வேலைகளைச் செய்யுங்கள்” என்றாள் நாமகள்.

---

**910. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க்கு எஞ்ஞான்றும்**
**பெண்சேர்ந்து ஆம் பேதைமை இல்.**

---

எதையும் நன்றாக எண்ணி முடிவு எடுக்கும் மன உறுதி உள்ளவர்களுக்கு மனைவியின் ஏவலுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பேதமை இல்லை.

## தீமைதரும் இனிய சொல்

திடீரென்று துர்க்காவின் தகப்பனாய் நோய்வாய்ப்பட்டு விட்டார். அவரது நிலைமை மிகவும் மோசமாக இருந்ததால் துர்க்கா தனது பெற்றோரின் வீட்டுக்குச் சென்று விட்டாள். அவளது சகோதரர்கள் எல்லோரும் வெளிநாட்டிலிருந்ததால் பெற்றோர் தனியே இருந்தனர். துர்க்காவின் தந்தை இராசநாயகம் மயக்கமான நிலையில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பகலில் நவராசா துர்க்காவின் வீட்டில் தங்குவான். அங்கிருந்து வைத்தியாசலைக்கு உணவு கொண்டு செல்வான். இரவில் உணவுப் பொதியுடன் தனது வீட்டுக்கு வருவான். அங்கு இரண்டு நாய்கள் நின்றன. தோட்ட வேலைகள் நடைபெற்றன. அதற்கான கூலிப்பணம் கொடுத்தல்வேண்டும். விவசாய உற்பத்திப் பொருட்களை விற்றல் வேண்டும். அது அவனுக்குப் பெரும் சுமையாக இருந்தது.

அன்று பிற்பகல் நான்கு மணிக்கு அவன் வீட்டுக்கு வந்தான். அவன் வந்த சில நிமிடங்களில் அவனது பக்கத்து வீட்டுக்காரியான வசந்தினி அங்கு வந்தாள். அவளைத் துர்க்காவுக்குப் பிடிப்பதில்லை. அதனால் அவள் துர்க்காவின் வீட்டுக்கு வருவது குறைவு. வந்தாலும் தனக்கு வேலைகள் இருப்பதாகச் சொல்லி அவளை அனுப்பி விடுவாள் துர்க்கா. ஒருநாள் துர்க்கா

சொன்னாள்; “வசந்தினியின் நடத்தை சரியில்லை. எல்லா ஆண்களுடனும் சிரித்துச் சிரித்துக் கதைப்பாள். யாராவது அவளது பேச்சில் மயங்கினால் அவர் பாடு அதோகதிதான். இளமையிலும் அவளது வீட்டில் பல ஆண்கள் இருப்பார்கள். இப்போதும் அப்படித்தான். புரிசன் தனியார் நிறுவனமொன்றில் நல்லவேலையில் இருக்கிறான். அவன் காலையில் போனால் இரவுதான் வருவான். வசந்தினியை விட அந்த நிறுவனத்தில் தான் அவனுக்குப் பாசம் அதிகம். அவனை அவள் தனது கைக்குள் போட்டு வைத்திருக்கிறாள். அதனால் அவள் சொல்வதெல்லாவற்றையும் அவன் நம்புவான்; அத்துடன் அவள் சொல்லுறபடி கேட்பான். மூன்று வருடங்களுக்கு முன் அவனும் அவளும் ஒரு கருத்தரங்குக்குச் சென்றவை. அங்க யாரோ ஒருவனோடு சினேகிதமாகி விட்டாள். பின் அவனைத் தனது கணவனின் உறவினன் என்று அழைத்து வந்து இங்கு கணனிக் கல்வி கற்க விட்டாள். இரவு பகலெல்லாம் அவனோடு மோட்டார் வண்டியில் சுற்றித் திரிந்தவள். அதோடு புரிசனின் மேலாளர் அடிக்கடி வந்து போவார். மூன்று பிள்ளைகள் இருக்கு. இரண்டு வயது வந்ததுகள். இவளை நினைக்க எனக்கு வயிற்றைப் புரட்டும். நீங்கள் அவளுடன் கதைக்காதைங்கோ”

துர்க்கா சொன்ன வார்த்தைகள் அவனது காதகளில்ஒ லித்தன. தடுமாறியபடி அவளைப் பார்த்தான்; “துர்க்காவின் அப்பாவுக்கு இப்போது எப்படி…?” என்று கேட்டாள் வசந்தினி.

“எந்த மாற்றமும் இல்லை. நாளை மறுதினம் அவருடைய பிள்ளைகள் வெளிநாட்டில் இருந்து வருகிறார்கள். அவர்கள் வந்தால் எனக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும்” என்றான் நவராசா.

“உங்களுக்குத்தான் கரைச்சல். களைத்திருக்கிறீர்கள் போலத் தெரிகிறிது. தேநீர் வைத்துத் தருகிறேன்” என்ற வசந்தினி அவனது பதிலை எதிர்பாராது சமையலறைக்குள் நுழைந்தாள். அவள் உள்ளே செல்லும் போது அவளது தோள் அவனது தோளில் உரசியது

நவராசாவுக்குப் பயமாக இருந்தது; “தற்செயலாக இதைத் துர்க்கா அறிந்தால்” நினைப்பே பயத்தைக் கொடுத்தது. கெங்காதரன் அவளைப் பற்றிச் சொன்னது அவனது காதில் ஒலித்தது.

“கணவனுக்கு நடிப்பாள் கட்டழகர்க்குச் சிரிப்பாள். கண்ணயர்ந்து போனால் கலங்கிடாமல் அணைப்பாள் தன் செயல்கள் முடிந்தால் அடுத்தவரை நினைப்பாள். அடுத்தவரும் கசந்தால் இன்னொருவர் மகிழ்வார்.”

“உங்களுக்கேன் வீண்சிரமம். தேநீர் எனக்கு வேண்டாம். நீங்கள் போங்கோ..” நடுங்கினான் நவராசா.

“ஆபத்தில் உதவாதவர்கள் அயலில் இருப்பதால் என்ன பயன்?. நீங்கள் குளித்துவிட்டு வாருங்கள்” என்றான் வசந்தினி.

நவராசா பயத்துடன் குளியலறைக்குச் சென்றான். சிறிது நேரத்தில் குளியல் அறைக்கதவு தட்டப்பட்டது; “யாராக இருக்கும்?” என நினைத்தவாறு கதவைத் திறந்தான் நவராசா. வசந்தினி வாசலில் துவாயுடன் நின்றாள். நவரசா தடுமாறினான். அவனிடம் துவாயைக் கொடுக்கும் போது அவனது கையையும் சேர்த்துப் பிடித்தாள் வசந்தினி.

குளித்து விட்டு வந்த நவராசாவுக்குத் தேநீர் கொண்டு வந்தாள் வசந்தினி. அவளது சட்டையின் மேல் தெளி ஒன்று கழன்றிருந்து அவளது மார்பின் பொலிவைக் காட்டியது. அவள் தேநீர் கொடுக்கும் போது அவளது உடல் மெல்ல அவனது உலுடன் உரசியது.

“சரி நீங்கள் போங்கோ, நான்…” தடுமாறினான் நவராசா.

“ஏன் பயந்து நடுங்குகிறீர்கள்? குளித்த உங்களது உடல் வியர்க்கிறது. என்ன சாப்பாடு கொண்டு வந்தீர்கள்?” அன்பொழுகக் கேட்டாள் வசந்தினி.

“பாண்தான் கொண்டு வந்தனான். துர்க்காவுக்கு சரியான வேலை” என்றான் நவராசா.

“வைத்தியசாலைக்கும் சென்று வீட்டையும் கவனிக்க முடியாது. வீட்டில் பிட்டும் கறியும் இருக்கு. கொண்டு வருகிறேன். துர்க்காவால் சமைப்பது கஷ்டம். அதனால் எமது வீட்டிற்கு

வந்து சாப்பிடுங்கோ. வேலைசெய்யும் உங்களுக்குச் சாப்பாடு சரியில்லா விட்டால் உடம்பு கெட்டுவிடும்'' என்று கதைத்தவாறு நடந்தாள் வசந்தினி.

அப்போது கஜேந்திரன் அங்கு வந்தான். வசந்தினி அங்கிருந்து செல்வதைக் கண்டதும் அவன் சொன்னான்; ''துர்க்கா அக்கா இல்லாத நேரங்களில் இவளை வீட்டில் அண்டக் கூடாது. ஊரவர் ஒருமாதிரியாகக் கதைப்பார்கள். துர்க்கா அக்காவுடன் வீண் பிரச்சினைப்படவேண்டி வரும். அவள் தனது புரிசனை விட்டு விட்டு இன்னொருவனுடன் ஊர் சுற்றுபவள். தூர இடங்களுக்குக் கூடச்சென்று தங்கி வாறவள். ஊர்க் கோயில்களுக்கு மட்டுமல்ல தூர இடங்களில் உள்ள கோயில்களுக்கும் அவனுடன் சென்று இரவு தங்கி வருபவள். கவனம். அவ்வளவு தான் நான் சொல்வேன். அயலவர் களுடனும் நண்பர்களுடனும் அன்பாகத்தான் இருத்தல் வேண்டும். இவள் அன்பு காரணமாக யாரையும் விரும்புவதில்லை. பொருள் காரணமாகத்தான் விரும்புவாள். அத்தகைய விலை மகளின் இனிய சொல் தீமையைத் தான் தரும். தனது காரியத்திற்காகத் திட்டமிட்டு மிகமிக இனிமையாகப் பேசி ஆட்களை மயக்குவதில் வல்லவள். அதுசரி இராசநாயகம் அண்ணைக்கு எப்படி...? அதைக்கேட்கத்தான் வந்தனான்''

''உள்ள மாதிரித்தான். வயதும் போய்விட்டது'' என்றான் நவராசா. அதன் பின் கஜேந்திரன் சிறிது நேரம் கதைத்து விட்டுச் சென்றான்.

கஜேந்திரன் சென்றதும் வசந்தினி சாப்பாட்டுடன் வந்தாள்.

**911. அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்.**

அன்பு காரணமாக ஒருவனை விரும்பாமல் அவனது பொருள் காரணமாக விரும்புகின்ற பொது மகளிர் பேசுகின்ற இனிமையான வார்த்தைகள் துன்பத்தையே கொடுக்கும்.

## பொருளின் அளவு

“இவள் யாரையும் அன்பு காரணமாக விரும்புவதில்லை. தனது தேவை காரணமாகத் தான் விரும்புவாள். அவளின் இனிமையான பேச்சு உனக்குத் தீராத துன்பத்தையே தரும்” என்று கஜேந்திரன் கூறிய வார்த்தைகள் அவனின் காதுகளில் ஒலித்தது.

“இவளின் போக்கு மிகவும் மோசமானது. இளம் வயதிலும் இவள் பலருடன் கூடித் திரிந்தவள். பொருள் கூடக் கொடுப்பவர்களுடன் தான் இவள் மிகவும் அன்பாகப் பழகுவாள். இளமைக் காலத்தில் யசோதரன் என்ற ஓர் இளைஞன் இவளை விரும்பினவன். அவன் ஏழை. இவளோடு கூடித் திரியும் இளைஞர்களுடன் அவன் நட்பாகி அவளின் வீட்டுக்குப் பலமுறை சென்றுள்ளான். அவளிடம் வரும் இளைஞர்கள் அவளுக்கு அடிக்கடி பரிசுப் பொருட்கள் கொடுப்பார்கள். பாவம் யசோதரன். அவனால்எதையும் கொடுக்க முடியவில்லை.

அத்துடன் அவள் ஒவ்வொருவரோடும் பழகும் விதத்தைப் பார்த்து அவன் தானாக விலகிக் கொண்டான். இவளோடு பழகிய பலர் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டனர். ஆனால் இப்போதும் அவளுக்கு அவர்களுடன் தொடர்பிருக்கிறது. இப்போதும் அவர்கள் பரிசுப் பொருட்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். சென்ற வாரம் வந்த ஒருவன் இவளுக்குத் தங்கச் சங்கிலியும் இவளது பிள்ளைகளுக்கு விலையுயர்ந்த உடுபிடைவைகளும் கொடுத்து விட்டுச் சென்றவன். அத்துடன் இவள் கடைக்காரக் கெங்காதரனுடன் நட்பாக இருந்தவள். அவன் இவளுக்கு கொடுத்து கொடுத்து அழிந்து விட்டான். பின் அவனை விட்டு விட்டு அவனது மைத்துனனைப் பிடித்தவள். சரியான ஆட்டக்காரி. கிடைக்கக்கூடிய பொருட்களின் அளவுக்கேற்ப இனிய சொற்களைப் பேசுவாள். அதனால் தான் நான் இவளை வீட்டில் அனுமதிப்பதில்லை'' துர்க்கா சொன்னதை நினைத்துப் பார்த்தான்.

வசந்தினி சாப்பாட்டு அறையில் கொண்டு சென்று உணவை வைத்து விட்டுச் சொன்னாள்; ``சுடச் சுடச் சாப்பிட்டால் தான் சுவையாக இருக்கும். வந்து சாப்பிடுங்கோ''

``எனக்குப் பசிக்கவில்லை. நீங்கள் வைத்து விட்டுப் போங்கோ..'' என்றான் நவராசா. அவனுக்குப் பயமாக இருந்தது; ``யாராவது வந்து கண்டு விட்டால் பின் துர்க்காவிடம் தப்ப முடியாது. இவள் ஏன் இங்கு வந்தாள்? தனியாக ஓர் ஆண்மகன் இருக்குமிடத்திற்கு அன்னியப்பெண்கள் வரக்கூடாது என்று இவளுக்குத் தெரியாதா…?

இவளின் நடத்தையைப் பார்த்தால் ஊரவர்கள் சொல்வது சரி'' என்று நினைத்தான் நவராசா.

''சாப்பாட்டைக் கோப்பையில் எடுத்து வைத்து விட்டேன் வந்து சாப்பிடுங்கள்'' என்றாள் வசந்தினி. அதைக் கேட்க நவராசாவுக்குப் பயமாக இருந்தது. முன்பு ஒரு முறை இளவது மூத்த மகன் நவராசாவிடம் வந்து கதைத்து விட்டுப் போனான். அதைக் கண்ட கதிரேசன் சொன்னார்; ''நவம், ஏன் வசந்தினியின் மகன் உன்னிடம் வந்தான்? நீ இப்போது வசதியாக உள்ளாய். உன்னிடம் மோட்டார் வாகனங்கள் பல உண்டு. இலட்சக்கணக்கில் பணம் புரள்கிறது. அதனால்தான் அவள்தனது மகனை உன்னிடம் திட்டமிட்டு அனுப்பியுள்ளாள். பணம் வரும் போது நண்பர்கள் சேர்வார்கள்; விபச்சாரிகள் இனிய வார்த்தை பேசுவார்கள். வசந்தினி மாயக்காரி. எந்த ஓர் ஆணையும் வளைத்துப் பிடித்து விடுவாள். அவளால் அழிந்தவர்கள் பலர். கெங்காதரன் அழிந்தது அவளால்தான். அவள் கெங்காதரனுடனும் அன்புடன் பழகுவாள். அவனது எதிரியோடும் அவனுக்குத் தெரியாமல் நெருக்கமாகப் பழகுவாள். தனது தேவைக்காக யாரையும் காட்டிக் கொடுப்பாள். கெங்காதரனை அவனது வியாபார எதிரியான சிவப்பிரகாசத்திற்குக் காட்டிக் கொடுத்து வெகுமதி பெற்றதாக மக்கள் கதைக்கின்றனர். அதனால் மறந்துங் கூட அவளின் வீட்டுப் பக்கம் சென்று விடாதே. சென்றால் நீ முருகனைப் போலக் கோவணம் தான் கட்ட வேண்டிய நிலை வரும்''

நவராசா வசந்தினியைப் பார்த்தான். அவள் மோகனமாகச் சிரித்தாள். அச் சிரிப்பு துர்க்காவின்

சிரிப்பை விடக் கவர்ச்சியாக இருந்தது. பின் சாப்பாட்டுக் கோப்பையைக் கொண்டு வந்த அவனிடம் கொடுத்தாள். அவன் சாப்பாட்டு மேசையில் இருந்து உண்ணத் தொடங்கினான். அவள் அவனின் அருகே வந்து நின்றாள். அவளது சட்டை நவராசாவின் தோளை உரசியது.

பலரது சொற்கள் அவனது காதில் ஒலித்த போதும், அவளது சட்டை உரசிய போது உணர்வுகள் மெல்ல விழித்தன. அவனது இடதுகை கதிரைக்கு அருகே கீழே இருந்தது. அதில் வசந்தினியின் முழங்காலின் மேற்பகுதி லேசாகப்பட்டுப் பின் நெருக்கமாகியது. அவனால் சாப்பிட முடியவில்லை. துர்க்கா இரண்டு வார காலமாகப் பெற்றோரின் வீட்டிலிருந்ததால் நவராசாவால் அவளைத் தொட முடியவில்லை. அதனால் உணர்வுகள் பொங்கின. 'கெங்காதரன் சொன்னது உண்மை' என்று நினைத்தான் நவராசா

''அமைதியென்ற நாமம் மனதில் புயலைக் கிழப்பி மகிழும்
அழகு கொண்ட வதனம் காம ஊற்றைப் பெருக்கி நிற்கும்
கயலாய்த் துள்ளும் விழிகள் மனதைச் சுண்டி இழுக்கும்
பொலிந்து குவிந்த இடங்கள் நச்சு ஊற்றைச் சுரந்து பாயும்''
என்று கெங்காதரன் அவனது காதுக்குள் கிசுகிசுத்தான்

''நவராசா; கிடைக்கக் கூடிய பொருளின் அளவுக்கு ஏற்ப இன்பத்தைத் தரும் விலைமகளைத் தீண்டாதே' என்று அவனது உள்மனம் எச்சரித்தது. அதனால் அவன் யோசித்துப் பார்த்தான், பின்; ''நான் இரவு வருவதாகத் துர்க்காவுக்குச் சொன்னனான். போகவேண்டும்'' என்று புறப்பட்டான் நவராசா.

**912. பயன்தூக்கிப் பண்புஉரைக்கும் பண்பில் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்.**

கிடைக்கக் கூடிய பொருளின் அளவுக்கு ஏற்ப இனிய வார்த்தைகளைக் கூறுகின்ற பண்பற்ற விலை மகளால் வரும் இன்பத்தை ஆராய்ந்து பார்த்து அவளுடன் சேராமல் விட வேண்டும்.

## பிணத்துடனான உறவு

“இரவில் வீட்டில் ஆளில்லாமல் இருந்தால் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி விடுவார்கள். துர்க்காவின் தகப்பன் நோய்வாய்ப்பட்டதால் துர்க்காவும் நீங்களும் வீட்டில் இல்லையென்று எல்லோருக்கும் தெரியும். ஆதலால் திருடர்கள் திட்டமிட்டுத் திருடுவார்கள். நீங்கள் அங்கு போனாலும் பின் வந்து இங்கு படுங்கோ. துணைக்கு ஆள் தேவையானால் எனது பிள்ளைகளை அனுப்புகிறேன்” என்றாள் வசந்தினி.

நவராசாவால் எதுவும் பேசமுடியவில்லை நிமிர்ந்து பார்த்தான். அவளது மேற்சட்டையின் இரண்டாவது தெறியும் கழன்றிருந்தது. அவனது கண்கள் மோகத்துடன் அந்த இடத்தை மொய்க்க உணர்வுகள் ஆர்ப்பரித்தன.

“வீட்டுக்கு ஏன் போகிறீர்கள்? ஏதாவது அவசரமா…?” இனிமையாகக் கேட்டாள் வசந்தினி.

அவனுக்கு என்ன பதில் கூறவதென்றே தோன்றவில்லை. அதனால் தடுமாறினான்.

“பேசாமல் படுங்கோ..” என்றாள் வசந்தினி. நவராசா மெல்ல அருகில் வந்தான். அவள் அவன் மீது உராசினாள். கைகள் அடிக்கடி முட்டி விலகின. அவள் அவனது கையைப் பிடித்தாள்.

“மனிதன் அழிவதற்குக் காரணியானவற்றுள் முக்கியமானது விலைமாதர்களின் தொடர்பு. வசந்தினியின் கணவன் நல்ல உழைப்பாளி; சுறுசுறுப்பானவன்; பலசாலி; அப்படியிருந்தும் அவள் ஏன் பிற ஆடவர்களை வளைத்துப் போடுகிறாள் என்று நினைத்துப் பார். எல்லாம் பொருள் வசூலிப்பதற்காகத்தான். கெங்காதரன் அவளையே தஞ்சமென்றிருந்தவன். தனது சொத்துக்களையெல்லாம் அவளுக்குக் கொடுத்தவன். அவளையே தஞ்சமென்றிருந்ததால் அவனால் தொழிலைக் கவனிக்க முடியவில்லை. அதனால் தொழில்களைக் கவனிக்காது விட்டு விட்டான். விலை மாந்தர்களுக்குப் பொருள்தான் முக்கியம். பொருளில்லாதவனைத் தமது வாசலுக்குக் கூட எடுக்க மாட்டார்கள். அதனால் கெங்காதரன் மீதிருந்த பற்று அவளுக்குக் குறைய ஆரம்பித்து விட்டது. அதனால் அவனை அவள் வெறுத்தாள். அவளின் மீது பித்துப் பிடித்த கெங்காதரன் அவளது வீட்டுக்கு அடிக்கடி போய் வந்தான். ஒருநாள் அவன் சென்ற போது வீட்டில் யாருமில்லை. வெளிப்படலை பூட்டியியிருந்தது. அவள் அவனுடன் கூடியிருக்கும் போது வெளிப்படலையைப் பூட்டி விடுவாள். எனவே உள்ளேதான் அவள் இருக்கிறாள் என நினைத்த கெங்காதரன் வெளியே மறைந்திருந்தான். சிறிது நேரத்தில் அவள் வந்து வெளிக்கதவைத் திறந்தாள். அவனைக் கண்டதும் அவள் திகைத்துப்

போனாள். உள்ளே இன்னொருவன் இருந்தான். வழமையாகத் தன்னோடு உறவு கொள்ளும் போது செய்வதையே அவள் செய்துள்ளாளென நினைத்து அன்றுடன் அவளை விட்டு விட்டான்.'' என்று கதிரேசன் கூறியது அவனது காதில் கேட்ட போதும் உணர்வுகள் பொங்கி யெழுந்தன.

ஒருநாள் கெங்காதரன் குடித்து விட்டுச் சொன்னான்; ''வசந்தினி விபச்சாரி. அவளுக்கு ஆண்களுடன் பழகுவது அல்வா சாப்பிற்ற மாதிரி. நான் பல பெண்களுடன் பழகினான். விபச்சாரிகள் பிணங்களுக்குச் சமமானவர்கள். விபச்சாரிகள் தம் மனதில் ஏற்கனவே திட்டமிட்டு வைத்திருப்பதை நிறைவேற்றும் எண்ணத்தில் இருப்பார்களே தவிர உண்மையான அன்புடன் தழுவ மாட்டார்கள். உறவுக்கு அன்பு, பாசம், பற்று மிகுந்திருத்தல் வேண்டும். இதை நாம் மனைவியிடம் தான் எதிர்பார்க்கலாம். பொருளுக்காக விபச்சாரிகள் பொய்யான தழுவலைத்தான் தழுவுவார்கள். ஏனென்றால் நான் தழுவு முன் அவளைப் பலர் தழுவியிருப்பார்கள். அதனால் நான் எப்பொழுது பொருள் தருவேன், என்ன பொருள் தருவேன் என்ற சிந்தனையில் அவள் இருப்பதால் அவளது தழுவலில் உணர்வுகள் இராது. அவளைத் தழுவுவது இருட்டறையில் ஒரு பிணத்தைத் தழுவுவது போலவே இருந்தது'' அவன் யோசித்துக் கொண்டிருக்கையில் வசந்தினி அவனைத் தழுவி முத்தமிட்டாள்.

''முன்பே நான் உங்கள் மீது காதல் கொண்டுதான் எனது மகனைப் பலமுறை அனுப்பினேன். நீங்கள் வரவில்லை. உங்களைக்

கண்ட நாள் முதல் நான் உங்களை அடைய வேண்டுமென்று நினைத்தேங்கினேன். அதனால் தான் இன்று இங்கு வந்தேன். இன்றுதான் நல்ல நேரம் கூடியது'' என்று முனகினாள் வசந்தினின.

சில நிமிடங்களின் பின்; ''நான் வருகிறேன்'' என்று கூறி நவராசாவின் கன்னத்தில் முத்தமிட்டு விட்டுச் சென்றாள் வசந்தினி. நவராசாவுக்குத் துக்கமாக இருந்தது. உணர்வுகள்அத்துமீறியதால் ஏற்பட்ட உறவை நினைக்க அவனுக்கு வேதனையாக இருந்தது; ''கெங்காதரன்சொன்னது போல உணர்வுகளில்லாத அவள் பிணம் போலவே இருந்தாள். எந்தவிதமான இன்பமும் அவனுக்குக் கிடைக்கவில்லை. இருட்டறையில் பிணத்துடன் கூடியிருந்த நினைப்பு அவனுக்கு வந்து அருவருப்பை ஊட்டியது.

''உண்மையென்று நம்பி உள்ளம் பொங்க அணைத்தால்
உள்ளதெல்லாம் போகும் உவகை துயராய் மாறும்
துன்பம் கடலாய்ச் சேரும் தேகம் மெலிந்து வாடும்
மனமும் முறிந்து போகும் மங்கலங்கள் அழியும்''

கெங்காதரன் கூறியது நவராசாவின் காதுகலில் ஒலித்தது. பெருமூச்சுவிட்டான் நவராசா.

---

**913. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டுஅறையில்
ஏதில் பிணம்தழீஇ யற்று.**

பொருளை மட்டும் விரும்பும் பொது மகளிரின் பொய்யான தழுவல், இருட்டறையில், தொடர்பில்லாத ஒரு பிணத்தைத் தழுவினாற் போன்றது.

## அற்பமான இன்பம்

காலை உணவுடன் கதிரேசன் நவராசாவின் வீட்டுக்கு வந்தார். அவரைக் கண்ட நவராசா சொன்னான்; "வயது போன நேரத்தில் உங்களுக்கேன் உந்த வேலை. எனக்கு நாலைந்து வீடுகளிலிருந்து காலைச் சாப்பாடு வந்திருக்கு. சுப்பிரமணியம் கொண்டு வந்தான். லிங்கேஸ்வரி அனுப்பியிருந்தாள். நீங்கள் கொண்டு வந்திருக்கிறியள்."

கதிரேசன் சிரித்தார்; "பெத்த மனம் படும் துயரை நீ வீட்டுக்கு வந்தால் தான் உணர்வாய். துர்க்கா சென்ற பின்பு கொம்மா படுற பாடு.... அதைப் பொறுக்கேலாததாலை தான் நான் காலைச் சாப்பாட்டை வாங்கிக் கொண்டு வந்தனான். இனிமேல் நீ வீட்டை வந்து சாப்பிடு" என்றார் கதிரேசன்.

"சமைப்பதற்கென ஆள் இருக்கு. சுப்பிரமணியம் கொண்டு வருவான். உள்ள வேலைகளுள் நான் தினமும் வீட்டுக்கு வரமுடியுமே...?" அப்பொழுது வசந்தினி வீட்டுள் இருந்து வெளியே வந்தாள். அவளைக் கண்டதும் கதிரேசன் திடுக்கிட்டார். நவராசாவின் உடல் வியர்த்தது.

வசந்தினி அவன் படுக்கையால் எழும்புமுன் வந்து விட்டாள். அவளைப் பார்க்க அவனால் முடியவில்லை. அவள் கூச்சமில்லாது வந்து அவனுக்கு அருகில் இருந்தாள்.

“நீ ஏன் இங்கே வந்தாய்? சுப்பிரமணியம் இப்போ வருவான்…” என்று அவன் கூறும் போது வசந்தினி குறுக்கிட்டுச் சொன்னாள்; “எல்லாவற்றிற்கும் உங்களுக்குப் பயம்..” என்றவாறு நெருங்கியிருந்து கன்னத்தில் முத்தமிட்டாள்.

“அக்கம் பக்கத்தவர் பார்த்தால்கரைச்சல். பக்கத்து வீட்டில் இருக்கும் சந்திரா ஆசிரியை கண்டால் போதும் கைகாலெல்லாம் வைத்துக் கதைப்பா” என்று நவராசா சொல்லிக் கொண்டிருந்தான். அவள் அகைத் காதில் வாங்கிக் கொள்ளாது சமையலறைக்குச் சென்று தேநீர் தயாரிப்பதற்காக அடுப்பை மூட்டினாள்.

அப்போது சுப்பிரமணியம் அங்கு சுடுநீர்ப்போத்தலுடன் வந்தான்; “நேற்று மூவாயிரம் ரூபாவுக்கு வாழைக்குலை விற்றேன். வெண்காயத்திற்குக் கிருமி நாசினி தெளித்தனான்..” என்று சொல்லிக் கொண்டிருந்தவன் கதைப்பதை நிறுத்திவிட்டுச் சமைலறையைப் பார்த்தான். பின் கேட்டான்; “அம்மா வந்திட்டாவா…?”

நவராசாவுக்கு வியர்த்தது; “இல்லை வசந்தினி…” என்று அவன் வார்த்தையை முடிக்குமுன் சுப்பிரமணியம் சொன்னான்; “தம்பீ நீர்

நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்; நல்லவர். தப்பித்தவறிக்கூட அவளின் நிழல் கூட உம்மில் படக்கூடாது. இவளால் அழிந்தவர்கள் பலர். இவள் வீட்டுக்கு வந்ததை அறிந்தால் துர்க்கா அம்மா வீட்டை விட்டே போய் விடுவா. இவளை ஏன் வீட்டின் உள்ளே விட்டீர்கள். அருளாகிய சிறந்த பொருளை ஆராய்ந்து, நல்ல வழியில் நடப்பவர்கள், பொருள் ஒன்றையே தனது நலமாக எண்ணும் பொதுமகன்றும் அற்பமான இன்பத்தை மனதால் கூட விரும்பமாட்டார்கள். நீங்கள் நல்லவர்; ஒழுக்கமானவர். இனிமேல் இவளை வீட்டில் அண்டாதீர்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

''தெரியாத்தனமாகப் பிணத்துடன் உறவு கொண்டு விட்டேன்'' என்று நினைக்க நவராசாவுக்கு வேதனையாக இருந்தது. அத்துடன் கதிரேசன் அவளைக் கண்டு விட்டார்; ''அவர் இனி என்னென்ன கூறப்போகின்றாரோ'' என்று நினைத்துப் பயந்தான் நவராசா.

''வசந்தியைப் பெண் என்று நினைக்கவே முடியாது. பெண்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். ஆனால் வசந்தினிக்கு இவை எதுவுமே இல்லை. அதனால் முதல் முதலில் அவள் யாரையாவது கண்டாலும் அதற்கு முன்பு பழகியவர்களைப் போலவே நடந்து கொள்வாள். நான் கிருஷ்னா ஆசிரியரின் மனைவியின் தங்கையின் திருமணத்திற்கு மாலை நேரம் தான் சென்றேன். அங்கே வசந்தினி இருந்தாள். என்னைச் சாப்பிடுமாறு கேட்டாள். நான் சாப்பிட அமர்ந்த போது அவள் எனக்கு அருகில் வந்தமர்ந்து தனது

காலால் என்னைத் தட்டினாள்'' கெங்காதரன் சொன்ன வார்த்தைகள் அவனது காதில் ஒலித்தது.

முன்பு அதைக் கெங்காதரன் கூறிய போது "இப்படி ஒரு பெண் நடப்பாளா..? கெங்காதரன் வசந்தினியின் மீதுள்ள அளவு கடந்த கோபத்தால் அவளைப் பழிவாங்குவதற்காகக் கூறுகிறான்'' என்றே நினைத்தான். அதனால் அவன் கூறியவற்றை அவன் இதுவரை நம்பவில்லை. ஆனால் இரவு வசந்தினி தன்னுடன் நடந்து கொண்ட முறையில் இருந்து கெங்காதரன் கூறிய அனைத்தும் உண்மை என்பதை உணர்ந்து கொண்டான். "பெண்கள் இப்படியும் நடப்பார்களா..?'' அவனுக்கு நம்பக் கஷ்டமாக இருந்தது.

**914. பொருட்பொருளார் புன்நலம் தோயார் அருட்பொருள் ஆயும் அறிவி னவர்.**

பொருள் ஒன்றையே பொருளாகக் கொண்ட பொதுமகளிரின் கீழான இன்பத்தை, அருளாகிய சிறந்த பொருளை ஆராயும் அறிவுடையோர் விரும்பமாட்டார்கள்.

## பொதுவான இன்பம்

கதிரேசன் நவராசாவைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது மௌனம் நவராசாவைப் பயமுறுத்தியது. மனதில் குற்றமிருந்ததால் அவன் அளவுக்கதிகமாகப் பயப்பட்டான்.

"அயலில் இருப்பது எந்தக் குடியானாலும் அக்குடியோடு அன்புடன் இருக்க வேண்டுமென்று

பெரியவர்கள் சொல்வது சாதியைக் குறித்துத் தான். உலகில் உள்ள எந்தச் சாதிக் குடியென்றாலும் அயலில் இருந்தால் அவர்களுடன் சேர்ந்து வாழ வேண்டும். ஆனால் வேளாளக் குடியானாலும் அது விபச்சாரக் குடும்பமானால் அதை ஒதக்கியே வைத்தல் வேண்டும். இவள் சமூகத்தின் நோய். அயல் வீடு என்று அவளும், பக்கத்து வீட்டுக்காரி என்று நீயும் நினைப்பதை அயலில் உள்ளவர்கள் ஏற்கமாட்டார்கள். ஏனென்றால்அறிவுள்ளவர்கள் பொருள் கொடுக்கின்ற எல்லோருக்கும் பொதுவான இன்பம் தருகின்ற விலை மாதரின் இழிந்த தொடர்பை ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். அவள் இலட்சுமி கடாட்சம் உள்ள எந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தாலும் அவ்வீட்டுள் மூதேவி குடியேறி விடுவாள். அவள் இன்று உனது வீட்டில் காலடி எடுத்து வைத்திருக்கிறாள், இனி என்னென்ன விபரீதங்கள் நடக்கப் போகின்றனவோ தெரியவில்லை'' கலங்கினார் கதிரேசன்.

``நான்அவளின் வீட்டுக்குச் செல்லவில்லை. அவளை வரும்படி கூறவும் இல்லை. காலையில் அவளாக வந்து தேநீர் வைத்துத் தருகிறேன் என்றாள்...''

``நீ விட்டிருக்கக் கூடாது. நல்ல குடியில் பிறந்தவர்கள் ஏழைகளானாலும் நல்ல வழியில்தான் நடப்பார்கள். வேலுப்பிள்ளையின் மனைவிதானே உனது வீட்டுக்குச் சமைப்பதற்கு வருபவள். அவள் இப்பொழுது தனது கணவனைத் தானே காலையிலும் மாலையிலும் அனுப்புகிறாள். அவன் வந்து வீடுவாசல்களைக் கூட்டித் துப்பரவு செய்கிறான். சுப்பிரமணியம் தேநீரைச் சுடுநீர்ப்

போத்தலில் கொண்டு வந்து தருகிறான். ஏன் தெரியுமா….? ‘‘பெண்களும் கொடிகளும் அருகில் இருப்பதைக் கொழுகொம்பாக நினைத்துப் படர ஆரம்பித்து விடும்..’’ என்று பஞ்ச தந்திரம் என்ற நூல் கூறுகிறது. பெண்கள் ஆண்களுடன் தனிமையில் கூடியிருந்து பழகக் கூடாது. அவா்கள் தற்செயலாகத் தொடுவது உரசுவது போல நடப்பார்கள். அந்தத் தற்காலிக இன்பம் பின் தேவையாக மாறி விடும். வசந்தினி கெட்டுப் போவதற்கு காரணமாக இருந்தது அவளது தாயார்தான். வீட்டில் தேவையில்லாத ஆண்களை அண்டக் கூடாது. அவள் கன்னியாக இருந்த காலத்தில் ஏராளமான ஆண்கள் அவளது வீட்டுக்கு வருவார்கள். திருமணமான பின் அவளது கணவன் அவளையே கதியென்று வாழ்ந்தான். அவனை அவள் எல்லா வழிகளிலும் திருப்திப்படுத்தி தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறாள். அவன் சீராக நடந்தால் அவள் கெட்டிருக்க மாட்டாள். இந்த ஊரில் வேறு எந்தப் பெண் பிற ஆண்களுடன் வாகனத்தில் செல்கிறாள். படித்தவன்; பெரிய நிறுவனமொன்றில் கடமை புரிபவன்தான் வீட்டில் இருந்து கொண்டு இன்னொருவரின் வாகனத்தில் அவளை அனுப்புகிறான். அதுதான் பரவாயில்லை அவன்தான் போகும் நிகழ்வுகளுக்கும் அவளை அவனின் வாகனத்தில் தானே அனுப்புகிறான். இதை நினைக்க எனக்கு அருவருப்பாக இருக்கு. படிக்காத பாமரர்கள் கூட அப்படி நடக்கமாட்டார்கள். அவள் வந்தால் சொல்லு. ‘இனிமேல் இங்கே வரவேண்டாமென்று.’ முட்செடி மரமாக வளர்வதற்கு முன் வெட்டிவிடல் வேண்டும். முதிர்ந்த பிறகு வெட்டியழிப்பது மிகவும் கஷ்டம். கையைப்

புண்ணாக்கும்; விதைகளைச் சொரிந்திருக்கும்.'' என்றார் கதிரேசன்.

''நான் வரச்சொல்லவில்லை......'' என்று நவராசா கூறும் போது கதிரேசன் கோபமாகச் சொன்னார்; ''அது எனக்குத் தெரியும். நீ ஏன் அவளை வருமாறு கூறுகிறாய். அவள் தான் உன்னைப் பிடிப்பதற்காக வந்திருப்பாள். ஏற்கனவே அவள் பலரைப் பிடித்தவள். முன்பு கணவனோடு எங்கோ சென்றவள். அங்கு ஒருவனை பிடித்துக் கொண்டு வந்து இங்குள்ளவர்களுக்கு அவன் புரிஷனின் இனத்தவன் என்று கூறி இரவும் பகலும் அவனோடு திரிந்தவள். விலை மாதர்கள் தமது வாடிக்கையாளர்களைக் காணும் போது அவர்கள் தான் தமது உயிருக்குயிரான காதலர்கள் என்று கூறி மயக்குவார்கள். அந்தந்த நேரத்திற்கேற்ற மாதிரி வேஷம் போடுவதில் அவர்கள் வல்லவர்கள். தமது காரியம் பார்ப்பதற்காக அவர்கள் எதையும் செய்வார்கள். அவர்களை நம்பி நடப்பவர்கள் தான் மடையர்கள். உன்னால் அவளுக்குச் சொல்ல முடியாவிட்டால் சொல்லு நான் போய்ச்சொல்லி விட்டு வருகிறேன்.'' என்று எழுந்தார் கதிரேசன்.

''வேண்டாம் அப்பு, நான் சொல்கிறேன்'' என்றான் நவராசா.

''சரி கூடிய சீக்கிரம் சொல். நாலைந்து தரம் அவள் வந்தாளேயானால் வேரூன்றி விடுவாள்'' என்றார் கதிரேசன்.

---

**915. பொதுநலத்தார் புன்நலம் தோயார் மதிநலத்தின்**
**மாண்ட அறிவி னவர்.**

---

இயற்கையான அறிவால் ஆராய்ந்து அறிந்தோர், பொருள் கொடுப்பவர்கள் எல்லோருக்கும் பொதுவா இன்பத்தைக் கொடுக்கும். பொது மகளிரின் இழிந்த தொடர்பை ஒரு போதும் விரும்பமாட்டார்.

## இழிந்த சுகம்

“நான் அவளை இனிமேல் இங்கு வரவேண்டாமென்று சொல்கிறேன் நீங்கள் போங்கோ. நான் உங்களின் பேரன். தவறான வழிகளில் நடக்க மாட்டேன். முன்பு நான் தவறுகள் செய்யும் போது நீங்கள் அறிவுரைகள் சொன்னீர்கள். அதை நான் கேட்டு நடந்தேன். தன்சுகம் ஒன்றையே கருத்திற் கொண்டு பலவீனமானவர்களை அடிமைப்படுத்தி அவர்களிடமிருந்து திட்டமிட்டுத் தான் அவர்களுக்கு நன்மை செய்வது போல நடந்து அவர்களைக் கழுத்தறுக்கும் வசந்தினி போன்றோரின் பசப்பு வார்த்தைகளை நம்பி நான் மோசம் போக மாட்டேன்” என்றான் நவராசா.

“பேரா. உன்னில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. நான் தோளில் தூக்கி வளர்த்த பிள்ளை நீ. நீ தவறு செய்ய மாட்டாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவள் பயங்கரமானவள். அவளது சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் தான் அதன் தார்ப்பரியம் தெரியும். அவள் முற்றும் துறந்த முனிவர்களையே முழுமையாக விழுங்கக் கூடியவள். சிரித்துப்

பேசினாளானால் முன்னால் நிற்பவரின் சிந்தை குழம்பி விடும். அதுமட்டுமல்ல ஊரவர்கள் எவரும் அவளை மதிப்பதில்லை. அவளது இரத்த உறவினர்களே முன்பு அவளுக்குப் பேசிய திருமணங்களைக் குழப்பினார்கள். அவளது குடும்பத்தினரோடு அவளது இனத்தவர்கள் யாரும் உறவு வைப்பதில்லை. நல்லது கெட்டதற்குக் கூட அவர்களது சபையில் உறவினர்கள் அமர்ந்து உணவருந்துவதில்லை. ஊரவர்களையும் அயலவர்களையும் அவள் கலகலப்பாகப் பேசித் தனக்குச் சாதகமான வர்களாக வைத்திருக்கப் பார்க்கிறாள். ஆனால் முடியவில்லை. உனது வீட்டுக்கு அவள் வந்து உனக்குத் தேநீர் வைத்துத் தந்ததை ஊரார் அறிந்தால் உன்னைக் கேவலமாக நினைப்பார்கள். அதனால் தான் சொல்கிறேன். நீ அவளது குணங்கள் யாவும் தெரிந்தனீ. அத்துன் நீ அவளது கணவனின் நண்பன். அவன் மிகவும் நல்லவன். நன்மை தீமை அறியாதவன்; எல்லோரையும் நல்லவர்களாக நம்புபவன். அவன் தொழில்செய்யுமிடத்தில் நல்ல பெயரோடும் புகழோடும் இருக்கிறான். “தன்னை நம்புகிறவனின் மனைவியை விரும்பி அவளின் தோள்களைத் தழுவுபவன் உயிரோடு வாழ்ந்தாலும் அவன் இறந்தவனே ஆவான்” என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். பிறருடைய மனைவியை மனத்தால் கூட நினைக்காமல் இருப்பது ஆண்மையும் ஒழுக்கமும் ஆகும். அவள் இன்னொருவனின் மனைவி என்பதை நீ எப்போதும் நினைவில் வைத்துக் கொள்” என்றார் கதிரேசன்.

“அப்பு, நான் நல்லொழுக்கம் மிகுந்தவன். கடைசி வரையும் தம் அழகில் கர்வம் கொண்டு

இழிந்த சுகத்தை விற்கும் வசந்தினி போன்ற விலை மகளின் தோள்களைத்தழுவ மாட்டேன்.'' என்றான் நவராசா.

கதிரேசன் புறப்பட்டுச் சென்றார். அவர் சென்ற பின்பு கெங்காதரன் அங்கு வந்தான். அவன் அங்க வரும் போது நன்றாகக் குடித்திருந்தான். அவன் நவராசாவின் நண்பன்; நம்பிக்கைக்குரியவன்.

''வா கெங்கா, நீ அளவுக்கதிகமாகக் குடித்திருக்கிறாய். உனக்கு நல்ல மனைவி வாய்த்திருக்கிறாள். அறிவான பிள்ளைகள் இருக்கிறார்கள். அப்படி இருக்க இந்த விஷத்தை ஏன் குடிக்கிறாய்? தயவு செய்து இந்தக் குடியை விடு''

''நான் குடிப்பதில்லை; எமது பரம்பரையில் யாரும் குடித்ததில்லை. மிகவும் ஒழுக்க மாகவும் நல்ல முறையிலும் வாழ்ந்து கொண்டிருந்த என்னுடைய வாழ்க்கையில் வசந்தினி குறுக்கிட்டாள்....?'' அழுதான் கெங்காதரன்; ''அவள் அழகி, மிகப்பெரிய அழகி. தான் தான் அழகி என்ற கர்வம் அவளுக்கு அளவுக்கு அதிகமாக இருக்கிறது. அந்த அழகுக்கு நான் அடிமையாகி விட்டேன். அதனால் அவளே தஞ்சமென்றிருந்தேன். ஒருநாள் அவள் கடைக்கு வந்தாள் ''இன்று வீட்டுக்கு வாருங்கள்'' என்று சொன்னாள். அவளுடன் முன்பே உறவு கொண்டவன் நான். என்னுடைய மனைவியை விடச் சகல வழிகளிலும் எந்நேரமும் ஒத்துழைப்பு வழங்குவாள் வசந்தினி. வீட்டுக்குச் சென்ற போது; வீட்டில் இருந்த மதுவைக் ''குடியுங்கள்'' என்று தந்தாள்.

அவளுக்காக அன்று குடித்த குடியை என்னால் இன்றும் விட முடியவில்லை. நல்ல மனிதர்கள், கற்றவர்கள், ஒழக்கத்தை விரும்புபவர்கள், தமது மனைவியைத் தவிர வேறு யாரையும் தழுவக்கூடாது. அவள் காசு கொடுக்கும் எல்லோருக்கும் தன் நலத்தைக் விற்பாள். வசந்தினி அழகி; பேரழகி. உனது அயல் வீட்டக்காரி. துர்க்கா தற்போது உனது வீட்டில் இல்லை. அதைப் பயன்படுத்தி உன்னைக் கெடுக்க வருவாள். தன் அழகில கர்வங் கொண்டு உன்னை மயக்கலாமென வருவாள் அவளை அடித்துக் கலை'' என்றான் கெங்காதரன்.

---

**916. தம்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்நலம் பாரிப்பார் தோள்.**

---

தம் அழகால் கர்வம் கொண்டு இழிவான சுகத்தை விற்கும் பொது மகளிரின் தோளை, நல்லொழுக்கத்தைப் போற்றும் சான்றோர் தழுவமாட்டார்.

**ஒழுக்கமில்லாதவரே**

''ஊரில் உள்ள எவரும் வசந்தினியை மதிப்பதில்லை. ஆனால் அவளைக் கண்டதும், ''அவள் ஒரு பெரிய உத்தியோககாரனின் மனைவி'' என்று மதிப்பார்கள். அவளது உறவினர்களும் மதிப்பதில்லை. ஆனால் அவளது கணவனும் கணவனது உறவினர்களும் அவளைத் தெய்வமாக மதிப்பார்கள். அவள் ஒரு கைதேர்ந்த மாஜாஜாலக்காரி. புரிசனின் தகப்பன் தாயைக் கடவுளாக மதிப்பதாக நடிப்பாள். புரிசனது

சகோதரர்களது நல்ல கெட்ட நிகழ்வுகளில் தன்னை முக்கியப்படுத்திக் கொள்வாள். அவளது மயக்கு வார்த்தைகளுக்கு அடிபணியாதவர்கள் யாருமில்லை. அவளது புரிசனது தங்கையின் திருமணத்திற்கு நான் தான் முறிந்தேன். சகல ஏற்பாடுகளையும் நான் தான் கவனித்தேன். அவளின் நடிப்பால் என்னை அவர்கள் அந்தக் குடும்பத்தவனாகவே எண்ணிப் பழகினர். அத்துடன் அவள் மகா கெட்டிக்காரி. வீட்டில் எத்தனை பேரிருந்தாலும் என்னைத் தனது பேரன்புள்ள காதலனாகவே நடத்துவாள். அவர்கள் எல்லோரும் இருக்கும் போதும் தனது எண்ணங்களைச் சைகையால் காட்டி என்னைத் தனிமையில் அழைத்துச் சென்று முத்தமிடுவாள். நான் அவளது பேரழகை அந்நேரங்களில் பார்த்து ரசித்துள்ளேன். அந்தளவிற்கு அனைவரையும் ஏமாற்றும் தன்மை கொண்ட புத்திசாலி அவள். அவளைச் சூழ்ந்ருப்போர் சந்தேகிக்க முடியாதபடி நடந்து கொள்வாள்'' என்றான் கெங்காதரன்.

``அந்த விலை மகளைப் பற்றி ஏன் எனக்குச் சொல்கிறாய்? உள்ளத்தை ஒழுக்க நெறியில் நிலை நிறுத்த முடியாதவர்கள் தான், தம் உள்ளத்தில் வேறு பொருட்களை விரும்பிக் கூடும் தன்மையுடைய விலைமகளின் தோள்களைத் தழுவுவார்கள்'' என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் வசந்தினி பொல்லாதவள்; கொடியவள். நன்கு திட்டமிட்டு எமது நலனில் அக்கறை உள்ளவள் போல நடித்துக் காரியம் பார்ப்பதில் வல்லவள். நான் ஒழுக்கமுள்ளவன்; எனது பெற்றோர் சிவபூசை செய்த பின்பே உணவை உண்ணும் மரபைக் கடைப்பிடிப்பவர்கள்.

எனது மனைவி உத்தமி; மகாலட்சுமி. கவரிமான் போல ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்தும் பரம்பரையில் உதித்த உத்தமி. இருந்தும் வசந்தினியின் மயக்குவார்த்தைகளில் மயங்கி விட்டேன். அவளது பேரழகில் பித்துப் பிடித்து அவளே தஞ்சமென வாழ்ந்து, இன்று சகலவற்றையும் இழந்து விட்டேன். இருந்தும் எனது மவையின் உறுதியால் இப்போது சிறிது சிறிதாகப் பழைய நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறேன். வசந்தினியியால் பழகிய இக்குடிப்பழக்கத்தை என்னால் விட முடியவில்லை. நீ அவளை நம்பாதே. நம்பினால் செத்த பிணத்திற்குச் சமமாகி விடுவாய்.''

"நான் நம்பமாட்டன்....'' என்று நவராசா சொல்லும் போது கெங்காதரன் சொன்னான்; "நீ எனக்குச் சொல்லாதை. அவள் நினைத்தால் யாரையும் எதுவுஞ் செய்வாள். உன்னைப் பிடிப்பதற்காக அவள் பலகாலமாக முயற்சி செய்தவள். ஆனால் சரி வரேல்லை. இப்ப துர்க்கா தன்னுடைய பெற்றோரின் வீட்டுக்குச் சென்ற தால் பக்கத்து வீட்டுக்காரியான அவள் உனக்கு உதவிகள் செய்ய வருவாள். காலமை சாப்பாடு கொண்டு வந்திருப்பாளே...''

நவராசா திகைத்துப் போனான். அவனால் பேச முடியவில்லை; "சுப்பிரமணியம் காலையில் வந்து சொல்லிக் கவலைப்பட்டான். அது தான் நான்குடித்து விட்டு வந்தேன். டேய் நவம், என்னைப் பாசத்தோடு கொஞ்சினவள்; நான் அவள் தான் சொர்க்கம் என்று நினைத்தன். அப்படி அவள் நடந்து கொண்டாள். கடந்த ஐந்தாறு வருடங்களாக அவள் தனது பிறந்த தினத்திற்குக் கோயிலுக்குச்

சென்று அர்ச்சனை செய்து விட்டுப் பிரசாதங் களுடன் வருவாள். என்னை, தன்னை ஆசீர்வதிக்கும்படி சொல்வாள். நெற்றியில் குங்கும மிடச் சொல்வாள். நான் சென்ற வருடம் அவளது நெற்றியில் குங்குமமிட்டு விட்டு எனது கழுத்திலிருந்த சங்கிலியைக் கழற்றிக் கொடுத்தேன். அதை அவள் தனது கழுத்தில் அணிவிக்கும்படி கூறினாள். நான் அவளது கழுத்தில் போட்டேன். பின் சுவாமிக்கு அர்ச்சித்த மாலையைத் தனது கழுத்தில் போடும்படி சொன்னாள். நான் போட்டேன். அவள் அதைக் கழற்றி எனது கழுத்தில் அணிவித்தாள். இதே போலத்தான தனது திருமண நாளிலும் நடந்து கொள்வாள். மஜா ஜால வித்தைகள் காட்டுவதில் அவள் வல்லவள். மனதைக் கட்டுபடுத்த முடியாதவர்கள், நெஞ்சில் வேறு பொருளை விரும்பிக் கூடும் பொது மகளின் தோளைத் தழுவுவர். அவள் அடிக்கடி ஆட்களை மாற்றுவாள். இப்ப அவள் இன்னொருவனோடு வாகனத்தில் சுற்றித் திரிகிறாள். கேட்டால் இனத்தவனென்றாள். நான் நம்பவில்லை. அவளை நான் கையும் களவுமாகப் பிடித்து விட்டேன். அவள் நம்பிக்கைக்குரியவள் அல்ல. எனது எதிகளோடும் கூடிக் குலாவியிருக்கிறாள். எனது வியாபார இரகசியங்கள் எதிரிகளுக்கு உடனுக்குடன் தெரிந்து விடும். இவளின் மீது அதீத நம்பிக்கை கொண்ட நான் வியாபார இரகசியங்கள் தெரிந்து விட்டன எனக் கலங்கும் போது, அவள் அதை எனது நண்பர்கள்தான் கூறியிருப்பார்கள் என்று சொல்வாள். அத்துடன் நண்பர்களின் பெயர்களையும் கூறுவாள். அதை நான் நம்பிவிடுவேன். இப்போதுதான் எல்லாம் எனக்குப் புரிகிறது. நீ ஏமாந்து விடாதே’’ என்றான் கெங்காதரன்.

**917. நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சின்
பேணிப் புணர்பவர் தோள்.**

மனதைக் கட்டுப்படுத்தி அதை ஆளும் ஆற்றல் இல்லாதவர் தம் நெஞ்சில் வேறு பொருளை விரும்பிக் கூடும் பொது மகளின் தோளைத் தழுவுவர்.

## மோகினி மயக்கு

“உண்மைதான். நான் ஏமாந்து விட்டேன். வசந்தினி தானாகவே வந்து எனது கைகளைப் பிடித்து வருடிய போது இரண்டு வாரகாலமாகத் துர்க்காவின் அணைப்பின்றி யிருந்த நான் மோசம் போய்விட்னே். இவ்வளவு காலமும் ஒழுக்கம் தவறாது வாழ்ந்த நான், வஞ்சனை நிறைந்த விலைமகளான வசந்தினியின் தன்மையை அறியாது அவளின் மோக வலையில் சிக்கி அவளின் மோகினி மயக்குக்கு ஆளாகி விட்டேன்.” என்று நினைத்தான் நவராசா.

“நேற்று வந்தவள் உன்னை மயக்கி தன்வசப்படுத்தி விட்டாளா..? உன்னைப் பார்க்க அப்படித்தான் தோன்றுகிறது. உள்ளத்தை ஒழுக்கநெறியில் நிலை நிறுத்த முடியாதவர்கள் தான் தம் உள்ளத்தில் வேறு பொருட்களை விரும்பிக்கூடும் தன்மையுடைய விலைமகளின் தோளைத் தழுவுவார்கள். என்னால் உள்ளத்தை

ஒழுக்க நெறியில் நிலை நிறுத்த முடியவில்லை. அதனால் தான் அவளின் தோள்களைத் தழுவினேன். நீ ஒழுக்கமுள்ளவன்; நல்லவன்; எனது உயிர் நண்பன். அதனால் அவள்தரும் உணவை உண்ணாதே. அது நஞ்சு. உன்னை மெல்ல மெல்ல கொல்லும் நஞ்சு. அவள் தேன்போல இனிமையாகக் கதைப்பாள். அமிர்தம் போன்ற உணவுகளைத் தருவாள். அதை உண்மையென்று நம்பி அவளது மோக வலையில் விழுந்தால் நீ தப்பவே முடியாது. என்னிடமுள்ளவற்றைக் கவர எண்ணி எத்தனை நாடகமாடினாள் தெரியுமா? அவளது புரிஷன் காலையில் சென்றால் இரவுதான் வருவான். அவள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு என்னை வரச் சொல்வாள். நான் அங்கு சென்றால் எனது துவிச்சக்கரவண்டியைத் தூக்கி வருமாறு சொல்வாள். அவளது வீட்டில் அவளது சகோதரன் ஒருவன் இருக்கிறான். அவன் தான் முற்றத்தைக் கூட்டுவது. அவர்கள் எல்லோரும் வேலைக்குச் சென்ற பின் நான் துவிச்சக்கரவண்டியை உருட்டிச் சென்றேன். அதன் அடையாளம் முற்றத்தில் பதிந்து விட்டது. அதைக் கவனித்த அவன்; "யாருடைய துவிச்சக்கரவண்டி சமையலறை வரை சென்றது?" என்று கேட்டுள்ளான். அதனால் வசந்தினி துவிச்சக்கரவண்டியைத் தூக்கிச் சென்று தமது சமையலறைக்கு முன்பாக உள்ள அறையில் விடுமாறு கூறுவாள். அவள் ஒரு கை தேர்ந்த விபச்சாரி." என்று அலம்பினான் கெங்காதரன்.

"உண்மைதான் இல்லாவிட்டால் வீட்டுக்கு வந்து நான் பயத்துடன் நடுங்க, அவள் எனது கையைப் பிடிப்பாளா...? அந்த நேரம் உணர்ச்சி மேலீட்டால் அவளைத் தழுவி இன்பத்தைப்

பெற்றுவிட்டேன். உண்மையாகச் சொல்லப் போனால் இருட்டறையில் பிணத்தைத் தழுவியதைப் போலத்தான் இருந்தது. துர்க்காவுடன் இன்பம் அனுபவிக்கும் போது உலகையே நான் மறந்து விடுவேன். ஆனால் வசந்தினியைப் பயத்துடனும் அச்சத்துடனும் தழுவியதால் எந்த உணர்வையும் என்னால் பெற முடியவில்லை'' என்று நினைத்தான் நவராசா.

''தனக்கு எவ்வளவு பொருள்சேரும் என்ற நினைப்புடன் தழுவும் பொழுது மகளிர் தரும் இன்பம் போலியானது. எனது மனைவி அன்பு மேலீட்டோடும், நான் இன்பமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடும் தன்னைப் பூரணமாக அர்ப்பணித்து, எனது இன்பம் தான் தனது இன்பம் என்று நினைத்து, நான் தன்னை எந்நாளும் விரும்ப வேண்டும், தன்னோடு அன்பாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கடவுளை வணங்கித்தான் என்னுடன் கூடி இன்பத்தை அனுபவிப்பாள். ஆனால் விலை மகள் தனக்கு மேன்மேலும் பொருள் சேரவேண்டும், தன்னுடன் கூடிக் குலாவுபவன் தனது மனைவி மக்கள் உறவினர்களை மறக்க வேண்டும். எனது அழகிற்கும் கவர்ச்சிக்கும் அடிமையாக வேண்டும், தனது பொருட்களையெல்லாம் என்னிடம் கொட்ட வேண்டும். அவன் என்றும் என் அடிமையாக இருக்க வேண்டும் என்று நினைத்துத் தன்னாலான சகல வித்தைகளையும் காண்பிப்பாள். அவளுக்கு வெட்கம் என்பதே இல்லை. பெண்களுக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எதுவும் இல்லை. உயிரற்ற உடலைப் போலவே இருப்பாள். அதனால் மனைவி வெட்கப்படும் செயல்கள், மனைவி நாணப்படும் விடயங்களுக்கெல்லாம் அவள்

வெட்கப்படாது நாணப்படாது தன்னை விற்பனைப் பொருளாக நினைத்துச் செயற்படுவாள். அவற்றை வீட்டில் காணாத நான் அதிர்ச்சியுற்று அவளின் வெற்று உடலைத் தரிசித்து ஏமாந்து விட்டேன். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்று சொல்லப்படுகின்ற குணங்கள் பெண்களிடத்தில் இருந்தால் தான் அவர்கள் கணவர்களால் விரும்பப்படுவார்கள். தம்கவர்ச்சியைக் காட்டி அதற்கு விலை பேசுபவர்கள் காலகதியில் ஒதுக்கப்படுவார்கள். இது நான் கண்ட உண்மை. வசந்தினி காலையில் உனது வீட்டுக்கு வந்ததாகச் சுப்பிரமணியம் சொன்னான். நவம், என் உயிர் நண்பா, மிகவும் அவதானமாக இரு. அவள் பொதுமகள் எல்லோருடனும் கூடுவாள். அவள் கடவுளையும் ஏமாற்றுபவள். நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கொடியேறினால் இருபத்தைந்து தினங்களும் விரதம் அனுட்டிப்பாள். தேரிலன்று நோன்பு நோர்ப்பாள். தேர் முடிய நான் விட்டுக்குச் சென்றால் என்னோடு கூடுயிருப்பாள். அப்படியானவள் அவள்''

''இடர்தரு மின்னல்கள் செய்தவரென்பாள்
என்னின்பத்தைக் கொன்று புதைத்தவரென்பாள்
இனியவளெனநினைத்திடும் வேளை
கயவரை அணைத்துக் காமுறுவாளே!''

வெறியுடன் புலம்பிக் கொண்டிருந்தான் கெங்காதரன்.

---

**918. ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்குஎன்ப**
**மாய மகளிர் முயக்கு.**

---

வஞ்சம் நிறைந்த பொது மகளிரின் தன்மையை அறிந்து கொள்ளாதவர்கள், பொது மகளிர் தழுவித் தரும் இன்பத்தை மோகினி மயக்கும் என்று சொல்வர்.

## இழிந்த நகரம்

வசந்தினி நவராசாவின் வீட்டுக்கு வந்தாள். அப்பொழுது கெங்காதரன் அங்கு நின்றான். அவள் கெங்காதரன் அங்கு நிற்பானென எதிர்பார்க்கவில்லை.

“நவம் நீ ஏதோ பெரிதாகச் சொன்னாய். ஒழுக்கமுள்ளவன்; நேர்மையானவன்; விலை மகளின் தோளைத் தழுவாதவன் என்றெல்லாம் சொன்னாய். ஆனால் மோகினி மயக்கத்தைத் தரும் வசந்தினி காலையில் உனக்கு உணவு கொண்டு வந்ததாகச் சுப்பிரமணியம் சொன்னான். கதிரேசப்பு மிகவும் மோசமான விலைமகளான வசந்தினியை நீ காண்பதில்லை என்று சொன்னார். அவள் இப்போது அரைகுறை ஆடையுடன் உனக்கு ஏதோ கொண்டு வந்துள்ளாள். பார் அவளின் கோலத்தை. தோள்மூட்டுவரை அவளது கைகள் தெரிகின்றன. கழுத்துப் பகுதிச் சட்டை மார்பகங்களுக்குக் கீழே உள்ளது. முதுகு முழுவதும் தெரிகிறது. இப்படித்தான் என்னை மயக்கினவள். ஒருநாள் இளஞ் சிவப்பு இரவாடை அணிந்திருந்தாள். நான் உள்ளே சென்றதும் அதையும் கழற்றிவிட்டாள். அதைப் பார்த்து அதிசயித்த நான் என்னுடைய பொருட்கள் எல்லாவற்றையும் தாரை வார்த்து விட்டேன். என்னிடமிருந்த பொருட்களைக் கவர்ந்த அவள் பின் என்னைச் செல்லாக் காசாக மதித்தாள்; என்னை அவமானப்படுத்தினாள்; என்னை

விட்டு விட்டு யாரோ ஒருவனோடு மோட்டார் வண்டியில் ஊரைச் சுற்றினாள்; கேட்டால் நீ தவறாகக் கற்பனை செய்து மனதை அலைய விடுகிறாய்'' என்று சொன்னாள். பின்பு பார்த்தால் இரவு பத்து மணிக்கு தனது இனத்தவர் வீட்டில் ஊர்பேர் தெரியாதவனுடன் இருக்கிறாள். கேட்டால் சிரித்து மழுப்புகிறாள். தனது கணவனை விட்டு விட்டு என்னுடன் கூடிக் குதூகலித்தவள் என்னை விட்டு விட்டு இன்னொருவனுடன் கூடிக் குதூகலிக்க மாட்டாள் என்று எப்படி நம்புவது. இவளை நம்பாதே. நான் கடைசியாக இவளைச் சந்தித்த போது, நான் செத்தால் கூட நீ எனது வீட்டுக்கு வரக்கூடாது. உன்னுடைய நிழல் பட்டால் கூட எனது வீடு நரகமாகி விடும் என்று சொன்னேன். அவளுக்கு வெட்கம் ரோசம் மானம் எதுவும் இல்லை. நேற்றும் எனது வீட்டுக்கு வந்தாள். எனது மனைவிக்கு அவளைப் பற்றித் தெரியும். இருந்தும் அவள் எதுவும் பேசமாட்டாள். அவள் சென்றதும் விம்மி விம்மி அழுவாள்.'' என்ற கெங்காதரன் வசந்தினியின் பக்கம் திரும்பிச் சொன்னான்; ''நீ மனிதப் பெண்ணா...? இல்லை அரக்கியா...? உன்னால் எப்படிப் பல ஆண்களை ஏமாற்ற முடிகிறது.?''

வசந்தினி பெரிதாகச் சிரித்தாள். பின்; ''ஏன்அளவுக்கதிகமாகக் குடித்து உடம்பைக் கெடுக்கிறீர்கள். மறைவாக இருந்து மதுவைக் குடித்தாலும், பின் அவர்கள் மக்கள் மத்தியில் புலம்புவதால் ஊர் மக்கள் இழிவாகச் சிரிப்பார்கள். இனிமேலாவது குடியாது குடும்பத்தைக் கவனியுங்கள்'' என்றாள் வசந்தினி.

“நீ பத்துப்பேருடன் கூடிக் குலாவுவதைச் சொல்லி ஊர் சிரிக்குது. உன்னால் எப்படி உனது கணவனுக்குத் துரோகமிழைக்க முடிகிறது? அந்த நல்ல மனிதனை ஏமாற்றுகிறாய். உன்னுடைய நடிப்பையும் அழகையும் கண்டு அந்த மனிசன் உன்னை நம்பி நடக்கிறான். அவனுக்கு ஒருநாள் தெரியவரும். அப்போதுதான் நீ அதன் பயனை அனுபவிப்பாய்” என்றான் கெங்காதரன்.

வசந்தினி கலகலப்பாகச் சிரித்தாள். “உனக்கு மதுமயக்கம் அதிகரித்து விட்டது. வீட்டைபோ” என்று கூறிவிட்டுச் சென்றாள்.

நவராசா சுப்பிரமணியம் சொன்னதாகக் கேட்ட போது நீ மறுத்தாய். நான் இப்ப நேரடியாய் அவளைக் கட்டிட்டன். நீ நம்பாவிட்டால் அவளின் உடலில் இன்னென்ன இடங்களில் மஞ்சங்கள் உண்டென்று கூறுகிறேன். நீர் பார். அவள் உனக்கல்ல பணம் கொடுக்கும் எல்லோருக்கும் தனது உடலைக் காட்சிப்படுத்துவாள். ஒழக்கமில்லாத விலை மகளின் மென்மையான தோள் அறிவற்ற இழிந்தவர்கள் ஆழ்ந்து கிடக்கும் நரகம். இவளை நம்பாதே. இவள் புரிசனை ஏமாற்றுவது போல என்னையும் ஏமாற்றிவிட்டாள். ஆனால் நான் அதைக் கண்டு பிடித்தமையால் திருந்தி விட்டேன். நாளடைவில் முன்புபோலப் பணத்தைச் சாம்பாதித்து விடுவேன். நீ கெடக்கூடாது. என்பதற்காகத்தான் சொல்கிறேன். இவளை வீட்டில் அண்டாதே... இன்னொருமுறை இவளை நான் வீட்டில் கண்டால் துர்க்காவிற்குச் சொல்லிவிடுவேன். இவள் பழிவாங்கப்பட வேண்டியவள்; கொல்லப்பட வேண்டியவள்” கத்தினான் கெங்காதரன்.

அதைக் கேட்க நவராசாவுக்குப் பயமாக இருந்தது; "கெங்காதரன் முன்பு வசந்தினியிடம் சென்று வந்தபின் அவளைப் பற்றிப் புகழ்ந்து சொல்வான். இப்பொழுது அவள் கெங்காதரனை விட்டு விட்டு இன்னொருவனுடன் சுற்றித் திரிகிறாள். அது போலத்தான் என்னுடனும் கூடிக் குலாவிவிட்டு வேறொருவனோடும் கூடிக் குலாவுவாள். அதனால் இவளை நினைப்பதே பாவம்" என்று நினைத்தான்.

"விலைமகளின் இனிமையான பேச்சு அமிழ்தமாக இருக்கும். அவளது தோள்கள் சொர்க்கமாக இருக்கும். ஆனால் பலருடன் அவள் சேர்வதைக் கண்டால் அது நரகமாகி விடும். இப்ப நான் நரகத்தை அனுபவிக்கிறேன். அந்த நரகத்தை எனது உற்ற நண்பனாக நீ அனுபவிக்கக் கூடாது. அவளை இனி உன்னுடைய வீட்டில் நான் காணக் கூடாது" என்றான் கெங்காதரன்.

---

**919. வரைவுஇலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்**
**பூரியர்கள் ஆழும் அளறு.**

---

ஒழுக்க நெறியிலிருந்து தவறிய பொது மகளிரின் மென்மையான தோள், அறிவில்லாத கீழ் மக்கள் ஆழ்ந்து கிடக்கின்ற நரகமாகும்.

**கீழ்ப்பட்டவை**

"நான் செய்தது எவ்வளவு தவறு" என்று நினைத்தான் நவராசா; "ஒரு பெண் ஓர் ஆணுடன் கதைக்கவே நாணப்படுவாள். ஆனால் வசந்தினி

ஒரே நாளில் தொடர்புகொண்டு உறவும் கொண்டு விட்டாள். அப்படியானால் இவள் எப்படிப்பட்ட பெண்ணாக இருப்பாள்? இனி இவளை வீட்டில் அண்டக்கூடாது'' என்று நினைத்தான் நவராசா.

கெங்காதன் தனது சட்டைப் பையில் போத்தலில் வைத்திருந்த சாராயத்தை எடுத்துக் குடித்தான். ஏற்கனவே மது அருந்தியதால் நிதானமிழந்திருந்த கெங்காதரன் மீண்டும் குடிப்பதைத் தடுத்தான் நவராசா; ''கெங்கா, குடியாதையடா. யாரோ ஒரு விபச்சாரி உன்னை ஏமாற்றிவிட்டாள் என்பதற்காக நல்லவனான நீ குடிக்கலாமா…? உனக்கு நல்லதொரு மனைவி இருக்கிறாள். பிள்ளைகள் இருக்கின்றனர். நீ குடித்தால் அவர்களின் வாழ்வு நரகமாகிவிடும். தயவு செய்து குடியாதே. உனக்கு முன்னால் இன்னொருவனுடன் உறவு கொண்ட அரக்கியான வசந்தினியை இன்னும் நினைக்கிறாயா…?'' என்று கேட்டான் நவராசா.

''அவள்தான் எனக்கு இக்குடியைப் பழக்கியது. குடித்து விட்டுத் தன்னுடன் சேர்ந்திருந்தால் தானாம் தனக்கு இன்பம்'' என்றாள். குடிக்காத நான் அவளால் குடிக்கப் பழகி விட்டேன். இப்போது அப்பழக்கத்தை விட முடியாதுள்ளது''

''எல்லாம் மனம் தான். நினைத்தால் விட்டு விடலாம். வசந்தினிதான் கதியென்று நினைத்து அவளின் காலடியில் கிடந்த நீ இப்போது அவளை மறந்து வாழவில்லையா..?'' என்று கேட்டான் நவராசா.

‘‘மறந்திட்டன் தான். ஆனால் சிலசமயம் அவளின் இனிய வார்த்தைகளும் மயக்கம் தரும் தோற்றங்களும் மனதில் தோன்றிச் சித்திரவதை செய்கின்றன’’

நவராசா அவனைப் பார்த்துக் கொண்டு நின்றான்; ‘‘ஆறு வரிசம் அவளோடு பழகினனான். அதை மறக்க முடியவில்லை. ஆறு வரிசமும் என்னுடன் தான் இருந்தவள். இப்ப இன்னொருத்தன் வந்திட்டான். எனக்கு வயது போய் விட்டது. என்னிடம் பெற வேண்டியன எல்லாம் பெற்றாயிற்று. இனி ஏன் என்னை என்று நினைத்திட்டாள்’’ என்றான் கெங்காதரன்.

‘‘இனியென்றாலும் விட்டு விட்டு உனது குடும்பத்தைக் கவனி’’ என்றான் நவராசா.

‘‘விட்டுட்டன் அறுதியாய் விட்டுட்டன். அவளைப் பற்றி ஒரு கவிதை எழுதினனான். கேட்டுப்பார்.’’

‘‘அடுத்தவன் மனையை
அமிழ்தென நினைத்தேன்
ஆலகால விஷமானாள்
அன்பு
பரிவு
அக்கறை
காதல்
மோகம்
உரிமை
அர்ப்பணிப்பு
அனைத்தும்

அவளென நினைத்தேன், ஆனால்
அவளோ அனைத்தையும்
அடுத்தவன் மீதும் வைத்தாள்
உன்னைத் தழுவுவது
பிணத்தை
தழுவுவது போன்றது என்றும்
இருமனம் கொண்டவள்
விலைமகள் என்றும்
புரிந்தது
அவளையும்
கள்ளையும்
சூதையும் விலக்கினால்
நிம்மதி பிறக்கும்
திருமகள் உறைவாள்
குடும்பம் பொலியும்''

''எப்படி எனது கவிதை? நான் கற்காதவன். ஏதோ அவளில் மீதிருந்த வெறுப்பால் கவிதை எழுதினேன். அவளைப் பற்றி எழுதியபின் எனக்கு நிம்மதியாக உள்ளது. தணிகாசலம் அண்ணா என்னைக் காணும் போதெல்லாம் சொல்வார்; ''கெங்கா, நீ நல்ல குடியில் பிறந்தவன். உனது தந்தையார் நான்கு பரம்பரை வாழ்வதற்குச் சொத்துச் சேர்த்து வைத்துள்ளார். நீ உழைக்காவிட்டாலும் அவர் சேர்த்த சொத்தைக் கவனமாகப் பராமரித்தாயானால் போதும், உனது நான்கு பரம்பரை நல்ல முறையில் வாழும். நீ பஞ்சமா பாதகங்கள் அனைத்தையும் செய்கிறாய். இருமனம் கொண்ட விலை மகளான வசந்தினியின் காலடியில் கிடக்கிறாய். ''விபச்சாரம் செய்பவளை விரும்பி அவளது வாசல் படியில் நிற்பவன் பிற பாவங்களைச் செய்கின்ற அனைவரையும் விட

மிகக் கொடியவன் என்பார்கள். அத்துடன் நீ அளவுக்கதிகமாகக் கள் அருந்துகிறாய்; சூதாடுகிறாய். இவையெல்லாம் திருமகளால் வெறுக்கப்பட்டவர்கள் மட்டுமே உறவு கொள்வதற்கு உரியவையென்று சொல்வார்.'' அவற்றை விட முடியவில்லை'' என்றான் கெங்காதரன்.

``நீ செய்வது அனைத்தும் பஞ்சமாபாதகங்கள். நீ வசந்தினியை மற...'' என்று நவரசா சொல்லும் போது கெங்காதரன் குறுக்கிட்டுச் சொன்னான்; ``என்னை இப்போ அவள் மதிப்பதில்லை. என்னைவிட இளமையான ஒருவனை அவள் பிடித்து விட்டாள். இனி என்னை அவள் ஏற்க மாட்டாள். அதனால் தான் நான் குடிக்கிறேன்?'' அழுதான்.

``நல்ல வேளை நான் அவளுக்கு அடிமையாகாது விட்டேன். கெங்காதரன் தனது அனுபவத்தைச் சொன்னதால் நான் தப்பினேன்'' என்று நினைத்தான் நவராசா.

## 920. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் திருநீக்கப் பட்டார் தொடர்பு.

இரு வகைப்பட்ட மனமுடைய பொது மகளிரும், கள்ளும், சூதுமாகிய இம் மூன்றும், திருமகளால் நீக்கப்பட்டவர்கள் மட்டுமே உறவு கொள்வதற்கு உரியவை ஆகும்.

**மதிப்பிழப்போர்**

கள்ளைக் குடித்து விட்டுத் தலைகால் புரியாத வெறியில் அலம்பிக் கொண்டிருந்தான் கெங்காதரன். அவனுடைய பேச்சைக் கேட்க நவராசாவுக்கு விசராக இருந்தது. வீட்டை விட்டு போகலாமென்றால் அவன் எழுந்து நடக்க முடியாத நிலையில் இருந்தான். அப்போது வசந்தினி அங்கே வந்தாள். அவளைக் கண்டதும் கெங்காதரனுக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது.

“கண்ணகி வாறா…. கண்ணகி. அவாவுக்கு ஆம்பிளைகளைக் காணப்பிடிக்காது. கட்டிப் பிடிக்கத்தான் பிடிக்கும். உத்தமனாக இருந்த என்னை நம்ப வைத்து, காதலிப்பதாக நடித்து என்னை ஏமாற்றியவள். இப்படி எத்தனை பேர் இவளிடம் ஏமாந்தவை. இப்பேன் இவள் இங்கே வருகிறாள்?. பெம்பிளை இல்லாத வீடு, இவளை வீட்டிலை அண்டாதே. உன்னை மாதிரித்தான் நான் ஒழுக்கமாயிருந்தனான். ஒருநாள் கோயிலடிலை கண்டு சிரித்தாள். பின் கடைக்கு வந்தாள். இவள் கடைக்கு வந்ததோடை நான் கடையை மூடி விட்டேன். பசை இருக்கும் வரை வீட்டில் உள்ள நல்லது கெட்டதுகளுக்கெல்லாம் வருவாள். ஓடி ஓடி உதவி செய்வாள். பசை காஞ்சால் சரி. ஆளையே தெரியாது. இப்ப நான் ஆரோ. யாரோ ஒருவனோடு மோட்டார் வாகனததில் ஆடிக் கொண்டு திரிந்தாள். அவனை இப்ப கொஞ்ச நாட்களாகக் காணவில்லை. அதனால் உன்னிடம் வாறாள்.”

நவராசாவுக்கு அவனின் பேச்சு நடுக்கத்தைக் கொடுத்தது; “யாராவது வந்தால் என்ன நினைப்பார்கள்?” என்று நினைத்தவாறு;

“வசந்தினி அக்கா நீங்கள் உங்களது வீட்டுக்குப் போங்கோ….. இனிமேல் இங்குவரவேண்டாம். நீங்கள் இங்கு வந்து போக ஊர்ச்சனம் கண்டபடி கதைகளைக் கட்டிவிடும்” என்றான்.

வசந்தினி அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவனது முகம் கறுத்திருந்தது. கரிய நிறப் புள்ளிகள் அவளது முகத்தில் இடைக்கிடை இருந்தன. எதுவும் பேசாமல் சென்றாள்.

“இவளோடை சினேகிதமானவர்கள் இப்போ என்னை எதிரியைப் பார்ப்பது போலப் பார்க்கிறார்களள. முன்பு கதைச்சுச் சிரித்து கலகலப்பாக இருந்தவர்கள் இப்போ முறாய்க்கிறார்கள். இவள் என்னைப் பற்றித் அவர்களுக்குத் தவறாகச் சொல்லியிருப்பாள். அத்துடன் அவர்களைக் கொண்டு எனக்கு அடிப்பிப்பாள். அப்படியானவள் உவள்.”

“ஊரார் நகைத்தால் சிரிப்பாள் உற்றார் நகைத்தால் மறைப்பாள் தீங்குகள் செய்வோர் நல்லவராவர் தீயோர் கொடியோர் தன்வசமாக நல்லோர் தம்மை நலிவாய் நினைப்பாள் தன்செயல் முடியத் தன்னையே கொடுப்பாள் தன்செயல் முடிந்தால் தயவும் காட்டாள் மன்மத மோகினி மதுரவாகினி” என்றான் கெங்காதரன்.

“கள் மயக்கத்திற்கு ஆட்பட்டவரைக் கண்டு பகைவர்கள் அஞ்சமாட்டார்கள். அந்தத் தீய பழக்கத்தால் தமக்குள்ள மதிப்பையும் அவர்கள் இழப்பார்கள். நீ குடித்து விட்டுத் தெருக்களில் புலம்பிக் கொண்டு திரிவதால் உனது எதிரிகள்

உன்னைப் பழிக்கிறார்கள். அதனால் நீ குடிக்காதே. குடியை விடுவது கஷ்டம்தான். மகா கணபதி மீது பற்றுவை. சுவாமியாரிடம் சென்று ஆசீர்வாததத்தைப் பெறு. வேண்டுமானால் அவரிடம் உன்னை நான் அழைத்துச் செல்கிறேன்'' என்றான் நவராசா.

''எல்லாவற்றிற்கும் மனம் தான் காரணம். பிரச்சினைகளால், கவலைகளால் மனம் பலவீனமடையும் போது உடலின் வலிமை குறைகிறது. பல வருடங்களாகக் காப்பாற்றிய ஒழுக்கம், பலவீனத்தால் ஒரு கணத்தில் அழிந்து விடுகிறது. அதனால் நன்மை தீமைகளை ஆராய்ந்து அறியும் தன்மை அற்றுப் போய் விடுகிறது. மனதை நல்வழிப்படுதினால் எல்லாம் சரியாகிவிடும். என்னால் எனது மனதைக் கட்டுப்படுத்தி நல்வழிப்படுத்த முடியவில்லை. வசந்தினி மீதுள்ள பற்று இன்னும் குறையாததால் தான் எனக்கு இந்த அவல நிலை தோன்றியுள்ளது. அதானால் தான் குடிக்கிறேன். குடிக்கக் குடிக்க நினைவு அதிகரிக்கிறதே தவிரக் குறையவில்லை'' என்றவாறு எழுந்தான் கெங்காதரன்.

''இங்கிருந்து கதைத்தால் உனக்குத்தான் அவமானம். அத்துடன் துர்க்கா அறிந்தால் கரைச்சல்'' என்று கூறிவிட்டு எழுந்து நடந்தான் கெங்காதரன். நவராசா வீட்டைப் பூட்டி விட்டுத் துர்க்காவிடம் செல்லாமென நினைத்து வீட்டினுள் உடைமாற்றச் சென்றான். அப்போது வீதியில் யாரோ பலமாகக் கத்தும் சத்தம் கேட்டது. நவராசா வீதிக்கு ஓடி வந்தான். கெங்காதரன் வீதியில் விழுந்து கிடந்தான். அவனது தலையிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிந்தது.

“என்ன…? வெறியில் விழுந்து விட்டாயா?” என்று கேட்டான் நவராசா.

“இல்லை மோட்டார் வண்டியில் வந்த யாரோ என்னைத் தள்ளி விழுத்தி விட்டார்கள். இது வசந்தினியின் வேலைதான்” என்றான் கெங்காதரன்.

“நீ குடித்ததனால் விழுந்திருப்பாய். ஏன் அடுத்தவரைக் குற்றஞ் சாட்டுகிறாய்?” என்றான் நவராசா.

“அவள் செய்யக் கூடியவள். முன்பு பலருக்கு அடிக்க வேண்டுமென்று எனக்குச் சொல்வாள்”

“கள் மயக்கத்திற்கு ஆட்பட்டால் நடப்பவை எவையும் தெரியாது. அத்துடன் பகைவர்கள் இலகுவாக வென்று விடுவார்கள். மக்களும் மதிக்கமாட்டார்கள். எழும்பு, வைத்தியசாலைக்குப் போவோம்” என்றான் நவராசா.

---

**921. உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்**
**கள்காதல் கொண்டுஒழுகு வார்.**

---

கள்ளின் மேல் விருப்பங் கொண்டு அதைக் குடித்து மயங்கித் திரிபவர்களைக் கண்டு பகைவர்கள் அஞ்ச மாட்டார்கள். அத்தீய பழக்கத்தால் தமக்குள்ள புகழையும் இழந்து விடுவர்.

## குடிக்கத் தகுதி உடையவர்

வைத்தியசாலைக்குச் சென்ற கெங்காதரனைப் பரிசோதித்த வைத்தியர் அங்குஷன் சொன்னார்; “இவர் அளவுக்கதிகமாகக் குடிக்கிறார். இந்த மாதிரிக் குடித்தால் இரண்டொரு வருடத்தில் இவர் பெரும் :நோய்களை உடையவராக மாறிவிடுவார். சென்றவராரமும் ஒருநாள் குடித்துவிட்டு வீதியில் மயங்கிக் கிடந்தார். தெருவால் சென்றவர்கள் இவர் இறந்து விட்டாரென நினைத்து இங்கு கொண்டு வந்தனர். நாம் மிகவும் கஷ்டப்பட்டுத்தான் இவரைக் காப்பாற்றினோம். நோயுள்ளவர்களைக் கஷ்டப்பட்டுக் காப்பாற்றுவது தர்மம். இவர்களைப் போன்ற குடிகாரர்களுக்காகப் பலமணிநேரம் நாங்கள் கஷ்டப்படுவதால் மற்றவர்களுக்குச் சிகிட்சை அளிக்க முடியாமற் போய் விடுகிறது. இவர் உங்கள் நண்பர் என்பதும், நல்ல குடும்பத்தில் பிறந்தவரென்பதும் எனக்குத் தெரியும். இவர் ஏன் குடிக்கிறாரென்று நண்பனான நீர் அறிந்து, அவருக்கு ஏற்ற புத்திமதிகள் கூறும். இனிமேல் இவர் குடித்து விட்டு வந்தால் இங்கு ஏற்கமாட்டோம்” என்றார்.

நவராசாவுக்கு எதுவும் பேசத் தோன்றவில்லை. சிரித்து விட்டு வெளியே வந்தான். அன்று முழுவதும் துர்க்காவை அவன் பார்க்கவில்லை. அதனால் இதயத்தின் ஒரு மூலையில் இருந்த நினைவுகள் கிளர்ந்தெழத் தொடங்கின; “மாமாவுக்கு எப்படியென்று

தெரியவில்லை. நீ போ. நான் துர்க்காவின் வீட்டுக்குச் செல்ல வேண்டும்'' என்றான் நவராசா.

கெங்காதரன் எதுவும் பேசாமல் நடந்து சென்று நவராசாவின் மோட்டார் வண்டியில் ஏறி இருந்து கொண்டு; ''துர்க்காவின் தந்தையை நானும் பார்க்க வேண்டும்'' என்றான்.

நவராசாவுக்கு அது விருப்பமில்லாமல் இருந்தது. கெங்காதரனுடன் சென்றால் துர்க்கா கண்டபடி ஏசுவாள் என்பதை நினைத்துப் பயந்தான்; ''நீ இன்னொரு நாளைக்கு வா….'' என்று நவராசா கூறிக் கொண்டிருக்கும் போது கெங்காதரன் சொன்னான் ''இன்றைக்கு நான் அவரைப் பார்க்க வேண்டும். துர்க்கா பேசினால் நான் சமாளிக்கிறேன்'' என்றான்.

வேறு வழியின்றி அவனுடன் நவராசா துர்க்காவின் வீட்டை அடைந்த போது அங்கே கதிரேசனும் தணிகாசலமும் இருந்தனர். அவர்களைக் கண்டதும் திகைத்துப் போனான் நவராசா.

வீட்டுள்ச் சென்ற நவராசாவைக் கண்டு கோபத்தோடு பார்த்தாள் துர்க்கா. ஒருபோதும் அப்படிப் பார்க்காத துர்க்கா கோபத்துடன் பார்ப்பதைக் கண்டு அதைச் சமாளிக்க அவளது கன்னத்தில் தட்டி விட்டுச் சிரித்தான் நவராசா.

துர்க்காவின் கோபம் அத்தட்டலால் சிறிது குறைய அவளது கண்கள் கலங்கின. ''என்ன…? என்ன..? மாமாவுக்கு ஏதாவது'' பரபரத்தான்.

“அப்பாவுக்கு ஒன்றுமில்லை. நீங்கள் கெங்காதரனுடன் திரிவது எனக்குப் பிடிக்கவில்லை. நீங்கள் குடிக்காவிட்டாலும் குடிப்பவனோடு சேர்ந்து திரிந்தால் உங்களை ஒருவரும் மதிக்கமாட்டார்கள். கெங்காதரனைப் போலத்தான் நினைப்பார்கள். தணிகாசலமண்ணையும் கதிரேசப்புவும் அதைப்பற்றி சொல்லிக் கவலைப்பட்டவை” என்றாள் துர்க்கா.

நவராசா வெளியே வந்து தணிகாசலத்திற்கு அருகில் இருந்தான். தணிகாசலம் அவனைப் பார்த்தார். அவரது பார்வையின் தன்மையைச் சகிக்க முடியாத நவராசா தலை குனிந்தான்.

“கெங்காதரனை வீட்டில் கண்ட போதே அவனுடன் சேராதே என்று சொன்னனான். அவனையும் அழைத்துக் கொண்டு இங்கு வந்திருக்கிறாய். நீ முன்பு குடிக்காதவன் என்றால் பரவாயில்லை. முன்பு குடித்தனீ. வீட்டில் துர்க்காவும் இல்லை. அதனால் பழைய ஆசை வந்து விடும். அதற்காகத்தான் சொன்னேன். கள்ளைக் குடிப்பது பாவம். அறிவுடையவர்களின் நன்மதிப்பைப் பெற விரும்பாதவர்கள் மட்டும் கள்ளை வேண்டுமானால் குடிக்கலாம். நீ குடிக்கா விட்டாலும் குடிகாரருடன் சேர்ந்து திரிந்தால் உன்னையும் குடிகாரனாகவே நல்லவர்களும் கருதுவார்கள். நாங்கள் இங்கு வரும்போது உனது வீட்டுக்குச் சென்றுதான் வந்தோம். நீ வைத்தியசாலைக்குச் சென்றதாகச் சொன்னார்கள்” என்றார் கதிரேசன்.

“உனது மாமனார் மரணப் படுக்கையில் இருக்கிறார். துர்க்கா மட்டும் அவரைக் கவனிக்க

முடியுமா…? வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும். வீட்டு வேலைகள் செய்ய வேண்டும்; சமைக்க வேண்டும். உன்னைக் காலையில் இருந்து காணவில்லை என்று நாம் வந்த நேரம் தொடக்கம் துர்க்கா பரபரத்துக் கொண்டே இருந்தாள். மற்ற நாட்களில் நீ எதையும் செய்யலாம். இப்படியான வேளையிலுமா குடிகாரர்களுடன் சேர்ந்து திரிகிறாய்'' என்று கேட்டார் தணிகாசலம்.

நவராசாவால் பதில் கூற முடியவில்லை. தலையைக் கவிழ்த்தபடி இருந்தான்.

**922. உண்ணற்க கள்ளை; உணில்உண்க சான்றோரான்**
**எண்ணப் படவேண்டா தார்.**

கள்ளைக் குடிக்கக் கூடாது; சான்றோரின் நன்மதிப்பைப் பெற விரும்பாதவர் கள்ளை வேண்டுமானால் குடிக்கலாம்.

## தாயின் முகமே

வைத்தியசாலைக்குச் சென்று இராசநாயகத்தைப் பார்த்து விட்டு நவராசாவின் தாய் விசாலமும் தகப்பன் கமலநாதனும் துர்க்காவின் வீட்டுக்கு வந்தனர். விசாலத்திற்கு நவராசாவைக் கண்டதும் கோபம் வந்தது.

“நவம், நீ எங்கே செல்கிறாய். துர்க்கா, வீட்டில் இருந்து இங்கு வந்த பின்பு நான் உன்னைக் காணவில்லை. நேற்று உனது தந்தையார் மூன்று தரம் உணவுடன் உனது வீட்டுக்கு வந்தவர். நீ வீட்டில் இல்லை.

தோட்டத்திற்கும் வரவில்லை என்று சுப்பிரமணியம் சொன்னவன். வைத்தியசாலைக்கும் செல்லவில்லை. அப்போ எங்கே சென்றனீ? இப்ப கூடாத கூட்டமெல்லாம் கூடுறாய். கெங்காதரனுடன் தான் இராப்பகலாகச் சுற்றுகிறாய். அவனோடு சேர்ந்து நீயும் குடிக்கிறாய் என்றுதான் ஊரில் கதைக்கிறார்கள். முன்பு நீ குடித்தனீ. அந்த ஞாபகம் இப்ப வந்து விட்டது போலும்.. நீ குடிக்காவிட்டால் ஏன் கெங்காதரனுடன் திரிகிறாய்?'' என்று கோபமாகக் கேட்டாள் விசாலம்.

பலருக்கு முன் தாயார் அப்படிக் கேட்டமையால் நவராசாவுக்குக் கோபம் வந்தது. ‘‘நீங்கள் எதையும் நினையுங்கோ… நான் குடிக்கவில்லை. நேற்று மணிவண்ணனிடம் போனனான். இரண்டு இலட்ச ரூபாய் காசு அவன் தரவேண்டும். வாங்கி வந்து துர்க்காவிடம் கொடுத்துள்ளேன். துர்க்காவைக் கேட்டுப் பாருங்கள்'' என்றான் நவராசா.

‘‘இப்ப ஏன் உனக்குக் கோபம் வருகிறது? நேற்று முழுவதும் உன்னைக் காணவில்லை என்றுதானே சொன்னேன். அது உண்மைதானே. உண்மையைச் சொன்னால் நீ ஏன் கோபிக்கிறாய்? நீ குடிக்கிறாய் என்று நான் பொய் சொன்னாலும் நீ குடிக்காவிட்டால் ஏன் கோபப்படல் வேண்டும்? உனது கோபத்தைப் பார்த்தால் நீ குடிக்கிறாய் போலத் தெரிகிறது. நண்பர்களை வைத்துத் தான் ஒருவனது போக்கைக் கண்டு பிடிக்க முடியும். நட்பைப் போலத் தொடர்பு கொள்வதற்குப் பெருமையானது வேறெதுவும் இல்லை. நட்பென்பது சிரித்து மகிழ்வதற்காகக் கொள்ளப்படுவதில்லை.

நண்பர்கள் நிலை தவறிச் செல்லும் போது கண்டித்து நல்வழி கூறித் திருத்துவதற்காக ஏற்படுத்திக் கொள்வது. அவன் நிலை தவறிப் போகிறான் என்று தெரிந்ததும் நீ அவனுக்குப் புத்திரமதி கூறித் திருத்துதல் வேண்டும். இல்லாவிட்டால் அந்த நட்பைத் துண்டித்தல் வேண்டும். நீ இரண்டும் செய்யாதபடியால் நீயும் அவனது செயல்களுக்கெல்லாம் உடந்தையாக இருக்கிறாய் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. அப்படித்தான் ஊர்மக்களும் கதைக்கிறார்கள்'' என்றாள் விசாலம்.

நவராசாவுக்குக் கவலையாக இருந்தது; ``கெங்காதரனுடன் சேர்ந்து திரிவதற்கே கோபப்படும் அம்மா வசந்தினி எனது வீட்டுக்கு வருவதை அறிந்தால் என்ன சொல்வார்'' என்று நினைத்தான். கோபப்பட்டாலும் பிரச்சினை … பேசாமல் இருந்தாலும் நட்புக் கொண்ட மாதிரி முடியும். என்ன செய்யலாம்? என்று புரியாது தடுமாறினான் நவராசா.

``கெங்காதரனின் தாயார் என்னைக் காணும் வேளைகளிலெல்லாம் ஒப்பாரி வைத்து அழுகிறாள்; ``நவராசா தான் அவனது நண்பன். குடி, கூத்தி என்று அலைந்து திரிகிறவனைத் திருத்தச் சொல்லு. அவன் நவராசாவின் சொல்லைக் கேட்பான்'' என்கிறாள். அதனால் நீ அவனைத் திருத்தத் தெண்டி. இல்லாவிட்டால் அவனுடைய நட்பைத் துண்டி. கள் உண்பவனைக் கண்டால் பெற்றதாயின் முகம் கூட வெறுப்படையும். அப்படியிருக்கும் போது நல்ல மனிதர்கள் அவனை மதிப்பார்களா..? கெங்காதரனின் மூத்த மகளுக்கு இருபத்தொரு

வயது. தமக்கையின் மகனைச் செய்வதாக இருவீட்டாரும் ஒத்துக் கொண்டவை.. இப்ப மாப்பிள்ளைப் பொடியன் ‘‘மாட்டன்’’ என்று சொல்கிறான். குடித்து விட்டுப் போதை தலைக்கேறி உடை கலைந்து வீதிவீதியாய் விழுந்து கிடப்பவனின் பிள்ளையை யார் செய்வினை…? இதுகளை அவனுக்கு எடுத்துச் சொல்…’’ என்றாள் விசாலம்.

துர்க்காவின் கண்கள் கலங்கின. சேலைத் தலைப்பால் தனது கண்களைத் துடைத்தாள் துர்க்கா.

‘‘நீர் ஏன் அழுகிறீர்?’’ பரிவுடன் கேட்டான் நவராசா

‘‘நீங்கள் நல்லவர் என்று நான் நினைத்தேன்….’’ துர்க்கா விம்மினாள்.

‘‘நான் குடிக்கிறேன் என்று நீர் நம்புகிறீரா…’’

‘‘இல்லை’’ என்று தலையாட்டினாள் துர்க்கா.

‘‘அப்போ ஏன் அழுகிறீர்’’

‘‘நான் நம்பி என்ன பிரயோசனம். மாமாவும் மாமியும் கதிரேசப்புவும் ஊரவையும் நீங்கள் குடிப்பதாகச் சொல்லும் போது நான் நம்பி என்ன பிரயோசனம்.ந ான் சொன்னால் யாராவது கேட்பார்களா…?’’ விம்மினாள் துர்க்கா.

“இனிமேல் நான் கெங்காதரனுடன் சேரவில்லை. நீர் அழாதையும்” என்றான் நவராசா. எனினும் அவனது முகம் பரபரத்தது. “இரவும் வசந்தினி வந்தால் என்ன செய்வது?” என்ற நினைவு அவனது மனதுள் புகுந்து அச்சுறுத்தியது.

**923. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்; என்மற்றுச் சான்றோர் முகத்துக் களி?**

கள் உண்டு விட்டு வரும் மகனைக் கண்டால் பெற்றதாயின் முகம் வெறுப்படையும். அவ்வாறு இருக்குமானால் குற்றத்தைக் கண்டிக்கும் சான்றோரின் முகம் என்னவாகும்?.

## முகத்தைக் காட்டாள்

வீட்டுள் தணிகாசலமும் கதிரேசனும் நவராசாவின் பெற்றோரும் இருந்தமையால் கெங்காதரன் மோட்டார் வண்டிக்குள்ளேயே இருந்தான். அவர்கள் அனைவரும் அவனைக் கண்டால் ஏசுவார்கள். நவராசாவின் தாய் விசாலம் அவனைக் கண்டால் கண்டபடி ஏசுவாள்; “கெங்கா, நீ ஒரு வழியில் எமது இனத்தவன். உனது பெற்றோர் ஒழுக்க சீலர்கள். அப்படியான ஒழுக்க சீலர்களுக்குப் பிறந்த நீ ஏன் குடித்து விட்டு கெட்ட செயல்களில் ஈடுபடுகிறாய். உனது தந்தையும் தாயும் உனது செயல்களால் மிகவும் வேதனைப்படுகிறார்கள். குடியென்பது மிகவும் பயங்கரமானது. எதற்கும் விதிவிலக் களிக்கலாம் ஆனால் குடிக்கு விதிவிலக்களிக்க முடியாது. இது ஒரு பயங்கரமான நோயைப் போன்றது. அது

யமனின் தூதுவன். குடிகுடிப்பவனை மட்டுமன்றி அவனது குடியையே அழிந்து விடும் சக்தி கொண்டது. குடிப்பவர்கள் இழிவான மரணத்தை அடைவார்கள். உனது குடியால் உனது குடும்பத்தவர்களது இதயங்கள் பலவீனப்பட்டுச் சிதைந்து விட்டன. உனது பெற்றோர் உனது செல்வத்தையோ, அதிகாரத்தையோ, பலத்தையோ, மதிக்கமாட்டார்கள். உனது குணத்தைத்தான் மதிப்பார்கள். தமது குடும்பக் கௌரவத்திற்காக உனது சகோதரி தனது மகனை உனது மகளுக்குத் திருமணம் செய்ய விரும்பினாள். ஆனால் உனது நடத்தைகளால் நாணம் என்று சொல்லப்படுகின்ற நல்லாள் தனது முகத்தை உனக்குக் காட்டாமலே செல்வதால் நீ நல்லது எது தீயது எதுவென்று தெரியாமல் நடந்து கொள்கிறாய். இரண்டு நாட்களுக்கு முன்பு நீ துணியில்லாமல் சந்தியில் விழுந்து கிடந்ததாக உனது தாயார் அழுதார்; ‘‘தனக்குச் சா வரவேண்டும். அதுவும் விரைந்து வரவேண்டும்’’ என்றும் சொன்னார். நீ திருந்த மாட்டாய். அது எனக்குத் தெரியும். நீகுடி; நன்றாகக் குடி; ஆனால் நவராசாவோடு சேராதே’’ நவராசாவின் தாய் ஏசியமையால் அவன் மோட்டார் வண்டிக்குள்ளேயே இருந்தான்.

அவர்கள் சென்றதும் துர்க்கா மோட்டார் வண்டியருகே வந்தாள். அவளைக் கண்டதும் கெங்காதரன் மோட்டார் வண்டியை விட்டு இறங்கினான்.

‘‘கெங்கா, நீ எனது கணவனின் நண்பன். நான் அவரைத் திருமணம் செய்த நாள் முதல் நீ அவருடன் திரிவதை நான் பார்த்திருக்கிறேன்.

உன்னால் அவருக்கு எந்த நாளும் கெட்டபெயர் தான் வருகிறது. நான் உனக்குப் பலதடவைகள் கூறியும் நீ திருந்துவதாக இல்லை...'' துர்க்கா பேசிக் கொண்டிருக்கும் போது கெங்காதரன் குறுக்கிட்டுச் சொன்னான் ‘‘என்னால் திருந்த முடியவில்லை''

‘‘முட்டாள்தனமாகப் பேசாதே. நீ நல்லவன்; நல்ல குடியில் பிறந்தவன். உனது குடும்பத்தின் அடிப்படைக் குணங்கள் யாவும் உன் இரத்தத்தில் இருக்கும், அந்தக் குணங்களை வளர்த்தெடுக்க முடியும். நீ நல்லவன் என்று நினை; உன்னில் நீ நம்பிக்கைவை. கட்டாயம் திருத்த முடியும். உனக்கு அளவுக்கதிகமான பிரச்சினைகள் இருப்பதாக எனது கணவரிடம் கூறினாய். அவர் எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார். தேவையில்லாத பற்றாலும் ஆசையாலும் நீ அவதிப்பட்டு, அதனால் உண்டாகும் கவலையினால் குடிக்கிறாய். மனித வாழ்க்கைக்கு உதவாது என்று பெரியவர்களால் தவிர்க்கப்பட்டவற்றை நீ உனது தலையில் தூக்கி வைத்திருக்கிறாய். அவற்றைத் தூக்கி வீசு. மனதில் நிம்மதி உண்டாகும். குடும்பத்தில் பற்று வரும். குடும்பப் பற்று வந்தால் கெட்ட ஆசைகள் யாவும் மனதை விட்டு அகன்று விடும்''

அப்போது நவராசா அங்கு வந்தான்; ‘‘இவனுக்குப் புத்திமதிகள் கூறிப் பிரயோசனமில்லை. திருந்துபவன் ஓரிருவர் நல்லதை எடுத்துக் கூறினாலே திருத்தி விடுவான். இவனுக்கு ஊரில் உள்ள அனைவரும் எடுத்துக் கூறியும் திருந்துவதாகக் காணோம். தானும் கெட்டு தனது

குடும்பத்தினரையும் குட்டிச் சுவராக்கி விட்டு இப்போ என்னையும், எனது மானத்தையும் கெடுக்கப் போவதாகக் கங்கணம் கட்டிக் கொண்டு திரிகிறான். எனது வீட்டுக்கு வர வேண்டாமென்று கண்டித்துக் கூறினாலும் வாறான். நான் என்ன செய்வது? இந்த ஊரை விட்டுத்தான் ஓட வேண்டும்'' நவராசா கலங்கினான்.

அவனைப் பார்க்க துர்க்காவுக்கு வேதனையாக இருந்தது. எந்தத் தவறும் செய்யாத உத்தமனான தனது கணவனை அவனது பெற்றோரும் இனத்தவர்களும் ஊர் பிரமுகர்களும் ஏசுவதை நினைக்க அவளுக்குக் கவலையாக இருந்தது. அதனால் அவளுக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது; ''வெட்கம் ரோசம் மானம் இல்லாத உன்னால் எல்லோருக்கும் கஷ்டம். வீதியில் மோதும் வாகனம் உன்னைக் கொன்றாலும் கவலைப்பட ஆள் இல்லை'' என்றாள்.

---

**924. நாண்என்னும் நல்லாள் புறம்கொடுக்கும் கள்என்னும்**
**பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.**

---

நாணம் என்று சொல்லப்படும் நல்லவள், கள் குடித்தல் என்னும் தீமையைச் செய்பவர்களுக்கு எதிரே நிற்காமல் சென்று விடுவாள்.

### புரியாத அறியாமை

கெங்காதரன் துர்க்காவை நிமிர்ந்து பார்த்தான். அவனது பார்வையின் தன்மை துர்க்காவைச் சிறிது அச்சுறுத்தியது; ''இவன்

குடித்து விட்டு மற்றவர்களைப் பற்றி அலட்டுவதைப் போலத் தன்னைப் பற்றியும் தப்பாக ஏதாவது நவராசாவுக்குச் சொல்லி விடுவானோ?'' என்று பயப்பட்டாள்.

''ஒருவன் தவறு செய்யாமல் வாழ முடியாது. அதற்காகச் செய்த தவறுகளைத் திரும்பத் திரும்பச் செய்ய வேண்டுமா...? மிருகங்கள் கூட தனது குட்டிகளுக்கு ஆபத்து நேருமென்று தெரிந்தால் அவை தனது குட்டிகளுக்காகப் பேராடும். ஆனால் நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு ஆபத்து வந்த பின்பும் அதைப் பற்றிச் சிந்திக்காது தொடர்ந்தும் அதே தவறுகளைச் செய்து கொண்டே இருக்கிறீர்கள். இது உங்களுக்கு நியாயமாக இருக்கிறதா...? ஒருவன் பொருளைக் கொடுத்துக் கள்ளைக் குடித்துத் தன்னிலை மறப்பதற்குக் காரணம், என்ன செய்கிறேன் என்று புரிந்து கொள்ள முடியாமை தான். நீங்கள் குடித்து விட்டுச் செய்யும் செயல்களை நினைத்துப் பார்க்க முடியாதளவிற்குப் போதையில் இருக்கிறீர்கள். அதனால் உங்கள் குடும்பத்தவர்களுக்குப் பெருத்த அவமானமாக உள்ளது.''

''உண்மைதான். இன்றும் நான் நன்றாகக் குடித்து விட்டு வீதியால் செல்லும் போது மோட்டார் வாகனத்தில் வந்த இருவரில் ஒருவன் என்னைக் காலால் உதைத்து விட்டுச் சென்று விட்டான். அதுதான் இந்தக் காயம்'' என்று தலையைத் தொட்டுக் காட்டினான் கெங்காதரன்.

‘‘முன்பும் பலமுறை நீங்கள் விபத்துக்குள்ளானீர்கள். அப்படியிருந்தும் திருந்துகிறீர்கள் இல்லையே’’ என்றாள் துர்க்கா.

‘‘எனக்கு எல்லாம் புரிகிறது. திருத்த வேண்டும் என்று நினைக்கிறேன். முடியவில்லை’’ அழுதான் கெங்காதரன்.

‘‘திருந்த நினைத்தால் திருந்தலாம். நானும் முன்பு குடித்தனான் தான்.இப்போது திருந்தவில்லையா…? உன்னுடன் தானே சேர்ந்து குடித்தேன். இப்போ நீ குடிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேனே தவிரக்குடிப்பதில்லை. எதற்கும் மனம் தான் காரணம். நீ ஆராயாமல் செய்த தவறுகள் ஒவ்வொன்றும் இப்போது சூழ்ந்து உன்னை வருத்துகிறது. சுகங்களையும் துக்கங்களையும் மற்றவர்கள் தான் உனக்குத் தருவதாக, நீ அறியாமையால் நினைக்கிறாய். இது தவறு. நீ செய்த தீமைகள் தான் உன்னை இப்போது சூழ்ந்து பிடித்து வருத்துகின்றன. உனதுசெயல்கள்தான் உனக்கு இந்த நிலையை உருவாக்கின. வசந்தினியை உன் மனைவியென்றா நினைக்கிறாய்? அவள் விலைமகள். பணம் கொடுப்பவர்களுக்குச் சுகம் கொடுப்பவள். கடையில் பணத்தைக் கொடுத்துப் பொருட்களை வாங்குவதைப் போல அவளுக்குப் பொருளைக் கொடுத்து சுகத்தைப் பெற்றாய். பொருள் வாங்கும் கடைக்காரனோடு உள்ள உறவுதான் அவளுக்கும் உனக்கும் உள்ள உறவு. அதற்கு மேல் நீ நினைத்தால், அதற்கு அவள் பொறுப்பாக மாட்டாள். அவளை நினைத்து நீ குடித்து உன்னையும் அழித்து உன் குடும்பத்தையும் அழிக்கிறாய்.

ஆனால் அவள் உன்னை விட்டு விட்டு வேறோருவனைப் பிடித்து இன்பமாக வாழ்கிறாள். இது உனக்குப் புரியவில்லையா..? அவளை மறக்க வேண்டுமானால் நீ இறைவனின் மீது அசையாத நம்பிக்கை வை. அனைத்தையும் தாங்கும் சக்தியையும், நிலை குலையாத மனத்தையும் கடவுளால்தான் உனக்குத் தர முடீயும். நான் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட போதெல்லாம் இறைவன் மீது தான் நம்பிக்கை வைத்தேன். அதனால் தான் என்னால் பழைய நிலைக்குத் திரும்ப முடிந்தது. மகா கணபதி மீது சகல பொறுப்புக்களையும் ஒப்படைத்து விட்டு அவரே தஞ்சமென நினைத்து வாழ். உனது மனம் சாந்தியடையும். உனது மனதுள்ப் படிந்துள்ள அழுக்குகள் யாவும் நீங்கும். நாம் இறைவன் மீது நம்பிக்கை வைத்தால் இறைவன் எமக்காக உலக நியமங்களை மீறி அருள் புரிவார்'' என்றான் நவராசா.

''உண்மைதான். இறைவன் நாம் செய்யும் பாவங்களையெல்லாம் மன்னிப்பார். அதற்கு உண்மையான பக்தியும் சரணாகதியும் உதவி செய்யும். இறைவன் மீது பக்தி வைத்தால் அது கர்மப் பலன்களையும் மாற்றும். நீ சுவாமியாரிடம் சென்று, அவரிடம் உனது நிலையை விளக்கி அவரைச் சரணாகதியடை. எல்லாம் சரியாகிவிடும்.'' என்றாள் துர்க்கா.

''எனக்குப் பசிக்கிறது. வா கெங்கா சாப்பிடுவம்'' என்று கூறிவிட்டு நடந்தான் நவராசா.

''நான் கடைக்குப் போச் சாப்பிடுகிறேன்.'' என்றான் கெங்காதரன்.

“இவ்வளவு நேரமும் நாம் கள்ளுக் குடித்து விட்டுப் புலம்பினோம் என்று தான் நீ நினைக்கிறாய். நீ கடைக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டு அப்படியே உன்னுடைய வீட்டை போ. எனக்குக் கரைச்சசல் தராதே” என்றான் நவராசா கோபமாக

**925. கையறி யாமை யுடைத்தே பொருள் கொடுத்து மெய்அறி யாமை கொளல்.**

ஒருவன் பொருளைக் கொடுத்துக் கள்ளைக் குடித்துத் தன்னைத் தான் அறியாத நிலைக்குள்ளாவதற்குக் காரணம், தான் செய்வது இன்ன தென்று புரிந்து கொள்ள முடியாத அறியாமையே ஆகும்.

## வேறுபட்டவர்கள் அல்லர்

“கடைக்குச் சென்று சாப்பிடுகிறேன்” என்று கூறிவிட்டுச் சென்ற கெங்காதரன் பின் வரவில்லை.

“பாவம் கெங்காதரன் மத்தியானம் சாப்பிட்டாரோ தெரியவில்லை. கடையில் சாப்பிடுகிறேன் என்று அவர் சொல்ல, நீங்கள் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது. அவர் அதை நினைத்துத்தான் வராமல் விட்டிருப்பார்” என்றார் துர்க்கா.

நவராசா பலமாகச் சிரித்தான்; “கெங்காதரனுக்கு நான் சொன்னது விளங்கியி ருக்குமோ தெரியாது. அவன் நன்றாகக்குடித்து

விட்டு எங்காவது நினைவில்லாமல் விழுந்து கிடப்பான். உறங்கியவர், செத்தவரை விட வேறுபட்டவர் அல்லர். அவ்வாறே கள்ளுண்பவர்களும் அறிவு மயங்குவதால் நஞ்சை உண்டவர்கள் போல மயங்கிச் செத்தவர் போலக் கிடப்பார்கள். எந்த வீதியில் துணி மணியில்லாமல் கிடக்கிறானோ தெரியவில்லை'' என்றான் நவராசா. துர்க்கா எதுவும் பேசவில்லை.

''நான் வீட்டுக்குச் சொல்ல வேண்டும். வீட்டில் யாரும் இல்லாவிட்டால் வீட்டை உடைத்துத் திருடி விடுவார்கள். இரண்டு வாரங்களுக்கு மேல் நீர் வீட்டுக்கு வரவில்லை. வாறீரா?'' என்று கேட்டான் நவராசா.

அப்போது யாரோ ஒருவன் உள்ளே வந்தான். ''துர்க்கா உங்களது பெயரைச் சொல்லிக் கொண்டு வீதியில் ஒருவர் உணர்வின்றிக் கிடக்கிறார். ''துர்க்கா துர்க்கா'' என்று இடையிடையே சொன்னதால் உங்களுக்குத் தெரிந்தவராக இருக்குமென்று நினைத்து வந்தேன்'' என்றான் வந்தவன்.

''நான் முன்பே நினைத்தனான். இவனைத் திருத்த முடியாது. பகல் முழுவதும் வேலைகள். இரவைக்கு இவன் படுக்கவும் விடான் போலத் தெரிகிறது'' என்று நினைத்தான் நவராசா.

நவராசா, கெங்காதரன் உணர்வில்லாமல் கிடந்த இடத்திற்கு வந்தான். கெங்காதரன் முகம் குப்புறக் கிடந்தான். ஒரு பழைய சாக்கால் அவனை

முடியிருந்தனர். நவராசா பயத்துடன் கிட்டச் சென்றான்.

ஒரு பெரியவர் சொன்னார்; “நான்கு மணிக்குக் குடித்து விட்டு நடக்க முடியாமல் வேட்டி நழுவி விழத் தள்ளாடியபடி வந்து விழுந்து விட்டார். நாம் தான் தூக்கிக் கடையில் வளர்த்தி விட்டு சாக்கால் போர்த்தி விட்டோம். இவ்வளவு நேரமும் இறந்தவரைப் போலக் கிடந்தார். இப்ப கொஞ்ச நேரத்திற்கு முன்னம் “துர்க்கா துர்க்கா” என்று புலம்பினார். இங்கு உங்களைத் தெரிந்த ஒருவர் நின்றமையால் உங்களை அழைத்து வரும்படி அனுப்பினோம். மனிதனாகப் பிறந்தவன் இப்படியா குடிப்பது...? இப்படிக் குடித்து விட்டு உணர்வில்லாமல் விழுந்து கிடந்தால் இவனது குடும்பத்தின் மானம் என்னவாகும்...” என்றார்.

நவராசா, கெங்காதரனைப் பார்த்தான். அவன் நினைவில்லாமல் கிடந்தான். அருகில் நின்றவர்களின் துணையுடன் அவனைத் தூக்கி மோட்டார் வண்டியில் ஏற்றிக் கொண்டு தனது வீட்டுக்கு வந்தான்.

அவனது வீட்டு வாசலில் கெங்காதரனின் மனவை யசோதினியும் அவனது தகப்பனும் நின்றனர். நவராசாவைக் கண்டதும் யசோதினி விம்மினாள்; விக்கி விக்கி அழுதாள்.

“என்னுடைய குடும்பமானமெல்லாம் போய் விட்டது தம்பி.இவனைத் தெருவிலை போகிற வாகனம் ஏதாவது மோதிக் கொன்றாலும் கவலை இல்லை. உயிரோடு இருந்து எமது மானத்தை

வாங்குகிறான். இவனால் மூத்தவளின் கலியாணமும் குழம்பி விட்டது'' என்று கலங்கினார் யசோதினியின் தந்தை.

நவராசாவால் எதுவும் பேச முடியவில்லை. யசோதினி விம்மி விம்மி அழுதாள். அவள் அழுவதைப் பார்க்க நவராசாவின் கண்ளும் கலங்கின. ‘‘குடித்துவிட்டு தெருவில் விழுந்து கிடந்தார். தெருவில் நின்றவர்கள் எனது வாகனத்தில் ஏற்றி விட்டனர்'' என்றான் நவராசா.

‘‘வீட்டை விட்டு வெழுக்கிட்டு மூன்ற நாட்கள் ஆகி விட்டன. தெருவில் யாரையோ வாகனம் மோதி விட்டதாககச் சொன்னார்கள். அதுதான் தேடி வந்தேன்'' என்றாள் யசோதினி.

‘‘செத்தவனுக்கும் இவனுக்கும் என்ன வித்தியாசம். நஞ்சு குடித்துத் தற்கொலை செய்து கொண்டவனைப் போல உணர்வுகள் இல்லாமல் கிடக்கிறான். உவனை ஏன் தம்பி ஏற்றி வந்தனீர்? தெருவில் கிடந்து சாக விட்டிருக்கிலாம்'' என்றார் கெங்காதரனின் தந்தை.

‘‘கள்ளுக் குடிப்பவனைக் கண்டால் பெற்றதாயே வெறுப்படைவாள். அப்படி இருக்கும் போது மனைவியும் உறவினர்களும் வெறுப்படையாது இருக்க மாட்டார்கள். ஆனால், ‘‘அவன் இறந்தால் நல்லது'' என்று சொல்லுமளவிற்குக் பெற்ற தந்தைக்கே துணிவு வந்ததென்றால் இவன் எவ்வளவு கொடுமைகளைச் செய்திருப்பான்?'' என்று நினைத்தான் நவராசா.

**926. துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.**

உறங்கியவர், இறந்தவரை விட வேறுபட்டவர் அல்லர்; அவ்வாறே கள்ளுண்பவரும் அறிவு மயங்குவதால் நஞ்சை உண்டவர் ஆவர்.

**மயங்குதல் இயற்கை**

“குடியைப் பழகி விட்டான் என்ன செய்வது? வீட்டிலிருந்து குடித்து விட்டுப் பேசாமல் இருக்கலாம் தம்பி. குடிக்கக் கூடாது. குடிப்பது பெரும்பாவம். ஆனால் இவனைத் திருத்த முடியாது. வீட்டிலிருந்து குடி என்று சொல்லி வீட்டிலே இவன் குடிக்கும் மது வகைகளை வாங்கி வந்து கொடுத்தேன். அப்படிக் குடித்து விட்டு பேசாமல் இருந்தால் குடும்ப மானமாவது போகாமல் இருக்கும். இவன் கள்ளுக்கடைகளில் சென்று குடித்து விட்டு அங்கு தேவையில்லாமல் பிரச்சினைப்படுவதாலும், வீதிகளில் துணியில்லாமல் உருண்டு பிரள்வதாலும் எமது குடும்ப மானம் போகிறது. இவனது மூத்த மகளைக் கட்டுவதாகச் சொன்ன இவனது சகோதரியின் மகன் அவளைக் கட்ட மறுத்து விட்டான். இளைய மகள் பல்கலைக் கழகத்தில் படிக்கிறாள். சற்குணத்தினுடைய மகளும் பல்கலைக்கழகத்தில் படிக்கிறாள். ஒருநாள் சற்குணத்தின் மகள் பல்கலைக்கழகத்தால் வரும் போது இவன் கண்மண் தெரியாமல் குடித்து விட்டு வந்திருக்கிறான். அரையிலே கட்டியிருந்த வேட்டி அவிழ்ந்து நிலத்தில் விழுந்து விட்டது. அவளென்னடாவென்றால் தன்னைக் கண்டு விட்டுத்

தான் இவன் வேட்டியை வேண்டுமென்று கழற்றி விட்டவன் என்று தகப்பனுக்குச் சொல்ல அவன் வீட்டை சண்டைக்கு வந்துவிட்டான். பின் அவள் பல்கலைக்கழகத்தில் சென்று இவற்றையெல்லாம் கண், காது மூக்கு வைத்துச் சொல்லியிருக்கிறாள். அதனால் வெட்கப்பட்டு மூன்று மாதமாக இளையவள் பல்கலைக்கழகத்திற்குச் செல்லவில்லை. இளையவன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். பள்ளிக்கூடத்திலை பொடியள் இவனை மாதிரி நடித்துக் காட்டுகிறார்களாம். அதனால் அவனும் பள்ளிக் கூடத்திற்குப் போகிறானில்லை. இதுகளுக்காகத்தான் நான் இவன் குடிக்கிற குடிவகைகளை வெட்கத்தைப் பாராமல் வாங்கி வந்து வீட்டில் வைக்கிறனான். அவன் அதைக் குடித்து விட்டுச் சந்திக்கு வந்து முன்பு போல பிரச்சினைப்படுகிறான். இவனால் எம்முடைய குடும்பம் பாழாய் போய்விட்டது தம்பி. நான் என்ன செய்வது?'' அழுதார் கெங்காதரனின் தந்தை

அவரைப் பார்க்க நவராசாவுக்குப் பாவமாக இருந்தது. மூன்று பிள்ளைகளும் அவனுக்கு முன்னால் வந்து தேம்பித் தேம்பி அழுவதைப் போல இருந்தது; ''அவர்கள் படும் துன்பத்திலும் பார்க்கச் கெங்காதரன் வாகனம் மோதிச் சாவது நல்லது'' என்று நினைத்தான்.

''மறைவாக இருந்து கள்ளைக் குடித்தாலும் போதை ஏறிவிடும். அதனால் வீட்டிலிருக்காது வெளியே சென்று விடுவார்கள். பின் வீதிகளில் செய்யும் சேட்டைகளைப் பார்த்து ஊரவர்கள் கேலியாகச் சிரிப்பார்கள். இது தினமும் நடைபெறும் நிகழ்ச்சி. இதை என்னால் பொறுத்துக் கொள்ள

முடியவில்லை. அத்துடன் வயது வந்த பெண் பிள்ளைகள் இரண்டும் படும் வேதனையைப் பார்க்கச் சகிக்கவில்லை. மகனுக்கும் விபரம் புரிகின்ற வயது. அவன் தகப்பன் என்றும் பாராது கொட்டனைத் தூக்குகிறான். தற்செயலாக அவன் தகப்பனுக்கு அடித்து விட்டால் மானம் போய்விடும். பிள்ளையும் தவறான வழியில் நடக்க ஆரம்பித்து விடும். இவற்றால் எனக்கு வாழ்க்கை வெறுக்கிறது.'' என்றாள் யசோதினி.

''வாழ்க்கை என்றால் போராட்டம் தான். ஆனால் இது போராட்டமல்ல மரணப் போராட்டம். குடும்பத்தின் மானம், மரியாதை, கௌரவம் எல்லாம் கப்பல் ஏறி விட்டது. பிள்ளைகளாவது படித்து முன்னேறி விடுமென்று பார்த்தால் பிள்ளைகளின் வாழ்வும் அழிந்து விட்டது. தெய்வத்திற்கும் பயப்படுகிறானில்லை; பழிபாவத்திற்கும் அஞ்சுகிறானில்லை; பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கிறானில்லை. இவன் மனிசனோ தம்பி? மூன்று நாட்களுக்கு முன்பு வீட்டை விட்டு வெளிக்கிட்டவன், இவனுக்கு மனைவி பிள்ளைகள் எல்லாம் இருக்கென்று நினைத்தால் இப்படிக் கிடப்பானோ?'' அழுதார் கெங்காதரனின் தந்தை.

''இவற்றைக் கதைத்து எந்தப் பிரயோசனமும் இல்லை. நாம் கதைக்கிற எதுவும் அவனுக்கு விளங்க மாட்டாது. அவன் இங்கேயே படுத்து இருக்கட்டும். இந்த நேரம் அவனை உங்கள் வீட்டுக்குக் கொண்டு வந்தால் பிள்ளைகளாலேயே பல பிரச்சினைகள் வரும். அதனால் அவன் இங்கே படுத்திருக்கட்டும்.

விடிந்ததும் வீட்டுக்குக் கூட்டி வருகிறேன்'' என்றான் நவராசா.

யசோதினி விம்மினாள்; ''அவரைக் குடிக்க வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. குடித்து விட்டுப் பேசாமல் வீட்டில் இருந்தாலே போதும். அதைச் சொல்லுங்கோ'' என்றாள் யசோதினி.

''சரி நீங்கள் போய் வாருங்கள்'' என்றான் நவராசா.

அவர்கள் சென்று விட்டனர். நவராசா கெங்காதரனை மெல்லத் தட்டி எழுப்பி வீட்டுள் அழைத்துச் சென்று படுக்க வைத்தான;. ''எல்லாம் வசந்தினியால் தான் வந்தது. அவள் தனது சுயநல நோக்கத்திற்காகக் கெங்காதரனைப் பிடித்தவள். தொடந்தும் அவனோடு சினேகிதமாக இருந்திருந்தால் இவ்வளவு பிரச்சினைகளும் வந்திருக்காது'' என்று நினைத்தான் நவராசா.

**927. உள்ஒற்றி உள்ளூர் நகைப்படுவர் எஞ்ஞான்றும்**
**கள்ஒற்றிக் கண்சாய் பவர்.**

கள்ளை மறைந்திருந்து குடித்தாலும் அறிவு மயங்கித் தன்நிலை புரியாது நடந்து கொள்வதால், அதை அறிந்து ஊர் மக்கள் எந்நாளும் இழிவாகப் பேசிச் சிரிப்பார்கள்.

## தானே வெளிப்படும்

மறுநாட்காலை சுப்பிரமணியம் சுடுநீர் போத்தலில் தேநீர் கொண்டு வந்தான். அதற்கு முன்

லிங்கேஸ்வரி வந்து தேநீர் வைத்துக் கொடுத்து விட்டு வீடு வாசலைக் கூட்டிக் கொண்டிருந்தாள்.

“சொல்லுறன் என்று குறை நினைத்துக் கொள்ளாதைங்கோ. கெங்காதரனின் சிநேகிதத்தை விட்டு விடுங்கோ. இவனுக்குப் பலர் நண்பர்களாக இருந்தவை. எல்லாரும் இவனுடைய நட்பைத் துண்டித்து விட்டனர். நீங்கள் ஒருவர்தான் அவனுடன் முன்பு போலப் பழகி வருகிறீர்கள். அவனுடைய நட்பை விட்டுங்கோ. இல்லாவிட்டால் நீங்கள் அதனால் கரைச்சல் படுவீர்கள்” என்றான். சுப்பிரமணியம்.

நவராசா யோசித்தான்; “உண்மைதான். நான் இவனோடு எங்கே தொடர்பு வைக்கிறேன்? விடிய முன்பு இங்கு வந்து விடுகிறான். கலைத்தாலும் போகிறான் இல்லை. முன்பு நன்றாகப் பழகி விட்டேன். இருந்த போதும் இவன் வீட்டுக்கு வருவதால் அம்மா கூட என்னைச் சந்தேகிக்கிறா? துர்க்கா ஏசுறாள்? கதிரேசப்பு எந்த நாளும் புத்திமதிகள் கூறியபடி. இப்ப நீயும் சொல்கிறாய். அவனை வராமல் பண்ணுவதற்கு ஒரு யோசனை சொல்லு பார்ப்பம்” என்றான் நவராசா.

“நீங்கள் சொல்வது சரி. உங்களது அம்மா அடிக்கடி என்னைச் சந்தித்து; “நவராசா குடிக்கிறவனோ” என்று கேட்கிறவா. நான் இல்லை என்று சொன்னாலும் நம்புவதில்லை. உங்களது கஷ்டம் எனக்குப் புரிகிறது. துட்ட நண்பனைத் தண்டனை கொடுத்தாவது விலக்குதல் வேண்டும். ஆபத்து வந்தால் அதனால் நீங்களும் கஷ்டப்படுவீர்கள்” என்றான் சுப்பிரமணியம்.

அப்போது கெங்காதரன் எழும்பி வந்தான். அவனது முகம் வீங்கியிருந்தது. கண்கள் சிவந்து தாண்டிருந்தன; ‘‘உன்னுடைய கோலத்தைக் கண்ணாடியில் ஒருமுறை பார். முகமெல்லாம் வீங்கிக் கிடக்கு. கொஞ்ச நாட்களுக்காவது குடியை நிறுத்து. உனது குடியால் உனது உடம்பு மட்டுமல்ல உனது குடும்பத்தின் எதிர்காலமே அழிந்து விட்டது. உனது மூத்தமகளின் திருமணம் குழம்பி விட்டது. உனது மாமனார் நீ பிரச்சினைப்படாமல் வீட்டில் இருந்து குடிக்கச் சொல்கிறார். உனது கஷ்டம் கவலைகளுக்காக எத்தனை பேரை நீ வருத்துகிறாய். எனக்கு கஷ்டம், கவலை, பிரச்சினைகள் வந்த போது வீட்டாரின் அன்பும் அரவணைப்பும் தான் அவற்றைத் தீர்த்து வைத்தது. கொஞ்ச நாட்களுக்குக் குடும்பத்தை நேசி; பிள்ளைகளைக் கவனி, எல்லாக் கஷ்டமும் போய்விடும். நீ நினைத்து ஏங்குவது ஒரு குலமகளை அல்ல விபச்சாரியை. அந்த விபச்சாரியின் மேல் வைத்த பாசத்தை உனது மனைவியின் மீது வைத்துப் பார். உனது வாழ்வு இனிக்கும். இனிக்க இனிக்கப் பேசியவள், நீ வீதியில் விழுந்து கிடக்கும் போது தான் புதிதாகப் பிடித்தவனுடன் உல்லாசமாகச் செல்கிறாள். அத்துடன் கேலி பண்ணிச் சிரிக்கிறாள். இதை ஏன் நீ உணர்கிறாய் இல்லை’’ என்று கேட்டான் நவராசா.

‘‘உண்மைதான் நவம். நான் துன்பப்பட அவள் இன்பத்தை அனுபவிக்கிறாள். எனது செயல்களால் எனது பிள்ளைகளின் எதிர்காலம் பாழாகி விட்டது. இனிமேல் நான் குடிக்க மாட்டன்.

இது சத்தியம். நவம், அவள் நல்லதொரு புரிசனை விட்டு விட்டு என்னைப் பிடிக்கும் போதே அவள் என்னையும் விட்டு விட்டு இன்னொருவனைப் பிடிப்பாள் என்று எனக்குத் தெரியும். அவள் என்ன குலமகளா…? விபச்சாரி. என்னுடன் என்னென்ன கதைத்தாளோ என்னென்னோ செய்தாளோ அதெல்லாம் இன்னொருவனுடன் செய்ய மாட்டாள் என்று எப்படி நம்புவது? அவளுடன் நான் தொலைபேசியில் பேசும் போதே அவளின் குரல், சிரிப்பு, பேசும் தன்மை போன்றவற்றில் இருந்து அவள் என்ன செய்கிறாள் என்று எனக்குத் தெரியும். ஒருநாள் நான் அவளது வீட்டுக்குச் சென்றபோது வீடு பூட்டப்பட்டிருந்தது. நான் வீட்டுக்கு வந்து தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது அவள் தான் குளித்துக் கொண்டிருந்தேன் என்று சொன்னாள். அவள் விபச்சாரி. எதுவும் செய்வாள். அதனால் நான் நம்புவதில்லை. அந்த நேரம் இன்னொருவனுடன் சல்லாபித்திருப்பாள். நம்புவது போல நடித்தேன். தேவையான போது சுட்டிக் காட்டிக் கதைப்பேன். அவள் சிரிப்பாள். அவள்மிகவும் கைதேர்ந்த விபச்சாரி. அதனால் நான் சொல்வதை நீ நம்பு'' என்றான் கெங்காதரன்.

''எனக்கு உனது வார்த்தைகளில் நம்பிக்கையில்லை. செயலில் காட்டு. கள் குடிப்பவன் நான் கள் குடிக்க மாட்டேன் என்று அடிக்கடி கூறுவான். ஆனால் அவன் குடித்து விட்டு குடிக்காதவன் போல நடந்தாலும் அவனது உள்ளத்தில் ஒளித்திருக்கும் இரகசியங்கள் தானே வெளிப்பட்டு விடும். அதனால் நான் கண்டு பிடித்து விடுவேன்.'' என்றான் நவராசா.

“நான் குடிக்க மாட்டன். நீ என்னை நம்பு” என்று கூறிவிட்டுச் சுப்பிரமணியம் கொண்டு வந்த தேநீரை வாங்கிக் குடித்து விட்டு “நான் வீட்டுக்குச் சென்று வருகிறேன்” என்று கூறிவிட்டுப் புறப்பட்டுச் சென்றான் கெங்காதரன்.

“சரி.... போயிட்டு வா. பின்நேரம் நல்ல முறையில் சந்தி” என்றான் நவராசா.

அன்று மாலை ஆறு மணிக்கு கெங்காதரன் நவராசாவின் வீட்டுக்கு வந்தான். வந்து பேசாமல் இருந்தான். அதனால் நவராசா மனம் மகிழ்ந்தான்; “இப்படியே இரு. நாலைந்து நாட்களுக்குக் குடிக்காமல் விட்டாயானால் கள்ளை மறந்து விடுவாய்” என்றான் நவராசா.

“கள்ளை மறந்தாலும் என்னால் வசந்தினியை மறக்க முடியாது. அவள் யாரோ ஒருவனோடு மோட்டார் வாகனத்தில் செல்கிறாள். அவளுக்கு எப்போதும் ஆண்பிள்ளை ஒன்று வேண்டும். அவளைப் பற்றி எனக்குத் தெரியும். அவள் விபச்சாரி....” அலட்டிக் கொண்டிருந்தான் கெங்காதரன்.

நவராசாவுக்கு கோபம் வந்தது; “நீ குடித்து விட்டு வந்திருக்கிறாய். எனக்குப் பயந்து அதிகமாகக் குடிக்கவில்லை. நீ குடித்தால் வசந்தினியைப் பற்றிக் கதைக்காமல் இருக்க மாட்டாய். உன்னுடைய உள்ளத்தில் ஒளித்திருக்கும் அவளது நினைவு கள்ளுண்டதும்

தானாக வெளியே வந்து விடும். நீ இங்கே வரவேண்டாம். வெளியே போ'' என்றான் நவராசா.

**928. களித்துஅறியேன் என்பது கைவிடுக; நெஞ்சத்து ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.**

கள்ளைக் குடிப்பவன், 'நான் ஒருபோதும் கள் குடிப்பவன் அல்லன்' என்று சொல்வதை விட வேண்டும். ஏன்எனில் அவனது நெஞ்சில் ஒளித்திருக்கும் குற்றங்கள் கள்ளுண்டதும் தானாக வெளிப்பட்டு விடும்.

## தீ விளக்கு

''நவம், கோபித்துக் கொள்ளாதையடா. நான் முன்பு போலக் குடிக்கவில்லை. கொஞ்சமாகத்தான் குடித்தேன். நீ சொன்னதைப் போல கள்ளுக் குடித்ததும் மனதில் ஒளித்திருந்தவையெல்லாம் வெளிப்பட்டு விட்டன. கள்ளுக் குடிக்காவிட்டால் மனதில் ஒளித்திருப்பவை வெளியே வரமாட்டாது. குடித்ததும் அவை வெளிப்பட்டு விட்டன. என்னை வெறுக்காதையடா. நீதான் எனது ஒரே ஒரு நண்பன்'' கெஞ்சினான் கெங்காதரன்.

''நான்தான் உனது ஒரே ஒரு நண்பன். அதனால்தான் நீ செய்யும் பழிகள் யாவும் எனது தலையில் பொறிகின்றன. எனது அம்மா உன்னோடு சேர்ந்து நானும் குடிக்கிறேன் என்று கவலைப்படுகிறா. பெற்ற தாயை வருத்துவதைப் போன்றதொரு கொடிய செயல் உலகில் எதுவும் இல்லை. நான் குடித்து விட்டு ஏச்சு வாங்கினால்

பரவாயில்லை. உன்னோடு திரிவதாலும் முன்பு நான் உன்னுடன் சேர்ந்து குடித்ததாலும் அவா சந்தேகப்படுகிறா. அதனால் எனக்கு கவலையாக இருக்கிறது. நேற்று அடிக்காத குறை. அதைவிடக் கதிரேசப்பு என்னை நம்புகிறார் இல்லை. குடிப்பதால் உண்டாகும் தீமைகளைப் பற்றி அடிக்கடி எனக்கு உபதேசிக்கிறார். அதன் அர்த்தம் என்ன தெரியுமா…? வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும், “நீயும் குடிக்கிறாய்” என்று அவர் சொல்லாமற் சொல்கிறார். இதெல்லாம் எனக்கு வேண்டுமா..? நீ இனிமேல் இங்கே வராதே. உன்னை நான் கெஞ்சிக் கேட்கிறேன்” கலங்கினான் நவராசா.

“நீ வரவேண்டாமென்றால் நான் நஞ்சருந்திக் தற்கொலைதான் செய்ய வேண்டும்”

“இப்ப என்ன அமிர்தமா குடிக்கிறாய்? நஞ்சைத்தானே கொஞ்சம் கொஞ்சமாகக் குடிக்கிறாய். ஒன்றாகக் குடித்து விடு. அதனால் உனது குடும்பத்தினருக்கும் நன்மை உண்டாகும். எனக்கும் தொல்லை தீரும்.”

“அப்படிச் சொல்கிறாயா…? இப்படிச் சொல்ல உனக்கு எப்படி மனம் வந்தது?” அழுதான் கெங்காதரன்.

“உன்னுடைய நடத்தையைப் பார்த்தால் யாரும் அப்படித்தான் சொல்வார்கள். நீ மனிதனா….? உனக்கு உனது மனைவியும் பிள்ளைகளும் என்ன கொடுமை செய்தனர்? ஏன்

அவர்களைத் தண்டிக்கிறாய். உனது மூத்த மகளைப் பார். இளைய மகளைப் பார். இரண்டும் கவலைகளால் சாப்பிடாமல் உருக்குலைந்து போயிருக்கிறாாகள். நான் உனது இளைய மகளுடன் கதைத்தனான். அவள், “எனது பல்கலைக்கழகக் கல்வி பாழாகிவிட்டது. இனி நான் வாழ்ந்து பிரயோசனமில்லை” என்கிறாள். அந்தச் சின்னஞ் சிறுபாலன் சாவதை விட நீ சாவது நல்லது” என்றான் நவராசா.

கெங்காதரன் பேசாமல் இருந்தான். அவனது முகத்தில் எந்த விதமான மாறுதல்களும் ஏற்படவில்லை; “நீ வீதிகளில் மட்டுமா கலாட்டாச் செய்கிறாய். வீட்டிலும் யாரையும் நிம்மதியாக இருக்க விடுகிறாய் இல்லை. நீ வீட்டுக்குச் சென்றால் உனது மனைவியும் பிள்ளைகளும் வீட்டைவிட்டு வெளியேறி அடுத்தவர்களது வீடுகளிலும், மரங்களுக்குக் கீழும் படுக்கிறார்கள். வசதிகள் பல இருந்தும் அனாதைகள் போல இரவைக் கழிக்கிறார்கள். இப்படி நீ வாழ்வதிலும் பார்க்க இறக்கலாம்” என்றான் நவராசா.

“நான் குடும்பத்தினருக்கு அளவுக்கதிகமான பல துன்பங்களைக் கொடுத்து விட்டேன். இனிமேல் நான் அப்படி நடக்க மாட்டேன்.” என்றான் கெங்காதரன்.

“இப்படி எத்தனை தடவைகள் நீ சொல்லியிருப்பாய். நேற்றும் குடிக்க மாட்டன் என்று சொன்னனீ. இப்ப அதை மறந்து குடித்து விட்டு வந்திருக்கிறாய். கள்ளுண்ட மயக்கத்தில் இருப்பவனை அது தவறானது என்று கூறி

அவனைத் திருத்தும் முயற்சி சரி வராது. அது நீருக்குள் மூழ்கியவனைத் தீப்பந்தம் கொண்டு தேடுவதைப் போன்றது. நீ இங்கு வர வேண்டாம். போ'' என்று கடுமையாகச் சொன்னான் நவராசா.

கெங்காதரன் சில நிமிடங்கள் பேசாமல் இருந்தான்; ''எதைச் சொன்னாலும் அதை நவராசா நம்பமாட்டான்'' என்று கெங்காதரனுக்குப் புரிந்தது. அத்துடன் தான் அவனுடன் சேர்வதால் அவனுக்கு ஏகப்பட்ட பிரச்சினைகள் வருகின்றன என்றும் அவனுக்குத் தெரியும். கதிரேசன் ஒரு நாள் அவனை வீதியில் கண்டு சொன்னார்; ''நீ குடித்து அழிந்து போ. ஏன் எனது பேரனது வீட்டுக்குச் செல்கிறாய்?நீ அங்கு போவதால் அவனுக்கு ஏராளமான பிரச்சினைக்ள வருகின்றன. உனக்கு வெட்கம், ரோசம், மானமில்லை. குடித்தால் அரையில் துணியும் இராது. அப்படியானவன் நீ. அதனால் அவன்ரை வீட்டை போகாதே''

நவராசாவின் தாயும் அவனைக் கண்டால் ஏசுவாள். அதனால் கெங்காதரன் மெல்ல எழுந்துசென்றான். தான் சென்றால் நவராசா கூப்பிடுவான் என்று நினைத்தான். நவராசா கூப்பிடவில்லை. அதனால் கவலையுடன் நடந்தான்.

**929. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்**
**குளித்தானைத் தீத்துரீஇ யற்று.**

கள்ளுண்டு மயங்கி இருப்பவனுக்குப் புத்திமதிகள் கூறி அவனைத் திருத்த

மேற்கொள்ளும் முயற்சி, நீருக்குள் மூழ்கியவனைத் தீவிளக்குக் கொண்டு தேடுவதைப் போன்றது.

## எண்ணிப்பார்

மறுநாள் மாலை கெங்காதரன் நவராசாவின் வீட்டுக்கு வந்தான். அவனைக் கண்ட நவராசா திகைத்துப் போனான். நெற்றி நிறைய வீபூதி பூசி, சந்தணப் பொட்டு வைத்து, காதில் பெரியதொரு செவ்வரத்தம் பூ வைத்தபடி வந்த கெங்காதரனை அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டு நின்றான் நவராசா.

"என்ன நவம் திகைத்துப் போய் நிற்கிறாய். நேற்று நான் பெரிதாகக் குடிக்கவில்லை. நீ வீட்டுக்கு வரவேண்டாமென்று கூறியபின் நேரே சுவாமியாரிடம் சென்று அவரது பாதத்தைப் பிடித்து அழுதேன். அவர் ஆறுதல் வார்த்தைகள் கூறி என்னைக் காலையில் வரச் சொன்னார். காலையில் தோய்ந்து விட்டுச் சென்று அவருடனேயே இருந்தேன். பகல் உணவையும் அவரே தந்தார். இனி ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்ததும் மகா கணபதி ஆலயத்திற்குச் செல்லப் போகிறேன். அங்கு சென்றால் மனதிற்கு நிம்மதியாக இருக்கிறது. எனது மூத்த மகளும் மனைவியும் நான் கோயிலில் இருப்பதை அறிந்து அங்கு வந்து கண்ணீர் விட்டு அழுதனர். அவர்கள் சொல்வதை நினைக்க எனக்குத் துக்கமாக இருக்கிறது" என்றான் கெங்காதரன்.

“இப்ப வசந்தினியின் நினைவு வருவதில்லையா…?”

கெங்காதரன் சிரித்தான். அந்தச் சிரிப்பில் பூரண மகிழ்விருந்தது; “அவளைப் பற்றி எனக்கு நினைவுபடுத்தாதே. அவள் விபச்சாரி. பொருள் கொடுப்பவனுக்குச் சுகத்தைக் கொடுப்பவள். நீ சொன்னது போல அவளோடு கொள்ளும் உறவு பிணத்தோடு கொள்ளும் உறவைப் போன்றது” என்றான் கெங்காதரன்.

“என்னை அவசரமாக வரும்படி துர்க்கா தொலைபேசியில் சொன்னாள். வா போய்விட்டு வருவோம்” என்றான் நவராசா.

இருவரும் மோட்டார் வண்டியில் புறப்பட்டனர். சந்தியில் பலர் கூடி நின்றனர். நவராசா வண்டியை நிறுத்திவிட்டு இறங்கினான். கெங்காதரனும் இறங்கி வந்தான். நிலத்தில் குப்புற ஒருவன் படுத்துக் கிடந்தான். அவன் கட்டியிருந்த வேட்டி சிறிது தூரத்தில் இருந்தது. மக்கள் அவனைக் கவனிக்காது சென்று கொண்டிருந்தனர். கெங்காதரன் தூர இருந்த வேட்டியை எடுத்து நவராசாவின் துணையோடு நிலத்தில் கிடந்தவனுக்குக் கட்டினான். அது கிருஷ்னன்.

“வா போவம்” என்றான் நவராசா. கிருஷ்னனை அந்த இடத்தில் அந்த மாதிரி விட்டு விட்டுச் சொல்லக் கெங்காதரன் விரும்பவில்லை.

“வா போவம்” என்று மீண்டும் சொன்ன நவராசா மோட்டார் வாகனத்தில் ஏறி இருந்து

அதை இயக்கினான். கெங்காதரன் கவலையுடன் வந்து மோட்டார் வண்டியில் ஏறினான். மோட்டார் வண்டி சிறிது தூரம் சென்றதும் செங்காதரன் சொன்னான்; "கிருஷ்னனை அப்படியே விட்டு விட்டு வர உனக்கு எப்படி மனம் வந்தது?"

"தினமும் அவன் குடித்து விட்டுத் துணிமணியில்லாமல் விழுந்து கிடப்பான். அவனைத் தூக்கிக் கொண்டு திரிவதா எனது வேலை?. அத்துடன் மதிப்பின்றி வாழ்பவர் களுடன் நட்பு வைப்பது கேவலமானது. இன்று நீ கிருஷ்னன் குடித்து விட்டு விழுந்து கிடக்கும் கோலத்தையும், பக்கத்தில் நின்ற மக்கள் பேசிய பேச்சையும் கேட்டாய் தானே. அவன் துணியில்லாமல் கிடந்த கோலத்தை நினைக்க வயிற்றைப் புரட்டுகிறது. அன்று என்னுடன் நீ வந்தமையாலும், நீ துர்க்காவின் பெயரைச் சொல்லிப் புலம்பியமையாலும் தான் உன்னைத் தூக்கி வந்தேன். இனிமேல் நீ துணி மணியில்லாமல் விழுந்து கிடந்தால் உன்னையும் விட்டு விட்டுத்தான் வருவேன். நீயும் குடித்து விட்டு இந்த நிலையில் தான் கிடந்தனி. அதை எண்ணிப் பார்" என்றான் நவராசா.

அவர்கள் துர்க்காவின் வீட்டுக்குச் சென்ற போது துர்க்கா வியப்புடன் கெங்காதரனைப் பார்த்துக் கொண்டு நின்றாள். அவளால் கெங்காதரனின் உருவ அமைப்பைப் பார்க்க முடியவில்லை. அவள் இன்றுதான் அவனின் நெற்றியில் திருநீற்றையும் சந்தணப் பொட்டையும் காண்கிறாள்.

“இப்படியே இருங்கோ. நீங்கள் இப்படி இருப்பதைக் கண்டு எனக்கே மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கு. உங்கள் மனைவியும் பிள்ளைகளும் கண்டால் எவ்வளவு சந்தோஷப்படுவார்கள். இருங்கோ தேநீர் கொண்டு வருகிறேன்” என்றாள் துர்க்கா.

இருவரும் இரவு ஒன்பது மணிக்குப் புறப்பட்டனர். வாசல்வரை வந்த துர்க்கா சொன்னாள்; “இப்படியே நீங்கள் வாழப் பழகுங்கள்; விடிந்ததுதம் மகா கணபதி அலயத்திற்குச் செல்லுங்கள். ஆலயத்தில் இருந்ததால் எந்தக் கெட்ட எண்ணங்களும் உங்களுக்கு வராது”

“சரி. அப்படியே செய்கிறேன். பாருங்கோ நான் குடிக்காமல் இருந்து காட்டுறன்.” என்றான் கெங்காதரன்.

“அப்படிச் செய்தால் மகா கணபதிக்கு நான் ஓர் அபிஷேகம் செய்வேன்” என்றார் துர்க்கா.

---

**930. கள்உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்**
**உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.**

---

ஒருவன் தான் கள் உண்ணாத போது கள்ளுண்டு மயங்கிக் கிடப்பவனைக் கண்டு, நானும் கள்ளுண்டால் இந்நிலைக்குத் தானே வருவேன் என்பதை எண்ணிப் பார்க்க மாட்டானோ?.